KALKI 23.12.2007 ரூ.8.00 80 பக்கங்கள்

கல்கி

குடும்பத்துடன் படிக்க...





ஒரு கலாட்டா சந்திப்பு!



கல்கி

23.12.2007



சீசன் 'சிச'ப்பிதழ்





இழந்துகொண்டிருக்கும்...



''அன்மையில் பரம்பரா அமைப்பின் சார்பில் மியூசிக் அகாடமியில் நடந்த வயலின் மேதை டி.என்.கிருஷ்ணனின் கச்சேரிக்குச் சென்றிருந்தேன். கச்சேரியின் ஸ்பெஷாலிடியே டி.என். கிருஷ்ணனின் குடும்பத்தைச் சேர்ந்த ஏழெட்டு பேர் ஒன்று சேர்ந்து வயலின் விருந்து அளித்தார்கள் என்பதுதான். குறிப்பாக, டி.என். கிருஷ்ணன் கர்னாடிக் மியூசிக்கும்; அவரது சகோதரி இந்துஸ்தானி மியூசிக்கும். இரண்டு பேரும் சேர்ந்து ஜுகல்பந்தி நடத்தினார்கள் பாருங்கள்! வயலின் அவர்கள் சொன்னபடியெல்லாம் கேட்டது. அந்த ரசனை, அரங்கம் நிரம்பிய பார்வையாளர்களுக்கும் பரவிவிட்டது. நிகழ்ச்சி முடிந்து வீடு திரும்பும்போது, இந்தக் காலத்து இளைய தலைமுறையினர் அற்புதமான விஷயங்கள் பலவற்றை இழந்து கொண்டிருக்கிறார்கள் என்று தோன்றியது'' என்று சிலாகித்துச் சொல்லுகிறார் நடிகர் பிரசாந்த்.

''உங்களுக்கு இசை மீது எப்படி ஆர்வம் ஏற்பட்டது?'' என்று பிரஷாந்திடம் கேட்டபோது, ''என்னுடைய அம்மா ஒரு வீணைக் கலைஞர். என் அப்பா, எனக்கு ஐந்து வயதில் பியானோவை அறிமுகப் படுத்தினார். எட்டு வயதில் நான் வயலின் கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். பன்னிரண்டு வயதில் மிருதங்கம் கற்றுக்கொண்டேன். இவை மட்டுமா? பரத நாட்டியத்தையும் நான் விட்டு வைக்கவில்லை. இவையெல்லாம்தான் எனக்குள் இசையார்வத்தை வற்றவிடாமல் செய்கின்றன.

எனக்கு எப்போதுமே ஃப்யூஷன் இசை மீது அதிக ஆர்வம் உண்டு. நான் பியானோ வகுப்பில், சில கர்நாடக டியூன்களை வாசித்தால், 'இது என்ன புதுசா இருக்கு?' என்று கேட்பார் பியானோ ஆசிரியர். வயலினில் சில மேற்கத்திய சங்கதிகளை வாசித்தால், 'இதை எங்கே கற்றுக்கொண்டாய்?' என்று வயலின் குரு கேட்பார். இதில் சந்தோஷமான விஷயம் என்னவென்றால், எனக்கு அமைந்த ஆசிரியர்கள் என் விருப்பப்படி, நான் புதுசாய் செய்த முயற்சிகளுக்குத் தடை போடாமல் ஊக்குவித்தார்கள்'' என்கிறார்.

நேரமில்லாத காரணத்தால் நிறைய

ச்சேரிகளுக்குப் போக முடிவதில்லை. சமீபத்தில் ான் மிகவும் ரசித்த டி.என். கிருஷ்ணன் கச்சேரி ாதிரியான, பெரிய வித்வான்களின் கச்சேரிகளை ாவது மிஸ் பண்ணக் கூடாது என்று நினைத்துக் காண்டிருக்கிறேன். சில இளைய தலைமுறைக் லைஞர்கள் திறமையுடன் மிக நன்றாகக் கச்சேரி செய்கிறார்கள். ஆனால், பார்வையாளர்களில் இளைஞர்களை அரிதாகவே பார்க்க முடிகிறது. அவர்களிடம்

ஐந்து வயதில் பியானோவை அப்பா அறிமுகப்படுத்தினார். எட்டு வயதில் வயலின்... பன்னிரண்டு வயதில் மிருதங்கம்...

பாரம்பரியம் மிகுந்த நம் கர்நாடக இசையை எடுத்துக் கொண்டுபோக முயற்சிகள் செய்தாக

இளையதலைமுறை!

–பிரசாந்த் கவலை

வேண்டியது அவசியம். அதேபோல, இந்தக் கச்சேரிகளுக்கெல்லாம் நதி மூலம் தஞ்சை மண். அங்கேயும் மதுரை, கோவை, திருச்சி... போன்ற தமிழகத்தின் மற்ற பெரிய ஊர்களிலும் இசை விழாக்கள் நடத்தலாம். சுற்றுலாத்துறை, ஆண்டு தோறும் மாமல்லபுரத்தில், நாட்டியக் கலை விழா நடத்துவதைப் போல, சென்னையிலே 'சென்னை சங்கமம்' நடத்தியதைப் போல இந்த ஊர்களி லெல்லாம் பாரம்பரிய இசை, நாட்டிய, கிராமப் புறக் கலை விழாக்களை நடத்தினால் மிகவும் நன்றாக இருக்கும்'' என்கிறார் நடிகர் பிரசாந்த்.

சந்திப்பு: **மௌலி**

படம் : **ஸ்ரீஹரி**

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 440/-
ஆறு மாதம் : ரூ. 220/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ்.டாலர்

Bharathan Publications Private Limited.
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.



முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம், அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில், டெக்ஸ்டைல் துறையில் ஒரு நிகழ்ச்சிக்கு வந்தவர், திடுக்கிட்டு நிற்கிறார். எதிரே பாடகி சுதா ரகுநாதன்!

சுதா : வணக்கம், டாக்டர் கலாம் சார். புதுப் புது டிசைன்ல எப்படி சேலை நெய்யலாம்னு ஒரு நிகழ்ச்சி. அதைப் பத்திரிகையாளர்களுக்கு அறிமுகம் பண்ணணும்னாங்க. அதான் வந்தேன்.

கலாம் : புடைவைக்கு எல்லாம் விளம்பரம் பண்றீங்களே, பொருத்தமாத்தான் கூப்பிட்டிருக்காங்க உங்களை... ஆமா, இந்த நிகழ்ச்சியிலே 'எந்தரோ மகானுபாவுலு' பாடுவீங்களா?





சுதா : இல்லே சார். இதை முடிச்சிட்டு அடுத்த நிகழ்ச்சிக்கு ஓடணும். என் ரசிகர்கள் 'டபிள்யூ டபிள்யூ டபிள்யூ சுதா ரகுநாதன் ஃபேன்ஸ் டாட் காம்'னு ஒரு வெப்சைட் தொடங்கி வைக்கணும்னு கேட்டுட்டிருக்காங்க

கலாம் : ஆமா, நீங்க கடைசியா எந்தக் கச்சேரில 'எந்தரோ மகானுபாவுலு' பாடினீங்கன்னு சொல்ல முடியுமா?

சுதா : நினைவில்லே சார். மாசத்துல இருபது கச்சேரி பண்றேனா, எதுல பாடினேன்னு சட்டுன்னு நினைவுக்கு வரமாட்டேங்குது. ஆமா, விண்வெளில போறபோது, டேப்போ, சி.டி.-யோ போட்டுக் கேட்டுக்கிட்டே போக முடியுமா?

கலாம் : அடுத்த தடவை ஸ்ரீஹரிகோட்டாவோ, திருவனந்தபுரமோ போறபோது விசாரிக்கறேன். ஆனா, அப்படியே போட வசதி இருந்தாலும், உங்க டேப், சி.டி. எல்லாம் அதுல போட மாட்டாங்க.

சுதா : ஐயையோ, அப்படி நான் என்ன தப்பு பண்ணிட்டேன்?

கலாம் : விஞ்ஞானிங்க உங்க பாட்டைக் கேட்டு மயங்கிப் போயிட்டா, வேலை எல்லாம் நின்னு போயிடுமே!

சுதா : அப்பாடா! என்னமோ ஏதோன்னு பயந்துபோயிட்டேன். சார், நீங்கதான் வீணை வாசிப்பீங்களே, சென்ல எந்த சபாவும் கச்சேரி பண்ண உங்களைக் கூப்பிடலையா?

கலாம் : எல்லா சபாவும் என்கிட்டே டேட் கேட்க நான் என்ன சுதா ரகுநாதனா? ஆமா, கடைசியா 'எந்தரோ மகானுபாவுலு' பாடினதைச் சொல்லலியே நீங்க.

சுதா : அது இருக்கட்டும், சார். நீங்க சபாவுல வீணை வாசிக்கணும்னா சொல்லுங்க. நான் ஏற்பாடு பண்றேன். என்னோட ஒரு ப்ரோகிராமை

ஒரு கலாட்டா

கற்பனை ஸ்டோரி

வேணா குறைச்சுக்கிட்டு உங்களுக்கு சான்ஸ் கொடுத்துடறேன், அவ்வளவுதான்!

கலாம் : அதெல்லாம் ரொம்பத் தப்பும்மா. நானே ஏதாவது ஒரு சபாவுல போய், செக்ரடரியப் பார்த்து ஒரு சான்ஸ் கேட்டா கொடுக்க மாட்டாரா என்ன? ஆனா, நான் வீணைல அவ்வளவு பெரிய எக்ஸ்பர்ட் இல்லியே!

சுதா : அதெல்லாம் ஒண்ணும் பெருசா வாசிக்கத் தெரிய வேணாம் சார். உங்க பேரைப் போட்டுட்டாலே கூட்டம் பிச்சுக்கிட்டுப் போயிடும்.

கலாம் : 'சபாவைவிட்டா?

சுதா : கிண்டல் இல்லே சார். நீங்களே எவ்வளவு பாட்டு எழுதியிருக்கீங்க! அன்னிக்கு உன்னிகிருஷ்ணன் 'அன்னையே, அன்னையே'ன்னு உங்க பாட்டைப் பாடினப்ப, உங்க கண்ணுல தண்ணி வந்துட்டுதே, கவனிச்சேன். நானே உங்க பாட்டைப் பாடியிருக்கேனே. 'யாழ் இசையிலிருந்து பிறந்த இறை இசை?'ன்னு. உங்க பாட்டை எல்லாம் நீங்க வீணைல வாசிச்சாலே போதுமே, ஒரு ப்ரோகிராமை முடிச்சுடலாம். சுப்புடு சார்கூட இல்லியே, என்ன சார் பயம்?

கலாம் : சரியாப் போச்சு. சுப்புடு என் நண்பர் ஆச்சே? நான் கல்யாணிய காம்போதி மாதிரி வாசிச்சாகூடப் பிரமாதம்னு எழுதிடுவார். உங்களைப் பத்தி ஒகோன்னு எழுதினாரே நினைவில்லே? தனியா ஒரு தீவுல அவரை விட்டுட்டா, 'சுதா ரகுநாதன் ஆடியோ கேசட் மட்டும்தான் எடுத்துட்டுப் போவேன்'னு எழுதியிருக்காரே!

சுதா : அவர் பெரிய க்ரிட்டிக் மட்டுமில்லே சார்; பெரிய ரசிகர். நீங்க யாரோட வீணையை ரசிப்பீங்க?

கலாம் : நான் அந்த சரஸ்வதி தேவியோட வீணை தவிர, எல்லார் வீணையையும் ரசிப்பேன். ஏன்னா சரஸ்வதி தேவி வீணை வாசிக்கக் கேட்டதில்லே... ஆமா புடவைக் கடை விளம்பரம் மட்டும்தான் செய்யறீங்க. கட்டை விரல் தவிர பாக்கி எட்டு விரல்லயும் மோதிரம் போட்டிருக்கீங்களே, நகைக் கடைக்காரங்க யாரும் அப்ரோச் பண்ணலியா?

சுதா : சார், ரொம்பவே கிண்டல் பண்றீங்க! பாடும்போது குரலை உசத்த முடியுதோ இல்லியோ, கையை அடிக்கடி உசத்தி உசத்தித்தானே பாட வேண்டியிருக்கு? அப்போ வெறும் விரலை விசிறிங்க பார்த்தா நல்லா இருக்காதேன்னுதான்...

கலாம் : யு ஆர் ரைட். மேடைக்கு வர்ற கலைஞர்கள் ரொம்பவே ஆடம்பரமா டிரஸ் பண்ணிட்டு வந்து பாடறாங்கன்னுகூட ஒரு பேச்சு வந்துதே? நோ... நோ... நான் உங்களை பர்ட்டிக்குலரா சொல்லலே...

சுதா : அதுல என்ன சார் தப்பு? மூணு மணி நேரம் ஆடியன்ஸுக்கு எதிரே ஆடாம அசையாம உட்கார்ந்து பாடியாகணும்ங்கிற போது, பழைய புடைவையக் கட்டிக்கிட்டுக் கழுத்துல கைல எதுவும் போடாம...

கலாம் : விரலை விட்டுட்டீங்களே?

சுதா : ஆமா... பார்க்க



சந்திப்பு!

நல்லாவா இருக்கும்? பளிச்னு இருந்தா அது ஒரு தப்பா சார்? பாட்டுல குறை கண்டு பிடிக்க முடியாதவங்கதான் 'பட்டு கட்டிக் கிட்டு வந்தா, பவழம் போட்டுக்கிட்டு வந்தா'ன்னு எழுதறாங்க. உங்களையே எடுத் துக்குங்க. தோனி ஹேர் ஸ்டைல் பாப்புலர் ஆகறதுக்கு முன்னால், உங்க ஹேர் ஸ்டைல் பத்தித்தானே எல்லாரும் பேசினாங்க? அதுக்காக நீங்க ஹேர் ஸ்டைலை மாத் திக்கலியே?

கலாம் : அது எப்படி மாத்த முடியும்? அதை விடுங்க... சினிமாவுலகூட உங்களைப் பாட வச்சுட்டாங்களே?

சுதா : எங்க குரு எம்.எல்.வி. அம்மாகூட சினிமாவுல நிறையப் பாடியிருக்காங்களே? அதுல பாப்புலாரிட்டி கிடைக்கும்தான். ஆனா, அதுலயே போய்ட்டா கச்சேரி காய்ஞ்சு போயிடும். நான் ரொம்ப ஜாக்கிரதையாத் தான் சார் இருக்கேன்.

கலாம் : எது சரியோ அதைச் செய்யுங்க. எது நடந்ததோ அது நன்றாகவே நடந்த துன்னு எடுத்துக்குங்க.

சுதா : சார், எது உங்களுக்குப் பிடிச் சிருக்கு - விஞ்ஞானியா ஆராய்ச்சி பண்றதா, இல்லே ஸ்கூல் - காலேஜ்ல மாணவர்



களோட இன்டராக்ட் பண்றதா?

கலாம் : நிச்சயமா மாணவர்களோட பேசறதுதான். அவங்கதான் இந்தியாவோட எதிர்காலம். அரசியல்வாதிங்ககிட்ட 'கனவு காணுங்க'ன்னா படுத்துத் தூங்கிக் குறட்டை விட ஆரம்பிச்சுடறாங்க... ஆமா, உங்களுக்குச் சமீபத்துல கிலோன்ல பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் கொடுத்திருக்காமே? கங் கிராட்ஸ். ஸோ, நீங்க சாதாரண சுதா ரகு நாதன் இல்லே. டாக்டர் சுதா ரகுநாதன்.



சுதா : சார், உங்களுக்குக் கிடைச்சிருக்கற ஏராளமான பட்டங்களைப் பார்க்கறப்ப, இது ரொம்பச் சாதாதான் சார்... உங்களுக்கு 'பாரத ரத்னா' விருது கிடைச்சப்போ எம்.எஸ். அம்மாவுக்கும் கொடுத்தாங்க இல்லியா? அவங்க பக்கத்துல உட்கார்ந்து என்ன பேசினீங்க?

கலாம் : அடுத்த தடவை உங்களை மீட் பண்றபோது வீணைல 'எந்தரோ மகானுபாவுலு'வை நல்லா வாசிச்சுக் காட்டறேன்னு அவங்ககிட்ட சொன்னேன். ரொம்பச் சந்தோஷப்பட்டாங்க. ஆமா, டாக்டர் சுதா ரகுநாதன்...

சுதா : சார், டாக்டர் கிட்டரெல்லாம் வேணாம் சார்... என்னவோ சொல்ல வந் தீங்களே?

கலாம் : அதான்... 'எந்தரோ மகானு பாவுலு' கடைசியா எப்பப் பாடினீங் கன்னு...

சுதா : இதோ, ஒரே நிமிஷத்துல டயரியப் பார்த்துச் சொல்றேன் சார்! (கார் பார்க்கிங் நோக்கிப் பாய்ந்து சென்று மறைந்துவிடுகிறார்.)

கலாம் : டாக்டர்... டாக்டர் சுதா ரகுநாதன்... ஏன் எல்லாரும் நான் 'எந்தரோ மகானுபாவுலு'ன்னு ஆரம்பிச்சாலே இப் படித் தலைமறைவாயிடறாங்க? ம்... இந்த உலகத்துலே மகானுபாவன்கள் யாரு? ஒருத்தருமே இல்லியா?

(தலைமுடியை ஒரு கையால் சிலுப்பி விட்டுக்கொண்டு மெதுவாக அறை நோக்கி நடக்கிறார்.)

கற்பனை : **சித்தார்த்**

அட்டைப் படம் : **யோகா**



பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கு

யுவஸ்ரீ கலா பாரதி விருது

மதுரை பாரதி யுவ கேந்திரா சார்பில் இசை, படிப்பு, ஓவியம், சமூகப்பணி, பரதநாட்டியம், பேச்சு, கவிதை, விளையாட்டு ஆகிய துறைகளில் ஏதேனும் ஒரு துறையில் சிறந்து விளங்குகிற L.K.G முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவியருக்கு **'யுவஸ்ரீ கலா பாரதி'** என்ற விருதினையும் கல்லூரி மாணவ மாணவியருக்கு **'சுவாமி விவேகானந்தர்'** விருதினையும் ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட வாரியாக வழங்கி வருகிறோம். ஒவ்வொருவருக்கும் வெள்ளிக்கேடயம் மற்றும் விருதுக்கான பெரிய அளவிலான பட்டயமும், ஸ்படிக மாலையும் வழங்கப்படும்.

தமிழ்நாடு, பாண்டிச்சேரி மற்றும் பெங்களூர் மற்றும் திருவனந்தபுரத்திலுள்ள அனைத்து மாவட்டத்தைச் சார்ந்த பள்ளி மாணவ, மாணவியருக்கு இவ்விருது வழங்கும் நிகழ்ச்சி அந்தந்த மாவட்டத்தில் நடைபெற உள்ளது.

ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் அந்தந்த பள்ளியைச் சார்ந்த முதல்வர்கள் ஒவ்வொரு வகுப்பில் உள்ள அனைத்து பிரிவுகளில் இருந்தும் முதல் 3 ரேங்க் பெற்ற மாணவ மாணவியர் மற்றும் இசை, UC MAS, ABACUS ஓவியம், சமூகப்பணி, பரதநாட்டியம், பேச்சு, கவிதை, அனைத்து விளையாட்டு, பொது அறிவுத்திறன், யோகா ஆகிய துறைகளில் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் **15** பேர் கொண்ட பெயர் பட்டியலை **நெல்லை பாலு, நிறுவனர்-பாரதி யுவ கேந்திரா, G-28, சாந்தி சதன் குடியிருப்பு, கோச்சடை, மதுரை-16. செல் 94439-30815, 94426 30815.** என்ற முகவரிக்கு ஒவ்வொருவருக்கும் வீட்டு முகவரி, தொலைபேசி எண்ணுடன் கூடிய ரூ.**10** அஞ்சல் தலை ஒட்டப்பட்ட சுய விலாசமிட்ட கவருடன் 30 தினங்களுக்குள் அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தேர்வு செய்யப்பட்டவர்களின் விவரம் அவர்களது வீட்டு முகவரிக்கு அனுப்பப்படும். விருது வழங்கும் விழாவில் அவரவருக்கு எடுக்கப்படும் புகைப்படச் செலவை ஒவ்வொருவரும் கண்டிப்பாக ஏற்க வேண்டும். 100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியரை இவ்விருதுக்கு அனுப்பி வைக்கும் பள்ளிக்கு சிறப்புக் கேடயம் வழங்கப்படும்.

யுவஸ்ரீ கலா பாரதி விருதுக்கு தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள அனைத்து மாவட்ட மாணவ, மாணவியர்கள் மற்றும் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் 80% மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெற்றவர்களும் தாங்கள் பெற்ற பரிசுக்கான ஜெராக்ஸ் பிரதிகளுடன், ரூ 10 அஞ்சல் தலை ஒட்டப்பட்ட சுய விலாசமிட்ட கவருடன் தனியாகவும் இவ்விருதுக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள இசை, பரத நாட்டிய ஆசிரியைகள், ஓவியம், கராத்தே, யோகா மற்றும் UC MAS, ABACUS, HINDI மாஸ்டர்களும் தங்களிடம் பயிலும் சிறப்பானவர்களின் பெயர் பட்டியலையும் அனுப்பலாம்.

மார்கழி மாதத்தை முன்னிட்டு
ஸ்ரீ திருச்சி கல்யாணராமனின் மகாபாரத தொடர் சொற்பொழிவு
நாள் : 16.12.2007 முதல் 27.12.2007 வரை (மாலை 6.30 முதல் 8.30 வரை)
இடம் : ஸ்ரீ காஞ்சி சங்கர மடம், (வடமலையான் ஆஸ்பத்திரி அருகில்), பெசன்ட்ரோடு, சொக்கிகுளம், மதுரை.
அனைவரும் வருக ! அருளமுதம் பெறுக !
ஏற்பாடு, பாரதி யுவ கேந்திரா, மதுரை



ட்ரிபிள் கார்பன்!

ஞாயிறு மாலை என்ற போதிலும், சீனிவாச சாஸ்திரி அரங்கில் கூட்டம் குறைவுதான். ஆனால், வந்திருந்தவர்கள் பெரும்பாலும் சங்கீதத் துறையில் காத்திரமான அந்தஸ்து உள்ளவர்கள்.

சங்கீதமும் காத்திரமாகவே இருந்தது. பெங்களூர் புயல் அம்ருதா வெங்கடேஷ் தமது வெண்கலக் குரலில் அழுத்தம் திருத்தமாகப் பாடிக் கொண்டிருந்தார் - பழைய நாளில் ட்ரிபிள் கார்பன் ஷீட் வைத்து, கொட்டை எழுத்தில் எழுதுவார்களே, அவ்வளவு அழுத்தம்!

சும்மா கையால் கிராஃப் போட்டு குரலால் பம்மாத்து பண்ணாமல், உருட்டல் சங்கதிகளையும் பிருகா பிரயோகங்களையும்கூட ஜல்லிக்கட்டுக் காளையைக் கொம்பில் பிடிப்பதுபோல் பிடித்தார் அம்ருதா வெங்கடேஷ்.



• அம்ருதா வெங்கடேஷ்

ஷண்முகப்ரியாவை ஒட்டப் பிழிந்து ஆலாபனை செய்த பிறகு, 'நீ தய பல்குணா' எடுக்க, அவையில் சிறு சிறு சலசலப்பு. (ஜி.என்.பி. இயற்றிய கீர்த்தனை என்று பின்னர் அறிவித்தார் பாடகி) 'மாதவ ஸோதரி மங்கள காத்ரி'யில் நிரவலை வந்தது வராமல் பாட முடியுமா...? வந்தது வந்தது! ஆனால், மொத்த அனுபவத்தையும் அழகுபடுத்தி தூக்கி நிறுத்தியது மேலக்காவேரி பாலாஜியின் மிருதங்கம் மற்றும் அனிருத் ஆத்ரேயாவின் கஞ்சிரா வாசிப்பு. வயலின் டாக்டர் ஹேமலதா என்பதால், தரமான கூட்டணி அம்ருதாவை ஆதரித்து அடுத்த ஜட்டத்தில் அமர வைத்தது.

'யாரென்று ராகவனை' (யதுகுல காம்போஜி - அருணாசல கவிராயர்) கீர்த்தனையை நிர்வகித்துப் பாடி, நெனருஞ்சராவில் கலர் மத்தாப்பு சங்கதிகள் தூவிக் களித்து, மத்யமாவதியைப் பிரதான ராகமாக வழங்கினார் அம்ருதா. 'அடிகி சுகமு' என்ற தியாகராஜ கீர்த்தனை. ஸ்ரீ ராமனை நிந்தா ஸ்துதி (இகழ்வது போல் புகழ்வது) செய்யும் வார்த்தைகள்! அவற்றின் பாவம் பாடகியின் மிகையான சங்கீத பாவத்தில் தொலையும் அபாயம் தலைதூக்க, தனியாவர்த்தனம் சட்டென்று கைநீட்டிக் காப்பாற்றியது. அம்ருதா விட்ட பாவத்தை அல்லாக்காகப் பிடித்துவிட்டார்கள் பாலாஜியும் அனிருத் ஆத்ரேயாவும். ஒலியைத் துளிக்கூட கூட்டாமல், ஓங்கி வாத்தியத்தை முழக்காமல் அவர்கள் வழங்கிய ஆவர்த்தனம் செவிக்குச் சுகம்!

முழுநிறைவு தரக்கூடிய அம்சங்கள் அம்ருதாவின் சங்கீதத்தில் இருந்த போதிலும் அகாரம் 'எ'காரமாக ஒலிப்பதும், அழகியல் அம்சங்களில் கவனக் குறைவும் உறுத்திய வண்ணம் கூடவே வருகின்றன. அவற்றைச் சீராக்கி வேகத்தைக் குறைத்து விச்ராந்தியைக் கூட்டினால் 'பெங்களூர்ப் புயல்' கர்நாடகத்து மந்தமாருதமாக மாறி இன்பம் சேர்க்கும்.

(சாந்தி ஆர்ட்ஸ் ஃபவுன்டேஷன், 9.12.2007)

பென்ஸில் கோடு!



மதியம் மூன்று மணி. சிவகாமி பெத்தாச்சி அரங்கம். ஜே வரிசை ஓரத்து சீட்டில் பைஜாமா ஜிப்பா அணிந்த பொடியன். அமர்க்களமாகத் தாளம் போட்டுக் கொண்டிருந்தான். மேடையில் ஒலித்த கீர்த்தனை சட்டென்று வேறு நடைக்கு மாறியது. பொடியன் சில கணங்கள் திகைத்துப் போய், தாளம் போடுவதை நிறுத்தினான். பத்து - பதினைந்து வினாடிகளுக்குள் விஷயம் புரிந்து போக, அவன் கை புதிய தத்தகாரத்துக்கு ஏற்ப தாளத்தை மாற்றிப் போட்டது! சின்ன மண்டை ரசித்து ரசித்து ஆடியது!

இந்த மாதிரி கற்பூர புத்தி அமைவது அபூர்வம். அன்று மேடையில் பாடிக்கொண்டிருந்த சுபிக்ஷா ரங்கராஜனிடமும், இதே கற்பூர புத்தி இருப்பது பளிச்சென்று தெரிந்தது. அவரது அம்மா லக்ஷ்மி ரங்கராஜன் ஒரு சீனியர் பாடகி என்கிற பிளஸ் வேறு!

ஆனால், இந்த பிளஸ்கள் பிரதிபலித்தது சுபிக்ஷா கீழ் ஸ்தாயியில் பாடியபோது மட்டுமே. அந்தச் சமயத்தில் காத்திரமாகவும் உணர்ச்சியுடனும் ஒலித்த அவரது குரல், ஏனோ உயரே போகப்போக, பென்ஸிலில் மெல்லிசாகக் கோடு கிழித்தது போல் மங்கியது. இன்னும் மேலே போக, அந்த பென்ஸில் கோடையும் அழித்தது போல் ஆகிவிட்டது! மிருதங்க வித்வான் அர்ஜுன் கணேஷ் வலுவாக ஒரு கோர்வை வாசிக்க, சுபிக்ஷாவின் குரல், அந்த ஒலிக்கு ஈடு கொடுக்க முடியாமல் காணாமலே போய்விட்டது!

இந்தக் காரணத்தால், நல்ல பிடிகளுடன் ஆரம்பித்த ஸாவேரி ஆலாபனை சீக்கிரமே வலுவிழந்தது. 'ஸ்ரீ காமகோடி பீடஸ்திதே' கீர்த்தனையை ஸ்லோ மோஷனுக்கு மாற்றிப் பாடியபோது சுபிக்ஷாவின் சங்கீத ஞானம் குரலின் குறைபாடுகளை ஓவர் டேக் செய்து நின்றது. நிரவலின் போதோ அது மீண்டும் அவர் குரலிடம் தோற்றுப் போயிற்று.

லதாங்கி ஆலாபனை; 'பிறவா வரம் தாரும்' கரஹரப்ரியா - பிரதான ராகம், அதைத் தொடர்ந்து 'பக்கல நிலபடி'... என்று கச்சேரி அமைப்பு சிறப்பாக இருந்தாலும் குரலைக் கொடுக்கும் விதத்தில் குறைபாடும் அனுபவமின்மையும் சுபிக்ஷாவின் முயற்சிகள் சோபிக்க விடாமல் செய்துவிட்டன.

அக்கரை சுவர்ண லதாவின் வயலின் வாசிப்பு ஆறுதல்.

(பிரம்ம கான சபா, 9.12.2007)



தர்மபுரி பஸ் எரிப்பு



நின்று

இதயமுள்ள எல்லோரையும் பதற வைத்த தர்மபுரி பஸ் எரிப்பு வழக்கில், சமீபத்தில் உச்சநீதி மன்றத் தீர்ப்பு வந்திருக்கிறது. நெடு நாட்களாக நீதிகேட்டு பல இன்னல்களையும், தடைகளையும் தாண்டிப் போராடிக் கொண்டிருக்கும் பாதிக்கப்பட்ட மாணவிகளில் ஒருவரான ஹேமலதாவின் தந்தை கேசவ சந்திரனை சந்தித்தோம். நீதிக்காகப் போராடிய தங்கள் அனுபவத்தை கண்ணீர் மல்க சொன்னார்.

“என்னோட மூன்றாவது பெண்தான் ஹேமலதா. படிப்பு, கராத்தே, ஸ்கவுட் என்று எல்லாவற்றிலும் தன் திறமைகளை நிரூபித்தவள். கார்கில் போர் நிதிக்கு 30,000 ரூபாய் வசூல் செய்து கொடுத்தாள். சம்பவம் நடந்த அன்று கடைசி நிமிடத்தில்கூட, தன் நண்பர்களைக் காப்பாற்றும் முயற்சியில் இறங்கினாளே தவிர, தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முயலவில்லை. அப்போது திருவண்ணாமலையில் நான் பணிபுரிந்துகொண்டிருந்தேன். செய்தி அறிந்து சேலம் மருத்துவமனைக்குச் சென்றபோது, அவளை கரிக்கட்டையாகத்தான் பார்க்க முடிந்தது.

என் மகளின் இழப்பு என்னை இடி போலத் தாக்கினாலும், இந்தக் கொடூரச் செயலைச் செய்தவர்கள் தண்டனை பெற்றே ஆகவேண்டும் என்ற வெறி என்னுள் எழுந்தது. என் மகளோடு எரிந்து போன மாணவி கோகிலவாணியின் தந்தை வீராசாமியும் என்னைப் போன்ற மன நிலையில் இருந்தார். 2000 பிப்ரவரியில் சம்பவம் நடந்தது. 2001 மே மாதம் வரை தி.மு.க. ஆட்சி. அதன்பின் 2006 வரை அ.தி.மு.க. ஆட்சி . கிருஷ்ணகிரி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. வழக்கு நடக்கும்போதெல்லாம் அது நீதிமன்றமாகவே தெரியவில்லை. உள்ளே யார் கட்சிக்காரர்கள், யார் குற்றம் சாட்டப்பட்டவர்கள் என்று தெரியாத வகையில் ஒரே கூட்டம். முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்த கிராம அதிகாரியே பிறழ் சாட்சியாகிவிட்டார். ஒவ்வொரு விசாரணையின்போதும், சாட்சிகள் பல்டியடித்துக்கொண்டே இருந்தார்கள். எங்களுக்கு நம்பிக்கை போய்விட்டது. வீராசாமி கொஞ்சம் தைரியமாக 'வேறு இடத்தில் வழக்கு நடந்தால்தான் நீதி கிடைக்கும்' என்று துணிந்து, உயர்நீதிமன்றத்தில் அது தொடர்பாக வழக்குப் போட்டுவிட்டார். இந்த விஷயத்தில் மிக உதவியவர் வழக்கறிஞர் விடுதலை. உயர்நீதிமன்ற நீதிபதி கனகராஜ் சேலம் அமர்வு நீதிமன்றத்துக்கு வழக்கை மாற்றினார். அங்கு அரசு வழக்கறிஞராக சீனிவாசன் என்பவரை நியமித்தார். ஆனால், அப்போதைய அ.தி.மு.க. அரசு கிட்டத்தட்ட ஒரு வருடம் சீனிவாசனுக்கு நியமன உத்தரவே வழங்கவில்லை. அதற்காக ஒரு மனுவைத் தாக்கல் செய்தால், 'ஒரிஜினல் கேஸ் கட்டுகள் காணாமல் போய்விட்டன' என்று பகிரென்று தெரிவித்தது அரசு தரப்பு.

நீதிபதி கனகராஜ், இரண்டு நாட்களில் கேஸ் கட்டுகளைக் கண்டுபிடித்து வழக்கைத் தாக்கல் செய்ய உத்தரவிட்டார். இந்த வழக்கில் இப்போது நீதி கிடைத்திருக்கிறது என்றால், அந்தப் பெருமை நீதியரசர் கனகராஜையே சேரும்.

சேலத்தில் விசாரணை துவங்கியது. கிட்டத்தட்ட அறுபதுக்கு மேற்பட்ட சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நிலையில், அரசு வழக்கறிஞருக்கே தெரியாமல், வழக்கை இடம் மாற்ற உத்தரவிட்ட உயர்நீதி மன்றத் அதன்படியே நடந்தும் கொண்டார்கள். ஒவ்வொரு விசாரணைக்கும் நேரில் செல்வேன். அரசு வழக்கறிஞர் சீனிவாசன், எந்தவித அழுத்தத்துக்கும் ஆளாகாமல், வழக்கை மிகச் சாதுர்யமாக எடுத்து வைத்தார். இறுதியில் தீர்ப்பு வந்தது. மூன்று பேருக்குத் தூக்குத் தண்டனை. 25 பேருக்கு ஏழாண்டு கடுங்காவல் தண்டனை.

எதிர்பார்த்தபடியே அப்பீல் உயர்நீதி மன்றத்துக்கு வந்தது. எல்லோருக்கும்

வென்ற நீதி!

தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றம் சென்றது தமிழக அரசு. அதனால், மீண்டும் தாமதம். உச்சநீதிமன்றம் நெற்றியடியாக, 'உயர்நீதி மன்றத் தீர்ப்பு சரியே' என்று சொல்லி விட்டது. இதற்கிடையில் வழக்கறிஞர் சீனிவாசனுக்கு மிரட்டல்கள் வேறு. சம்பவத்தைப் பார்த்த வேளாண் கல்லூரி மாணவ, மாணவியர்கள் வீட்டுக்கே சென்று சாட்சி சொல்லக் கூடாதென மிரட்டல்கள் நடந்தன. 'உயிரே போனாலும் பரவாயில்லை, உண்மையை கோர்ட்டில் சொல்லியே தீருவோம்' என்றார்கள் மாணவ மாணவிகள்.



* கோகிலவாணி * காயத்ரி * ஹேமலதா

மரண தண்டனை கொடுக்க வேண்டும் என்று நான் மனு போட்டேன். குற்றவாளிகள் சார்பில் ஆஜரான உச்சநீதிமன்ற வழக்கறிஞர் வாதத் திறமை எங்கே அவர்களை தப்பவைத்து விடுமோ என்று படபடப்பை கூட்டிற்று. ஆனால், உயர்நீதி மன்றமும் அந்தத் தீர்ப்பை உறுதி செய்துவிட்டது. நின்று கொல்லும் தெய்வம் என்பார்கள் அதுபோல இது நின்று வென்ற நீதி! இப்போது உச்சநீதிமன்றம் போவார்கள் குற்றவாளிகள். போகட்டும்... நீதி கேட்கும் எங்கள் நெடும் பயணம் அங்கேயும் தொடரும்'' என்று முடித்தார் கேசவ சந்திரன்.

– ப்ரியன்

ஒரிஜினல் கேஸ் கட்டுகள் காணாமல் போய்விட்டன என்று பகீரென்று தெரிவித்தது அரசு தரப்பு.

மாணவியின் தந்தை உருக்கம்

கிரேஸியைக் கேளுங்கள்

● **என்.கோமதி, நெல்லை**

அசடு வழியும்போது 'நோஸ் கட்' என்கிறார்களே... பதில் சொல்ல வழியில்லாது தவிக்கும் நிலையை 'mouth-cut' என்றல்லவா சொல்ல வேண்டும்?

திருமணமான ராம லஷ்மணர்களை, தவறாக மோகித்து, 'ஐ லவ் யூ' என்று அசடு வழியச் சொன்ன சூர்ப்பணகைக்கு, லஷ்மணர் கையால் கிடைத்தது 'நோஸ்-கட்'. அதனால், விகாரமாகிப் போனது அவளது ஃபேஸ் கட்... தேவையில்லாமல் மூக்கை நுழைத்து, அதிகப் பிரசங்கித்தனமாக வாய் கிழிந்தால், மூக்கும் கிழியும் என்பதை, முதன்முதலில் சொன்ன மூலக் கதை இதுதான்.

● **என்.பாலகிருஷ்ணன், மதுரை**

வேட்கையும் தேடலும் அவசியமா?

வேட்கையோடு கேள்வி கேட்க நீங்களும், தேடலுடன் பதில் சொல்ல நானும் இருக்கும் வரையில், இந்தக் கேள்வி பதில் தொடர் அவசியமாகிறது.

● **வி.ஸ்ரீதரன், நாட்டரசன்கோட்டை**

மனிதனின் மிக உன்னதமான கண்டுபிடிப்பு 'சக்கரம்' என்கிறார்கள். அந்தச் 'சக்கரம்' இல்லாத இன்றைய உலகம் என்னவாகும்?

தவழ்ந்து முன்னேற முடியாத குழந்தை போல 'வீல் வீல்' என்று கத்தி அழும்.

● **ஆர்.ராஜலட்சுமி, விழுப்புரம்**

கால் புள்ளி, அரைப் புள்ளி, முற்றுப் புள்ளி கோலத்தில், புள்ளிகள், புள்ளி விவரங்கள், பெரிய புள்ளி என்று, புள்ளிக்கு மட்டும், பெரியவங்க ஏன் இத்தனை முக்கியதுவம் கொடுத்திருக்காங்க?

பெரியவங்க தப்பு பண்ணுவாங்களா! ஏதோ ஒரு முக்கியமான 'point'ஐ மனசுல வச்சிக்கிட்டுத்தான், 'புள்ளிக்கு' முக்கியத்துவம் கொடுத்திருப்பாங்க.

● **பி.சிவா, பாளையங்கோட்டை**

சுத்தம் சுகம்தானே தரும்; சோறு எப்படிப் போடும்?

நீங்கள் சொல்வது புறச் சுத்தம். அகச் சுத்தம் உள்ளவர்களுக்கு அன்னபூரணி அவசியம் படியளப்பாள்.

● **எஸ்.ஆர்.ஹரிஹரன், சென்னை**

பூனையை மடியில் வைத்துக்கொண்டும், குறுக்கே பூனை போனால் என்னாகும் தலைவா?

இரண்டு நெகடிவ் சேர்ந்தால், பாஸிடிவ் என்கிறது கணக்கு. இந்தக் கணக்குப்படி பார்த்தால், மடியில் பூனை-குறுக்கே பூனை, இரண்டு அபசகுனம் சேர்ந்து நல்ல சகுனம் ஆகலாம். ஆனால், பூனை கணக்குல புலியா? என்று நமக்குத் தெரியாதே! மடியில் இருப்பது குட்டிப் பூனையாகவும், குறுக்கே போனது தாய்ப் பூனையாகவும் இருந்து தொலைத்தால், உங்களை பூனை பிடிப்பவன் என்று நினைத்து, தாய்ப் பூனை உங்கள் மீது பாய்ந்து பிறாண்டினாலும் பிறாண்டலாம். இந்தக் கேள்விக்கு நிறைய பதில்கள் இருக்கின்றன. அதில் எது சரியான பதில் என்பது புரியாமல், நான் மதில்



மேல்... பூனையாகத் தவிக்கிறேன்.

● 'குலசை' நதீன், காயல் பட்டினம்

காதலிக்கும், மனைவிக்கும் என்ன வித்தியாசம்?

தனக்காக தாஜ் மஹால் கட்டினால் பூரிப்படைவாள் காதலி. அதே காதலி மனைவியானால், 'உங்களுக்கு கொஞ்ச மாவது மூளை இருக்கா? இப்படி சலவைக் கல்லுல கட்டியிருக்கீங்களே... எங்க போனாலும் வழுக்கறது. இவ்வளவு பிரம் மாண்டமா யார் கேட்டா. ப்ரைவஸியே இல்லை. பேச்சுத் துணைக்கு அக்கம் பக்கத்துல ஒரு வீடுகூட கிடையாது. சுத்தி வர நாலு ஸ்தூபி கட்டினீங்களே. அதுக் குப் பதிலா, நாலு டி.வி. டவர் கட்டி யிருந்தா எல்லா சேனல்லேயும் மெகா சீரியல் பார்க்க லாம்' என்று கட்டிய தாஜ் மஹாலுக்கு பழுது சொல்வாள்.

சுத்தம் சோறு போடுமா..?



● காயத்ரி, கும்பகோணம்

கண், காது, மூக்கு இவையெல்லாம் இரண்டு இரண்டாக இருக்கையில், வாய் மட்டும் ஏன் நமக்கு ஒன்றுதான் உள்ளது?

கண், காது, மூக்கு இரண்டாக இருந் தாலும், ஒரே சமயத்தில் ஒன்றைத்தான் பார்க்கும்; கேட்கும்; முகரும். ஆனால், இந்த வாய் இருக்கிறதே, ஒரே விஷயத்தை இரண்டு விதமாகப் பேசும்; ஒன்றைக் கூறி ஊரையே இரண்டு பட வைக்கும். ஒன்றுக்கு ஒன்று உளறி நம்மை ரெண்டும் கெட்டானாக்கும். மாவுத்தன் யானையை அடக்குதல் போல, இந்த mouthதனை அடக்கும் மாவுத்தன் மௌனம்தான்.


●மாலதி, தஞ்சாவூர்

கர்நாடக சங்கீதம் பாடுபவர்களுக்கு நகைச்சுவை உணர்வு அதிகமாமே?

சரிகமபதநி நித்யஸ்ரீ மகாதேவன், சமீபத்தில் ஒரு ஹ்யூமர் க்ளப்பில், சிரி கமபதநி நித்யஸ்ரீயாக மாறி, அரங்கத்தைத் தமது நகைச்சுவைப் பேச்சால் அதிர வைத்தார். என்னைக் கேட்டால், கர்நாடக சங்கீதம் பாடும் இவர், கர்-'நாடகம்' ஒன்றை அரங்கேற்றலாம். ●



கல்கி



2007 டிசம்பர் 23
சர்வஜித் மார்கழி 7
மலர் : 66
இதழ் : 21

தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா

- பாரதியார்


தேர்தல் வியாபாரிகள்


குஜராத் தேர்தல் முடிவுகள் குறித்து இரு விதமாகவும் கணிப்புகள் வெளியாகியுள்ளன. காங்கிரஸ் வென்றாலும் சரி, பா.ஜ.க. வென்றாலும் சரி, வழக்கத்தை விடவும் வெற்றிக் கொக்கரிப்பும் பெருமிதப் பிரசங்கமும் அதிகமாகவே இருக்கும். ஏனெனில், இது தேர்தல் வெற்றி என்பதைக் காட்டிலும் வார்த்தை யுத்தத்தில் பெற்ற வெற்றி! இரு தரப்பினருமே, கௌரவமான, ஆக்கபூர்வமான பிரசார அணுகுமுறையைக் கைவிட்டுவிட்டு, எதிர்த்தரப்பை வில்லனாக்கி, மக்கள் மனத்தில் வெறுப்பைத் தூண்டத்தான் முயன்றுள்ளனர்.

தேர்தல் கமிஷனும் நீதிமன்றமும் குஜராத் பிரசார களத்தில் நிகழ்ந்த அத்துமீறல்களை ஆராய்ந்து முடிவு சொல்வதற்குள் தேர்தல் முடிவுகளே வந்துவிடும் என்பதால், இரு தரப்புகளுக்குமே பெரிய இழப்பு எதுவும் இராது.

ஆனால், சோனியா காந்தியும் நரேந்திர மோடியும் மிதமிஞ்சிப் பேசியதன் விளைவாக, குஜராத் மக்களின் மனத்தில் தூண்டப்பட்டுள்ள பிரிவினை எண்ணங்களை இனி அழிப்பதும் அவர்களுக்கிடையே நல்லுறவு ஏற்படுத்துவதும் மிகவும் கடினம். எனவே, இழப்பு குஜராத் மக்களுக்குத்தான்!

சிறந்த தலைவர்களாக இருக்கக்கூடியவர்கள், மக்களிடையே உள்ள வேறுபாடுகளைப் பயன்படுத்திக்கொண்டு தாங்கள் முன்னேற முயற்சி செய்யமாட்டார்கள். ஆனால், மோடியும் சோனியா காந்தியும் அதைத்தான் செய்துள்ளனர்.





சோனியா காந்தி மோடி அரசை 'கொலை வியாபாரிகள்' என்று அழைத்தது அநாகரிகமே. அதைச் சாதகமாக்கிக்கொண்டு குஜராத் காவல்துறையின் ஓர் என்கவுன்டர் கொலையை மோடி நியாயப்படுத்திப் பேசியது அநாகரிகம் மட்டுமல்ல; மனித நேயமற்ற அகங்காரம்.

ஹிந்து - முஸ்லிம்களிடையே சுமுகமான உறவுக்கு இடங்கொடாத ஓர் இறுக்கச் சூழல் நீண்ட காலமாக குஜராத்தில் நிலவி வருகிறது. 'அதை மாற்றிக் காட்டுகிறோம்; எங்களுக்கு ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இரு கண்களைப் போல' என்று ஆக்கபூர்வமாகவும் நேசம் வளர்க்கும் விதமாகவும் பேச, ஏன் நமது அரசியல்வாதிகள் எவருமே முன் வருவதில்லை?

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்துப் பிரித்தாளும் சூழ்ச்சியைத்தான் இன்று நமது அரசியல்வாதிகள் ஹிந்து - முஸ்லிம்களிடையே பயன்படுத்துகிறார்கள். இதன் விளைவாக அவர்களுக்குத் தேர்தல் வெற்றி கிடைக்கலாம். ஆனால், மக்களுடைய வாழ்க்கையில் அன்பும் அமைதியும் தொலைந்து போகின்றன.

சிறந்த பண்புகளை அழித்துவிட்டு, நல்ல மரபுகளைப் புறக்கணித்துவிட்டு அமைக்கப்படுகிற ஆட்சி நீடிக்கலாம்; ஆனால், அது நன்மை விளைவிக்காது. தூண்டப்பட்டுக் கொந்தளித்துக்கொண்டிருக்கும் மக்களின் உணர்வுகளைச் சமாளிப்பது சுலபமல்ல! அமைதியும் சட்ட ஒழுங்கும் பெரிய பிரச்னைகளாக நீடிக்கிறபோது, நிர்வாகம் சீர்கெடும்; முன்னேற்றம் தடைபடும். அடுத்த தேர்தலில் இதைவிடவும் மோசமான பிரசார யுக்திகளைக் கையாள நேரிடும்.

தேர்தல் வியாபாரிகளாகச் செயல்படுவதை நிறுத்திவிட்டு, அரசியல் தலைவர்கள் தேசத்தின் நன்மையை மனத்தில் கொண்டு இயங்கட்டும். சட்டமும் நீதித் துறையும் தேர்தல் கமிஷனும் எவ்வளவுதான் பிடியை இறுக்கினாலும், ஆதாரப் பண்புகளைப் புகட்ட முடியாது. அவை தனிமனித மனசாட்சியால் நெறிப்படுத்தப்படுபவை. ●

கல்கி தந்த கௌரவம்

டி.எம்.கிருஷ்ணாவோடு நாங்களும் பாபாவின் ஆசியை மானசீகமாகப் பெற்றுக்கொண்டோம்.

- வானவில் மூர்த்தி, கடலூர்

இரண்டு ரூபாய் அரிசி, மின்சார அதிர்ச்சி கட்டுரையைப் படித்தவுடன் ஷாக்காகிப் போனோம்.

- கா.சங்கர், சாலை அகரம்

அப்-டு-டேட் செய்திகளை கல்கி மூலம் அறிய முடிகிறது. என்ன முழிக்கிறீர்கள் 'ரோபோ ஹார்ட் ஆபரேஷன்' பற்றித்தான் சொல்கிறேன்.

- எஸ்.மீனா, ஸ்ரீரங்கம்

மார்கழி விருந்தாய் மறுபடியும் சுஜாதாவின் 'வாரம் ஒரு பாசுரம்' பிரசுரமாவது பரவசமே!

- த.சத்தியநாராயணன், அயன்புரம்

பிரபஞ்சனின் கணக்கு சிறுகதை, மக்களிடம் மனிதநேயம் வளர வேண்டிய தன் அவசியத்தை உணர்த்தியது.

- சி.மகேஷ், திருச்சி

அடுக்குமாடி கட்டட உரிமையாளர்களுக்குக் கூறப்பட்ட யோசனைகள் அத்துனையும் அற்புதம்.

- எஸ்.சுந்தரவடிவு, உறையூர்

எதிர்பார்ப்பு சிறுகதை நாம் கொடுப்பதுதான் நமக்கு திருப்பி வரும் என்ற கருத்தை உள்ளடக்கியது.

- வி.ஆர்.ராஜேஷ், சென்னை

'உள்ளும் புறமும்' பகுதியில், தலாய் லாமாவைத் தேர்ந்தெடுக்கும் விதம் குறித்த மருதனின் கட்டுரை வெகு மதுரம்!

- சாந்தி சுந்தர், நெய்வேலி

புதிய வரவு நல்வரவு ஆகுக. கவிஞர் தமிழச்சியைத்தான் குறிப்பிடுகிறோம்.

- பிரபாலிங்கேஷ், மேலகிருஷ்ணன்புதூர்



ஸ்வீட் போஸ்ட்

துரைமுருகன் பற்றிய கேள்விக்குத் தராசுவின் பதில், எல்லோரும் சிந்தித்துச் செயல்பட வேண்டிய ஒன்று!

- கு.ப.இரகுநாதன், பூவிருந்தவல்லி

தமிழ் சினிமாவைக் கௌரவப்படுத்தும், ஒன்பது ரூபாய் நோட்டு படத்துக்கு, கவர் ஸ்டோரி கௌரவம் கொடுத்து மகிழ்ந்திருக்கும் கல்கிக்குப் பாராட்டுக்கள்.

- எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

இசை என்ற பெயரில் இழைக்கப்படும் இம்சைகளை விஸ்தாரமாக ஸ்வரம் பிரித்து நிரவல் செய்த ஆசிரியர் பக்கம் நாம் எல்லோரும் படும் வேதனையை எதிரொலித்தது!

- எஸ்.கோதை, சென்னை


வந்துவிட்டார்! திகம்பர சாமியார்
ஆங்கில நாவல்களுக்கு இணையாக
THRILLERS IN தமிழ்
1930-களில்
தமிழகத்தை கலக்கி
தமிழ் வாசகர்களை அசர வைத்த
வடுவூர் கே.துரைசாமி ஐயங்கார், பி.ஏ.,
எழுதிய நாவல்கள் – புதுப்பொலிவுடன்
ஆங்கிலத்தில் ஷெர்லாக் ஹோம்ஸ்
நவீன காலத்தில் 007 ஜேம்ஸ்பாண்டு
தமிழகத்தில் அன்றும் இன்றும் என்றும்
திகம்பர சாமியார்
என்று போற்றப்படக் கூடிய, தரமான, த்ரில்லர்கள்
விறுவிறுப்பான துப்பறியும் கதைகள்
கையில் எடுத்தால் கீழே வைக்க முடியாத அளவிற்கு கட்டிப் போடும்.
உவகையூட்டும் நாவல்கள் வெளிவந்து விட்டன.
வரம்பு மீறல்கள். நயவஞ்சகம் சூழ்ச்சி ஆகியவற்றை பிரமிப்பூட்டும் வகையில்
முறியடிக்கும் திகம்பர சாமியார் மற்றும் பிற கதாபாத்திரங்கள்.
1. பூர்ண சந்திரோதயம் (5 பாகங்கள்) ..... ரூ. 650.00
2. கும்பகோணம் வக்கீல் (2 பாகங்கள்) ..... ரூ. 200.00
3. மாயா விநோதப் பரதேசி (3 பாகங்கள்) ..... ரூ. 385.00
4. மேனகா (2 பாகங்கள்) ..... ரூ. 250.00
5. மதன கல்யாணி (3 பாகங்கள்) ..... ரூ. 355.00
6. சௌந்திர கோகிலம் (4 பாகங்கள்) ..... ரூ. 460.00
7. பாலாமணி (அ) பக்காத் திருடன் (2 பாகங்கள்) ரூ. 170.00
8. வசந்த மல்லிகா ..... ரூ. 110.00
9. வித்யாசாகரம் ..... ரூ. 100.00
10. பன்னியூர் படாடோப சர்மா ..... ரூ. 150.00
11. திவான் லொடபடசிங் பகதூர் ..... ரூ. 40.00
12. திரிபுரசுந்தரி (அ) திகம்பரசாமியார் திடும்பிரவேசம் ரூ. 130.00
13. வஸந்த கோகிலம் ..... ரூ. 90.00
14. தங்கம்மாள் (அ) தீர புருஷனின் தியாக கம்பீரம் ரூ. 75.00
அலையன்ஸ்
(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
ப.எண். 244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால்பெட்டி எண்: 617, மயிலாப்பூர்,
சென்னை - 600 004. தொலைபேசி : 24641314
e-mail : www.alliancebook.com
visit us at : Srinivasan@alliancebook.com

ராமர் பாலமும்

“கல்கி எழுதின புத்தகங்களையே தினமும் ஏன் படிக்கிறீங்க என்று என் மனைவி கேட்பாள். நீ தினமும் விஷ்ணு சகஸ்ரநாமம் படிக்கிறதில்லையா? அது போல எனக்கு கல்கியின் எழுத்துக்கள் என்று பதில் சொல்லுவேன். அவள் உடனே, 'நான் ஒரு நாள் விஷ்ணு சகஸ்ரநாமம், அடுத்த நாள் லலிதா சகஸ்ரநாமம் என்று மாற்றி மாற்றிப் படிக்கிறேனே?' என்பாள். அதற்கு, 'நான்கூட ஒரு நாள் பொன்னியின் செல்வன், அடுத்த நாள் சிவகாமியின் சபதம், இன்னொரு நாள் பார்த்திபன் கனவு என மாற்றி மாற்றிப் படிக்கிறேன்' என்று பதில் சொல்லுவேன். ஆய கலைகள் அறுபத்து நான்கையும் அறிந்தவர் கல்கி கிருஷ்ணமூர்த்தி'' என்று அமரர் கல்கி நினைவு நாளான டிசம்பர் ஐந்தாம் தேதி, சென்னை ஆழ்வார் பேட்டை ஆஸ்திக சமாஜத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசினார் கிரேஸி மோகன்.

* விழா நாயகர்



வழக்கம்போல இந்த ஆண்டும், அமரர் கல்கி நினைவு நாளையொட்டி புத்தக வெளியீடு, சமயப் பேருரை என்று ஏற்பாடு செய்திருந்தது கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை. செல்வி. ஐஸ்வர்யா இறை வணக்கம் பாட, கல்கி ஆசிரியர் சீதா ரவி எல்லோரையும் வரவேற்றார். கிரேஸி மோகன் நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்று, அமரர் கல்கி எழுதிய 'பாலாற்றில் ஒரு பகற்கனவு', 'கல்கி வளர்த்த கலைகள்' ஆகிய இரண்டு புத்தகங்களை வெளியிட்டார். கர்நாடக இசைப் பாடகர் விஜய் சிவா முதல் பிரதிகளைப் பெற்றுக்கொண்டார். அமரர் கல்கியின் எழுத்துக்களின் ஆழ்ந்த அபிமானியான சுப்ர. பாலன் தொகுத்துள்ள இரு புத்தகங்களையும் வானதி பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

கிரேஸி மோகன் தமது தலைமையுரையில், கல்கி பற்றித் தாம் எழுதிய ஒரு மரபுக் கவிதையைப் படித்து கல்கி அன்பர்களின் கரகோஷத்தைப் பெற்றார். ''இன்றைக்கு ராமர் பாலம் கட்டினாரா இல்லையா என்று சர்ச்சை நடக்கிறது. ஆனால், கல்கி தமது எழுத்துக்களால் 'ஹியூமர் பாலம்' கட்டியதை யாராலும் மறுக்க முடியாது. தமிழ் மொழியின் வளர்ச்சியை கி.மு., கி.பி. என்று இரண்டு கட்டங்களாகப் பிரிக்கலாம். அதாவது, (கல்கி) கிருஷ்ணமூர்த்திக்கு முன்; கிருஷ்ணமூர்த்திக்குப்



* வேளுக்குடி கிருஷ்ணன்



* சிறப்பு விருந்தினர்களுக்குச் சிறப்பு...



* அமரர் கல்கியின் இரு புத்தகங்கள் வெளியீடு. இடமிருந்து : காயத்ரி வேங்கடராகவன், விஜய் சிவா, கிரேஸி மோகன், கல்கி ராஜேந்திரன், ஆசிரியர் சீதா ரவி

'ஹியூமர்' பாலமும்!



* பார்வையாளர்கள்...

பின். என்னால் கல்கி அளவுக்கு எழுத முடியாது; இருந்தாலும், ஒரு 'கால் கி' அளவுக்காவது எழுதணும்னு ஆசைப்படு கிறேன்'' என்று குற்றால அருவியாக நகைச் சுவை கொட்டப் பேசினார் கிரேஸி.

காயத்ரி வேங்கடராகவன் தமது வாழ்த்துரையில், ''கலைத் துறையினருக்கு கல்கி ஒரு கலங்கரை விளக்கம். அவர் தமது எழுத்தாணி மூலமாக, பலரது கலைத் திறனைச் செதுக்கினார். அவரது கலை விமர்சனங்கள் இன்றைக்கும் பொருந்தும்; கடந்த காலத்தை நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தும். அவர் தம்மை ஒரு ரசிகர் என்று சாதாரணமாகக் குறிப் பிட்டுக்கொண்ட போதிலும், அவரது அபாரமான ரசனையும், ஆழமான இசை ஞானமும் விமர்சனங்களில் வெளிப் பட்டுள்ளன. ஒரு கச்சேரியை எப்படித் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும் என்று கூட கலைஞர்களுக்கு வழிகாட்டும்படி அவரது விமர்சனங்கள் அமைந்திருந்தன'' என்றார்.

புத்தகங்களின் தொகுப்பாசிரியர் கப்ர.பாலன், பதிப்பாளர் வானதி திருநா வுக்கரசு, அட்டைப் பட ஓவியர் ஹரிஷ் குகன் ஆகியோருக்கு கிரேஸி மோகன் சால்வை அணிவித்துக் கௌரவித்தார். அறக்கட்டளையின் சார்பில், நிர்வாக அறங்காவலர் கல்கி ராஜேந்திரன் நிகழ்ச்சி யைத் தொகுக்க, அறங்காவலர் வி.கோபாலன் நன்றி கூறினார்.

வேளுக்குடி கிருஷ்ணனின் சமயப்



* செல்வி ஐஸ்வர்யா



* வானதி திருநாவுக்கரசு



* சுப்ர.பாலன்



* ஹரிஷ்குகன்

பேருரைக்குத் தலைப்பு 'சேதுபந்தனம்'. அதனைக் கேட்க இறுதிவரை அரங்கம் நிறைய ரசிகர் கூட்டம்! வால்மீகி ராமாயணத்திலிருந்து சமஸ்கிருத சுலோகங்களையும், கம்பராமாயணம் உள்ளிட்ட பல்வேறு பக்தி இலக்கியங்களிலிருந்து தமிழ்ப் பாடல்களையும் மேற்கோள் காட்டி, ஒன்றரை மணி நேரத்துக்கு அற்புதமான உரையாற்றினார் வேளுக்குடி. ஹம்பி முதல் இராமேஸ்வரம் வரையில் வானரப் படை பயணித்த பூகோள வரைபடத்தைச் சொற்சித்திரமாக வரைந்து, ராமர் வாழ்ந்த காலத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் வரலாற்றுப் பதிவாக வால்மீகியால் எழுதப் பட்டதை அறிவுபூர்வமாகவும் உணர்ச்சிகரமாகவும் ஆணித்தரமாகவும் நிலை நாட்டினார்.

''ராமாயணம் தொடர்புடைய இடங்கள் பல இன்றைக்கும் நமது நாட்டில் இருக்கின்றன. அங்கே சென்றால், ராமரை நம்மால் உணர முடியும். ராமர் கட்டிய பாலம் பற்றிய அனைத்து விவரங்களும் வால்மீகி ராமாயணத்தில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. விஸ்வகர்மாவின் மகன் நலன் கட்டடக் கலை நிபுணன். ஆனாலும், சமுத்திரராஜனின் அனுமதி, ராமரது அருள் ஆகியவற்றால் தான் ஐம்பத்திரண்டு கோடி வானரங்கள் கொண்ட படையால் சேது பாலத்தைக் கட்டி முடிக்க முடிந்தது. பாலத்தின் அகலம் நூறு மைல்; நீளம் ஆயிரம் மைல். வானரங்கள், மலைகளையும், மரங்களையும் பெயர்த்து எடுத்துக்கொண்டு வந்து சமுத்திரத்தில் போட, அவை மிதக்கின்றன. இதைப் பார்க்கும் அணில்கள் கடல் நீரில் மூழ்கி, கரைக்கு வந்து மணலில் புரள, அவற்றின் உடல் முழுவதும் மணல் ஒட்டிக் கொள்கிறது. பாறைகளுக்கு இடையில், உடலில் ஒட்டிய மணலை உதறி, பாலத்துக்குப் பூச்சுக் கொடுக்கின்றன. இப்படியாக வானரங்களும், அணில்களுமாகச் சேர்ந்து சேது பாலத்தை ஐந்து நாட்களில் கட்டி முடிக்கின்றன. கட்டி முடிக்கப் பட்ட சேது பாலத்தை வானத்திலிருந்து பார்த்து, தேவர்கள் வியக்கிறார்கள். இலங்கை சென்று ராவணனை சம்ஹாரம் செய்து, சீதையை மீட்டுக்கொண்டு, புஷ்பக விமானம் மூலமாக அயோத்தி திரும்பும் போது சீதையிடம், 'அதோ கடலிலே ஒரு நேர்க்கோடு போலத் தெரிகிறது பார், அதுதான் சேது பாலம்' என்று காட்டுகிறார் ராமர்'' என்று குறிப்பிட்ட வேளுக்குடி கிருஷ்ணன், தமது உபன்யாஸத்தின் முடிவில் சொன்ன பஞ்ச்: ''ராமர், சேது பாலத்தைக் கட்டியது இருக்கட்டும். ராமரே ஒரு சேதுதான். எப்படி? இந்த உலகத்திலிருந்து நாம் வைகுண்டம் செல்லுவதற்கு ராமர் என்ற பாலம்தானே ஒரே வழி!''

தொகுப்பு : **எஸ்.சந்திரமௌலி**

படங்கள் : **ஸ்ரீஹரி**





"இவனுக்கு வைதீசுவரன் கோயிலில் முடியிறக்கப் போயிருந்தோம். அப்போது முடி மழிக்கக் கத்தி தலையை வருடியபோது, குழந்தை அழுகையினூடேகூட 'தரிகிடதோம்... தத் தரிகிடதோம்' என்று ஜதி சொல்லிக் கொண்டிருந்தான்'' என்று நினைவுகூர்கிறார் அம்மா பேபி ஸ்ரீராம்!

பிறவியிலேயே பரத்நாராயணனுக்கு தாள ஞானம் கைவந்திருக்கிறது. இரண்டரை வயதிலேயே முதல் பாடலை 'தத்வமஸி' ஆல்பத்தில் பாடியிருக்கிற இவர், எட்டரை வயதில் பாடிய தீக்ஷிதரின் நவகிரஹ கிருதிகள் ஆடியோ கேஸட்டாக வெளிவந்திருக்கின்றன.

சின்மயா வித்யாலயாவில் நான்காம் வகுப்பு படிக்கும் பரத்துக்கு, அம்மா டாக்டர் பேபி ஸ்ரீராம்தான் குரு. அரை நிமிடம் ஓர் இடத்தில் அமராமல் துள்ளிக் கொண்டிருக்கும் குழந்தையை, ஒன்றரை மணி நேரம் மேடையில் அமர்த்தி 'வேலை' வாங்குவது என்பதே பெரிய சாதனை.

''அவன் டாம்! நான்தான் ஜெர்ரி!'' என்று அண்ணனின் குறும்புத்தனத்துக்கு, நம்மிடம் விளக்கம் தருகிறாள் பரத்தின் குட்டித் தங்கை அனகா!

ஒருமுறை புதிய கஞ்சிரா ஒன்றை வாங்கி வந்த இவரது அப்பா ஸ்ரீராம், அதனைத் தட்டிப் பார்த்தபோது, மிகச் சரியாக ஜதி சொல்லியிருக்கிறான் பரத். அதை வைத்துத்தான் குழந்தையின் இசை ஞானத்தைக் கண்டறிந்து வளர்த்தெடுத்திருக்கிறார்கள்.

பரத்தின் முதல் மேடைக் கச்சேரி நடைபெற்றது முன்னால் சொன்ன ஸி.டி. வெளியீட்டு விழா மேடையில். அடுத்த கச்சேரி, கோட்டக்கல்லில் உள்ள, தீக்ஷிதர் கிருதிகளுக்காகவே அர்ப்பணிக்கப்பட்டுள்ள 'சித் சபா' அரங்கத்தில்!

தியாகராஜ பஞ்ச ரத்னம், கமலாம்பா நவாவரணம், ஸ்யாமா சாஸ்திரி ஸ்வர ஜதிகள் உட்பட நூற்றைம்பது கீர்த்தனங்கள் இப்போதே பரத்

சரிகம

துக்குப் பாடம்.

பரத்தின் ஸி.டி.யைக் கேட்ட பலர் சென்னையில் மட்டுமில்லை; ஆஸ்திரேலியா, லண்டன் என்றெல்லாம் இசை நிகழ்ச்சிக்கு அழைத்திருக்கிறார்கள். ''நிறைய ஊர் சுற்றப் போறேன்'' என்று சொல்லிக்கொண்டே அம்மா மடியை விட்டு எழுந்து ஓடுகிறான் பரத்.

''விஷமம்தான் தாங்கவே முடியாது. ரொம்பவும் பொறுக்க முடியல்லேன்னா, ஸ்ருதிப் பெட்டியை எடுத்துக் கொடுத்து ஒரு மணி நேரம் உட்கார வெச்சுடுவேன். அப்போ மட்டும் பரம சாதுவா சங்கீதத்திலே லயிச்சுடுவான்'' என்கிறார் பேபி ஸ்ரீராம்.

ஒய்.ஏ.ஸி.எம்.அமைப்பினர் ஆண்டுதோறும் ஜனவரி முதல் வாரம் நடத்துகிற 'கிரிக்கெட் கச்சேரி'யின்போது, மைதானத்தில் 'சென்டர் ஆஃப் அட்ராக்ஷன்' பரத் நாராயண்தான். ஆட வருகிற வித்வான்கள், இவனை ஜதி சொல்ல வைத்து மகிழ்வார்கள். பரத்துக்கு முக்கியமான விமர்சகரே, தங்கை அனகாதான்! 'தெலியலேது ராமா' என்று அழுத்துகிறபோது... ''கடிக்கிற மாதிரி பாடாதேடா... அம்மா பாடற மாதிரி பாடு'' என்கிறாள் 'ஜெர்ரி' அனகா.

– சுப்ர.பாலன்



அழுதுகொண்டே ஜதி சொன்னான்!

● பரத் நாராயண்

"போன வருஷம் திருவையாறு ஸ்ரீ தியாகராஜர் உற்சவம். என்னோட பெரியப்பா என்னைக் கூட்டிட்டுப் போயிருந்தாரு. தனி ஆவர்த்தனமா பத்து நிமிஷம் தவில் வாசிச்சேன். எல்லாரும் எழுந்து நின்னு கை தட்டினாங்க. எனக்கு ரொம்பச் சந்தோசமா இருந்துச்சு!'' எனக் கூறும் அனந்த சுப்பிரமணியத்துக்கு வயது பத்து. அவனைவிட வாத்தியம் பெரிதாக இருக்கிறது!

திருவெறும்பூர் அருகே நவல்பட்டு சொந்த ஊர். ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படித்து வரும் மாணவன். அப்பா குடந்தையில் தனியார் நிறுவன ஊழியர். ஆனால், குடும்ப பாரம்பரியமோ இசை

பாப்பாக்கள்!



திடீர்னு ஒரு நாள் இவனே வாசிக்க ஆரம்பிச்சுட்டான்...

* அனந்த சுப்பிரமணியம்

யுடன் இணைந்தது. பையனின் தாத்தா திருக்கருக்காவூர் தெட்சிணாமூர்த்தி பிள்ளை. பிரபல தவில் வித்வான். பெரியப்பாவும் தவில் வித்வான் தி.தெ.சிவகுருநாதன். அனந்த சுப்பிரமணியம், எட்டு வயதில் தவில் வாசிக்கத் தாவிய கதையை சிவகுருநாதனே நம்மிடம் கூறுகிறார்.

"சுப்பிரமணியம், ஆறு மாதக் குழந்தையா இருந்தப்ப என்னோட வீட்டுக்குத் தூக்கிட்டு வந்துட்டோம். என்கிட்ட தவில் கத்துக்க தினசரி நிறைய பேரு வருவாங்க. அப்ப அவங்களுக்குக் கத்துத் தர்றதை, சுதவோரமா நின்னு கவனமா கேட்டுக்கிட்டு இருப்பான். ஏழு வயசு இருக்கும். திடீர்னு இவனே ஒரு நாள், தவிலை எடுத்து வாசிக்க ஆரம்பிச்சுட்டான். அதைப் பார்த்ததும் எனக்கே பிரமிப்பா போச்சு. அவனோட வாசிப்புல லயம் சுத்தமா இருந்துச்சு.

ஒரு வருடப் பயிற்சிக்குப் பின்னாலே, எட்டு வயதில் முதன்முறையா தஞ்சாவூர் மாரியம்மன் கோயில் திருவிழாவுல மேடையேறி, முக்கால் மணி நேரம் வாசிச்சான். இப்ப இந்த ரெண்டு வருசத்துக்குள்ளே ஐம்பது மேடைகள்ல பிரபல இசைக் கலைஞர்களோட வாசிச்சுருக்கான். லய வாத்தியங்களில் தவில்தான் ராஜா. எனக்குத் தெரிந்து எட்டு வயதில் மேடையேறிய சிறுவன் இவன் ஒருவனாக மட்டுமே இருக்க முடியும்!'' என்கிறார்.

"2006-ல் சென்னையில் ஒரு திருமண நிகழ்ச்சியில் நாதஸ்வரக் கச்சேரி. அந்தத் திருமணத்துக்கு வந்திருந்த பிரபல பாடகி நித்யஸ்ரீ மகாதேவன், பையனின் தவில் வாசிப்பைக் கேட்டு ரசித்துவிட்டு, 'தவில் லய ஞான இளவரசன்' என்று இவனை அழைத்து மகிழ்ந்தார்!'' என்கிறார் அனந்த சுப்பிரமணியத்தின் பெரியப்பா சிவகுருநாதன்.

செய்திச் சித்திரம்:

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

நடக்குமென்பார்; நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்

மேஷம்: பண வரவு நிறைந்த வாரம். புதிய முயற்சிகள் கைகூடும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். திருமணக் காரியம் கைகூடும். வெளிநாட்டுப் பிரயாணம் வந்து சேரும். பூர்வீகச் சொத்துகள் பாகப் பிரிவினை ஆகும். சனி / ராகு / கேது வழிபாடு நற்பலனை அளிக்கும்.

ரிஷபம்: வாக்குவாதம் தவிர்க்கவும். உடல்நிலையில் கவனம் தேவை. வேலைப் பளு அதிகரிக்கும். கல்வியில் அதிக கவனம் செலுத்தவும். தடை விலகித் திருமணம் கைகூடும். சிலருக்குப் புதிய வேலைவாய்ப்புக் கிட்டும். வழக்குச் சற்றுத் தாமதம் ஆகும். உறவினர்கள் விலகிச் செல்வார்கள். சனி / ராகு / கேது / குரு வழிபாடு செய்து வர கஷ்டங்கள் விலகும்.

மிதுனம்: தொட்டது எல்லாம் துலங்கும். திருமணக் காரியம் கைகூடும். கல்வி வளம் மேலோங்கும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். குழந்தை பாக்கியம் கிட்டும். வேலையில் நற்பெயர் உண்டாகும். வழக்கு வெற்றி அளிக்கும்.

கடகம்: எதிலும் நிதானித்துச் செயல்பட்டால், வரும் சிரமங்களிலிருந்து விடுபடலாம். இல்லற வாழ்வில் விட்டுக்கொடுத்து அனுசரித்துபோவது நல்லது. படிப்பில் கவனமுடன் இருக்கவும். கைபொருள் மீது கவனம் தேவை. சுப காரியம் சற்றுத் தாமதம் ஆகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நெருங்கியவர்களை விட்டுப் பிரிய நேரிடும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

சிம்மம்: உற்சாகமான வாரம். வேலையில் ஊதிய உயர்வு ஏற்படும். சிலருக்குப் பணி மாற்றம் வரலாம். நீண்ட காலக் கடன் தொல்லை தீரும். வீடு / மனை மூலம் ஆதாயம் ஏற்படும். சிலருக்கு மகப்பேறு பாக்கியம் உண்டாகும். வழக்கு வெற்றி அளிக்கும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

கன்னி: பண உதவிகள் கிட்டும். மன பிரம்மை தீரும். கல்வி வளம் மேலோங்கும். வேலையில் மாற்றம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் சீராகும். குரு வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

துலாம்: பூமி அல்லது தொழில் மூலம் ஆதாயம் ஏற்படும். புதிய தொழில் முயற்சி பலன் கொடுக்கும். குழந்தைகள் பற்றின மனக் கவலை தீரும். வேலையில் நற்பெயர் உண்டாகும். உடன் பிறப்புகள் மூலம் அனுகூலம் ஏற்படும். வேலை மாற்றம் ஏற்படும். ராகு / கேது / குரு வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

விருச்சிகம்: திருமணம் கைகூடும். வாக்குவன்மை மேலோங்கும். தன விருத்தி ஏற்படும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். கடன் தொல்லை நீங்கும். சுபச் செலவு ஏற்படும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ராகு / கேது /

16.12.07 முதல் 22.12.07 வரை



சனி வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

தனுசு: உற்சாகமான வாரம். பணக் கஷ்டம் இருக்காது. உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் கிட்டும். கல்வி வளம் மேலோங்கும். குரு வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

மகரம்: எதிலும் கவனமுடன் செயல்படுவது நற்பலனை அளிக்கும். உடல் ஆரோக்கியத்தில் எச்சரிக்கையாக இருக்கவும். இல்லற வாழ்வில் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. நீண்டகாலக் கடன் சுமை தீரும். கல்வியில் கவனம் தேவை. ராகு / கேது/ சனி / குரு வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

கும்பம்: சந்தோஷமான சம்பவங்கள் நடக்கும். நீண்ட தூரப் பிரயாணம் வந்து சேரும். வேலையில் நற்பெயர் கிட்டும். வராத நிலுவைகள் வந்து சேரும். வழக்கு வெற்றி அளிக்கும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

மீனம்: வேலையில் மாற்றம் ஏற்படும். அயல் நாட்டு மனிதர்களால் லாபம் உண்டு. எதிர்ப்பு தொல்லை விலகும். புதிய ஆபரணப் பொருட்கள் வாங்குவீர்கள். சத்ரு தொல்லை விலகும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பதவி உயர்வு ஏற்படும். வெளிநாட்டுப் பிரயாணம் வந்து சேரும். குரு வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

பார்வதி பதில்கள்

என் மகனுக்குத் திருமணம் எப்போது கூடி வரும்?

- எம்.எஸ்.சுப்ரமணியம், ஈரோடு

உங்கள் மகனுக்கு முப்பத்திரண்டு வயதில் திருமணம் முடியும். நன்கு படித்த, வேலையில் உள்ள பெண் அமைவார்.

என் மகன் நன்கு படிக்கப் பரிகாரம் சொல்லவும்?

- எஸ்.புகழேந்தி, திருச்சி - 17

உங்கள் மகனுக்குத் தற்போது ராசி பிரகாரம் நல்ல காலம் துவங்கியுள்ளது. ஆதலால், படிப்பில் சிரமம் இருக்காது. வியாழக்கிழமைதோறும் ஆஞ்சநேயர் சுவாமிக்குத் தீபம் ஏற்றி வழிபட்டு வர குறைகள் நீங்கும்.

நாட்டியரங்கத்தின் கதை!

நாரதகான சபா கமிட்டி அறையில், காரசார மான விவாதம் நடைபெறு கிறது என்றால், அங்கே 'நாட்டி யரங்கம்' செயற்குழு உறுப்பினர்களின் கூட்டம் நடந்து வருகிறது என்று புரிந்து கொள்ளலாம்!

சண்டை போட்டுக் கொள்கிறார்களோ? என வெளியே இருப்பவர்கள் நினைக்கும் அளவுக்குச் சில சமயம் வார்த்தை மோதல் கள் நடக்கும். ஆனால், அதில் துளியும் காழ்ப்புணர்வு இருக்காது.

களத்தில் வீராவேசமாக இருப்பவர் இங்கே நேர்மாறாக சமா தானத் தூதராக இரண்டு முக்கிய பாயின்ட்டுகளை அமைதியாக எடுத்து வைப்பார். கல்பகம் பாலசுப்பிரமணியம் இலேசுப்பட்டவர் அல்ல. குறிப்பிட்ட கலைஞரின் 'குறைபாடுகளை' வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுகிற மாதிரி பட படப்பே இல்லாமல் சொல்லிவிடுவார். எந்த எந்த இளம் நடனக் கலைஞர், எந்த எந்த நடனப் பள்ளியில் இருந்து சுமாராகத் தேறுவார் என்று பட்டியல் போட்டுக் கொண்டு வருவது கே.எஸ்.சுப்பிரமணி யத்தின் பணி. 'பாங்க் ஆஃப் பரோடா' கண்ணன், வழக்க மாக, வங்கி வேலை எல்லாம் முடிந்து தாமத மாகத்தான் வரு வார். மறுபடியும் விவா தம் தொடரும்!

ரசவடை காபி; ரசமான

நாரதகான சபா செய லர் கிருஷ்ணசுவாமி, 'இன்னிக்கு மீட்டிங் இருக்குன்னு இப்பத் தான் தெரியும்!' என்று சொல்லிக் கொண்டே, சபா வேலையை எல்லாம் முடித்துக்கொண்டு, வந்து சேருவார்.



* நாட்டியரங்கச் செயற்குழு கூட்டம்

சுஜாதா விஜயராகவன், (பிரெயின் பிஹைன்ட் த பிராஜக்ட்- குழுவின் மாண்பு மிகு 'புரட்சித்தலைவி') ஓர் இளம் நடனக் கலைஞரைப் பரிந்துரை செய்தார் என்பதற் காக, உடனே அவர் நாட்டியரங்க நடன விழாவில் பங்குகொண்டுவிட முடியாது. 'சுருதி' ஜானகி, சுருதி சுத்தமாக அந்தக் கலைஞரை எதிர்த்துப் பேசுவார்! மேஜர் ஜெனரல் பாலசுப்பிரமணியம், போர்க்

வருடா வருடம் நடன விழாவுக்கு 'தீம்'' தேர்ந்தெடுப்பதில் சுஜாதா விஜய ராகவன் முன்னணியில் இருப்பார். அப் புறம்தான் ஆரம்பிக்கும் போராட்டம்! நடனக் கலைஞர்கள் யார் யார்? ரிசோர்ஸ் பர்சன் யார்? யார் யாருக்கு விருதுகள்? யாரைத் தலைவராக அழைக்க வேண்டும்? இதில், பூரண சுதந்திரம் என்பார்களே, அதை

முழுதாகக் கொடுப்பார் அமைப்பின் செயலர் கிருஷ்ண சுவாமி.

நாரதகான சபா முன்னால் உள்ள உட்லண்ட்ஸ் ஓட்டலின் சூடான ரச வடையும் காபியும் இல்லாமல், பெரும்பாலும் இந்த ரசமான விவாதங்கள் முடியாது!

வருடா வருடம் தென்னாங்கூரில் நடைபெறும் நாலு நாள் பயிலரங்குக்குத் திட்டம் போடுவது இன்னொரு பெரிய சவால். நடனத்தில் இசையின் பங்கு, பாடல்களை உள்வாங்கிப் புரிந்துகொள்ள வேண்டிய அவசியம் பற்றிய உரைகள், யோகா பயிற்சி, ஒப்பனை வகைகள்... என்று தகுதியான நபர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை அழைத்துச்சென்று வருவது என எல்லாவற்றையும் மகிழ்ச்சியோடும், முகமலர்ச்சியோடும் செய்து முடிப்பார் கிருஷ்ணசுவாமி.

தகுதி இருந்தும் மேடை கிடைக்காத இளம் கலைஞர்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து, பிற சபாக்களையும் அங்கீகரிக்க வைத்ததில் நாட்டியரங்கத்தின் பங்கு அதிகமானது.

பள்ளிக்கூடங்கள், முதியோர்-அனாதை இல்லங்களில் பரதநாட்டிய அறிமுகம் என்

விவாதம்!

கிற 'ஜனபரதம்' நிகழ்ச்சிகள் என அடுத்த அடியை எடுத்து வைத்தது நாட்டியரங்கம்.

வானவில் பண்பாட்டு மையம் நான்கு நாட்கள் நடத்தும் திருவல்லிக்கேணி பாரதி விழாவில், முதல் நாள் நிகழ்ச்சியாக பாரதியாரின் பாடல்களைக் கொண்டு தொகுக்கப்பட்ட நடன நிகழ்ச்சியை நடத்தித் தர வேண்டுமென்று, அட்வகேட் ரவி நாட்டியரங்கத்தைக் கேட்டுக்கொண்டபோது, அந்தப் பணியை ஆர்வத்தோடு ஏற்றுக் கொண்டு தம்முடைய அணுகுமுறையின்



மூலம் ரசிகர்களின் அமோக ஆதரவைப் பெற்றது.

இராம. வீரப்பன், கம்பன் கழக விழாவில், கம்பன் பாடல்களுக்கு நடனமாடச் சொன்னபோது, நாட்டியரங்கம் இன்னொரு புதிய பரிமாணத்தை எட்டியது.

'இலக்கியவீதி' இனியவனின் நண்பரின் மகள் திருமண வரவேற்புக்கு, காயத்ரி பாலகுருநாதன் திருப்பாவை பாடல்களுக்கு நடனம் வழங்கியபோது அந்த நிகழ்ச்சிக்குக் கிடைத்த ஆதரவைக் கண்டு, இப்போது வேறு நண்பர்களின் உறவினர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சிகளுக்கும், 'நாட்டியரங்கம்' நடன நிகழ்ச்சிகள் நடத்தித் தர வேண்டும் என்று முயற்சிகள் மேற்கொண்டு ஒரு புதிய நடன ரசிகர் வட்டம் உருவாக வாய்ப்பு அளித்திருக்கிறார். சைவ, வைணவப் பாடல்களை அவரவர் விருப்பத்துக்கு ஏற்ப அமைத்து, இரண்டு குழுக்கள் இந்தச் சவாலை ஏற்று உழைத்து வருகின்றன. இதில் கலாக்ஷேத்ரா மாணவ மாணவிகள் அதிக அளவில் பங்கு கொள்கிறார்கள்.

'நாட்டியரங்கம்' துவங்கப்பட்டதன் நோக்கங்கள் பலவும் நிறைவேறிவிட்டன என்று அதன் உறுப்பினர்களும் செயலரும் நியாயமான பெருமை கொள்ளலாம்.

– **எஸ்.வி.என்.**

படம் : **யோகா**



இண்டர்வியூவுக்குப்

✱ ஸ்ரீராம்

இளைஞர்களின் இதயத் துடிப்பு போன்றது இன்டர்வியூ. கவனமாகச் செயல்பட்டால்தான் வேலைக்கு உத்தரவாதம். நேர்முகத் தேர்வுக்குச் செல்லும் முன் கவனிக்க வேண்டியவை குறித்து நம்மிடம் விளக்குகிறார் ரைப் பர்ஸனாலிட்டி மைய இயக்குநர் ஸ்ரீராம்.

● எதற்காக ஒரு நிறுவனத்துக்கு இன்டர்வியூவுக்குப் போகிறோம்? அதிக சம்பளமா அல்லது ஏற்கெனவே வேலை செய்யும் நிறுவனத்தில் ஏற்பட்ட அதிருப்தியா? செல்லும் இடத்தில் நம் எதிர்பார்ப்பு என்ன, எதிர்கால ஏற்றம் கருதி வேலை மாறுகிறோமா போன்ற கேள்விகளுக்கெல்லாம் முதலில் தெளிவான பதிலை மனதில் தயார் செய்த பிறகே அப்ளிகேஷனை நிரப்ப வேண்டும்.



● இன்டர்வியூக்குச் செல்பவருக்குக் கண்ணியமான உடை முக்கியம். ஜீன்ஸ ும், டி-ஷர்ட்டும் போட்டுக் கொண்டு போவது உங்களைப் பற்றிய சரியான கணிப்புக்கு வழிவகுக்காது. டை கட்டிப் பழக வேண்டும். மறுநாள் இன்டர்வியூ என்றால், முதல்நாள் இரவு அதற்கு பிராக்டீஸ் செய்யக்கூடாது.

● வேலைக்குச் செல்லவிருக்கும் நிறுவனம் பற்றி முன்பே வலைதளத்தில் தெரிந்துகொள்வது நல்லது. சரியான நேரத்துக்குச் சென்று வரவேற்பறையில் அமர்ந்து விடுங்கள். வீட்டைவிட்டுப் புறப்படுவதற்கு முன்னர் கடைசி நேர பரபரப்பு வேண்டாம். பதட்டம், மூளையைச் செயலிழக்க வைக்கும்.

● உள்ளே போய் அமர்ந்ததும் இன்டர்வியூ நடத்துபவர்களை ஒரு கண்ணசைவில் பாருங்கள். உங்களைப் பற்றி சொல்லிக்

கொண்டிருக்காதீர்கள். பயோ-டேட்டா தான் அவர்கள் கைவசம் இருக்கிறதே! கேட்ட கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்லுங்கள். சம்பளம் பற்றி அவர்களே கேட்கும்போது உங்கள் எண்ணத்தை வெளிப்படுத்துங்கள்.

● 'என்னுடைய பொழுதுபோக்கு...' என்று இஷ்டத்துக்கு ரீல் சுற்றிக்கொண்டிருக்க வேண்டாம். அப்படித்தான் ஒருவர் 'படிப்பது எனது ஹாபி' என்றார். 'எந்த மாதிரி புத்தகங்கள்?' என்றவுடன், 'எல்லாவற்றையும் படிப்பேன்' என்றவரிடம், 'ஷெர்லாக் ஹோம்ஸ்' படிப்பீர்களா? என்றவுடன், 'ஆஹா பிரமாதம் ஆயிற்றே!' என்றார். 'லாரி ஹோம்ஸ்' படித்திருக்கிறீர்களா? என்றார்கள். 'அவருடையது அதைவிடப் பிரமாதம்' என்றார் நேர்முகத் தேர்வுக்கு வந்தவர். பேட்டி கண்டவர்களுக்குச் சிரிப்பு. ஏனென்றால், லாரி ஹோம்ஸ் என்பவர் கிரிக்கெட் வீரர்.

● தேவையில்லாமல் வாக்குறுதிகளை அள்ளி வீசவேண்டாம். 'உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்' என்றால், உங்கள் பலவீனங்களையும் பலத்தையும் சொல்லுங்கள். வரவேற்பறையில் காத்திருக்கும்போது, சுற்றும் முற்றும் கண்களையும் காதுகளையும் திறந்து வைத்து உட்காரவும்.



போறீங்களா..?

நேர்முகத் தேர்வின்போது உங்கள் 'கவனிப்புத்' திறன் பற்றிக்கேள்விகள் வரக் கூடும்.

● இன்டர்வியூ முடியும்போது பேட்டி காண்பவருக்கு, 'சபாஷ், நம்ம நிறுவனத்துக்கு நல்ல ஆள் கிடைத்து விட்டார்' என்ற மனத் திருப்தி ஏற்பட வேண்டும். உங்களுக்கு 'நல்ல நிறுவனம் கிடைத்து விட்டது' என்ற எண்ணம் தோன்ற வேண்டும்.

● விடைபெறும் முன் நன்றி சொல்லிவிட்டு, 'எப்போது நான் தொடர்புகொள்ளலாம்' என்று கேட்டுத் தெரிந்துகொள்ளவும். அவர்கள் பதில் சொல்லும்போது, பாக்கெட்டில் வைத்திருக்கும் சிறிய குறிப்பேட்டில், அவர்கள் சொல்வதைக் குறித்துக் கொண்டால், உங்கள் 'சின்ஸியாரிட்டி' அவர்களுக்குப் புரியும்.

● அடிக்கடி நிறுவனத்தை மாற்றிக் கொண்டிருக்க வேண்டாம். வேலை கிடைக்கவில்லை என்றால், சோர்வடைய வேண்டாம். 'நம்மை வேலைக்கு வைத்துக் கொள்ள இவர்களுக்குக் கொடுத்து வைக்கவில்லை' என்று எண்ணிக் கொள்ளுங்கள்.

- கௌசி



இரவு மணி ஒன்பது. ரேடியோவில் நல்ல கச்சேரி ஏதும் இல்லை. ''அம்மாவுடைய ஸி.டி. போடவா? வருத்தமாயிருக்குமா?'' என்று விஜயாவிடம் கேட்டேன்.

''முன்னேயெல்லாம் அப்படி இருந்தது. இப்ப அம்மா இல்லாட்டாலும், அவ சங்கீதம் நம்மிடம் இருக்கேன்னு ஆறுதலாகத்தான் இருக்கு'' என்றாள்.

ஸி.டி. பிளேயரில் 'பஜன் ஸ்ரீ'' இசைத் தட்டு, எம்.எஸ்.அம்மாவின் தெய்வீக இசைக்குச் சான்று பகன்றுகொண்டிருந்தது. சற்றுநேரத்தில் எனக்கு ரொம்பப் பிடித்த பாட்டான 'கன சியாம ஆயாரி' ஒலித்தது. தமிழ் மீராவில், 'விண்ணும் மண்ணும் நிறைந்த உன் கண்ணன் விக்ரஹம் ஒன்றில் அடங்கினானோ?' என்று தொடங்கும் ஓர் அருமையான தத்துவப் பாடலை மீராவும் (எம்.எஸ்.) ராணாவும் (நாகையா) டூயட் பாடுவார்கள்.



இசை மேதைகள் மதித்த இசை!

மீராவை கண்ணன் நினைவிலிருந்து தன் வசமிழுக்க, ராணா அவள் வழியிலேயே சென்று வாதம் புரிவான். 'பொன்னிலும் மணியிலும் கனியிலும் மலரிலும் இயற்கை அழகிலும் கூட அவன்தானே (கண்ணன்) இருக்கிறான்?' என்று மீராவின் பார்வையை லோகாயதமான விஷயங்களுக்குத் திருப்ப முயற்சி செய்வான். இந்த இடத்தில் ஹிந்தி மீராவில் 'கன சியாம ஆயாரி' டூயட்டாக ஒலிக்கும்.

''ஹிந்தி மீராவில், மீரா பஜன்கள் தவிர தற்காலக் கவிஞர்களின் பாடல்களும் இடம் பெற்றிருந்தன இல்லையா'' என்று கேட்டேன்.

''ஆமாம், 'கன சியாம ஆயாரி' உள்பட ஹிந்தி மீராவுக்குப் பல புதிய பாடல்களை இயற்றியவர் நரேந்திர சர்மா. கவிராஜசர் மான்னே சொல்லலாம் அத்தனை சிறந்த புலவர்'' என்று கூறி வந்த விஜயா, ''உங்களுக்குத் தெரியுமோ, ஹிந்தி மீராவில் பன்னாலால் கோஷ் புல்லாங்குழல் வாசிச்சிருக்கார்'' என்றாள்.

''நிஜமாகவா?'' என்றேன் ஆச்சர்யத்துடன். ''அவர் புகழ்பெற்ற பெரிய

70 முதல் 7 வரை



✱ மீரா படத்தில் எம்.எஸ்ஸுடன் நாகையா...

வித்வான் ஆச்சே!''

''வீட்டுக்கு அம்மாவைப் பார்க்க வந்திருந்தார். பம்பாயில் ஷூட்டிங் நடந்து கொண்டிருந்த நாட்கள், 'எம்.எஸ். பாடி, நடிச்சிருக்கிற சினிமாவில், என்னுடைய குழலோசையும் இடம் பெறணும்' என்று அப்பாவிடம் தன் ஆசையை வெளிப் படுத்தினார்.

''ராணாவின் ராஜ சபைக்கு மீரா, தோழிகள் பூமாரிப் பொழிய மெல்ல நடந்து வந்துகொண்டிருப்பாள். அப்போது கண்ணன் குழலோசை அவள் காதுகளில் ஒலிக்கும். ராணாவையும் தர்பாரையும் தன் வாக்குறுதியையும் மறந்து, திரும்பி, ஒரே ஓட்டமாகக் கோயிலுக்கு ஓடிப்போய் கண்ணன் பாதாரவிந்தங்களில் விழுந்து, ''ஹே ஹரே தயாளா!'' என்று பக்திப் பரவசமாகப் பாட ஆரம்பித்து விடு வாள்... இந்தக் காட்சியில் கண்ணன் குழல் ஒலி மீராவின் காதுகளுக்கு மட்டும் கேட்கிறதல்லவா! அது பன்னாலால கோஷ் வாசித்தது!''

''அப்படியா!'' என்று வியந்தேன். ''அவ்வளவு பெரிய வித்வான், மீராவில் ரெண்டு நிமிஷம் தன் வாசிப்பு ஒலித்தால் போதும்னு நினைச்சிருக்காரே!''

''இதனால் அவருக்குப் புதுசா பேரோ புகழோ கிடைச்சுடலை; சொல்லப் போனால் டைட்டில்ஸ்லகூட அவர் பெயர் கிடையாது!''

ஹிந்தி மீரா ஷூட்டிங் முடிந்து, அதை ராஜாஜியின் அழைப்பின்பேரில் நேருஜி, மவுண்ட்பேட்டன், சரோஜினி நாயுடு போன்ற பெரியோர்கள் பார்த்தார் கள்; பரவசமானார்கள். மீரா திரைப்படம் மூலம் எம்.எஸ். புதிய சிகரங்களை எட்டி னார். அதன் பிறகுதான் படிப்படியாக உலகப் புகழின் உன்னத நிலைகளுக்கு உயர்ந்தார். ஆனால், அதற்கு முன்னதாகவே - திருப்பு முனையாக அமைந்த மீரா திரைப்படத்துக்கு முன்பே - இந்தியாவின் இசை உலகம், எம்.எஸ்.ஸின் இசை, இறைவன் அளித்த வரம் என்று உணர்ந்தி ருந்தது. அதனால்தான் பன்னாலால் கோஷ் போன்ற ஓர் இசைமேதை, இரண்டு நிமிஷங்களாவது தன் குழல் ஒலி மீரா திரைப்படத்தில் இடம் பெற வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்!

''அது சரி, மகாபெரியவாளின் மைத்ரீம் பஜத‌வுக்கு வசந்த் தேசாய் மெட்டு அமைக்க வேண்டும் என்பது யாருடைய யோசனை?'' என்று விஜயாவிடம் கேட் டேன்.

''அப்பாதான், பம்பாய் கண்ணனுக்கு ஃபோன் போட்டு தன் வழக்கமான பாணி யில் உத்தரவு போட்டுட்டார். 'பெரிய மியூஸிக் டைரக்டராச்சே என்ன சொல்

கல்கி ராஜேந்திரன்

வாரோ'ன்னு அவன் கொஞ்சம் தயக்கத்தோடதான் வசந்த் தேசாயிடம் போயிருக்கான். அவரோ சந்தோஷமா சம்மதம் தெரிவிச்சிருக்கார்.

"ஏர் இந்தியாவின் ஜம்போ விமான வெள்ளோட்டத்துக்கு அப்பா - அம்மா போயிருந்தபோது, வசந்த் தேசாய் கண்ணன் வீட்டுக்கு வந்தார். எல்லாரும் ஆர்வத்தோட உட்கார்ந்திருந்தோம்.



✱ பம்பாய் கண்ணன்

"பம்பாய் கண்ணனுக்கு ஃபோன் போட்டு தன் வழக்கமான பாணியில் உத்தரவு போட்டுட்டார்."

"'முதல்ல ஒரு சாந்நித்தியத்தை உருவாக்கணும்'னு ஆரம்பிச்சார் வசந்த் தேசாய். கோயில் மணி ஓசை கேட்கிறது... அப்புறம் 'ஹரி ஓம்! ஹரி ஓம்!' என்று எம்.எஸ்.அம்மா தியானத்தில் ஆழ்ந்து பாடுகிறார்..."

அப்பா இடைமறித்தார். "மிஸ்டர் தேசாய்! நீங்க சொல்றதெல்லாம் ரொம்ப நன்னாயிருக்கு. ஆனா, ஐ.நா. சபைங்கிறது நம்ம ஊர் சபா மாதிரி இல்லே... சரியா ஒன்றரை மணி நேரத்துல நம் சங்கீதத்தின் பலவிதமான பரிமாணங்களையும் உணர்த்தியாகணும்..."

"வசந்த் தேசாய் கொஞ்சம்கூட கோபமோ வருத்தமோ அடையவில்லை. "ஐ அண்டர்ஸ்டாண்ட் (புரியறது; புரியறது)" என்று அமைதியாகச் சொல்லிவிட்டு ஹார்மோனியத்தில் மைத்ரீம் பஜதவுக்கு டியூன் போட்டுக் காட்டினார். அம்மா கிரகித்துக்கொண்டாள்."

"மஹா பெரியவா பாடல் ஐ.நா. சபையில் அற்புதமாக ஒலித்தது. குறையொன்றும் இல்லை பாடலுக்கு இணையாக இன்று அதுவும் எல்லா முக்கிய நிகழ்ச்சிகளிலும் பலராலும் பாடப்படுகிறது. ஒரு சர்வதேச அந்தஸ்த்தைப் பெற்றும்விட்டது" என்றேன் நான்.

"அதிலே இன்னொரு விசேஷமும் இருக்கு" என்றாள் விஜயா.

"இன்னும் என்ன?" என்றேன் ஆச்சர்யத்துடன்.

"வசந்த் தேசாய், 'ஆரம்பத்தில் மணி ஓசை கேட்கிறது ஒரு புனிதச் சூழல் உருவாகிறது' என்றெல்லாம் சொன்னாரில்லையா? அப்பா அப்போதைக்கு அதை மறுத்துப் பேசிவிட்ட போதிலும், அவர் மனசுக்குள் வசந்த் தேசாய் சொன்னது வேலை செய்துகொண்டே இருந்திருக்கிறது! கொஞ்ச நாளைக்குப் பிறகு, "குஞ்சம்மா! மைத்ரீம் பஜத பாடறச்சே கைல ஜால்ரா வெச்சுக்கோயேன்" என்று சொன்னார்! நல்ல நாதம் உள்ள சின்ன ஜால்ராவாக பரிசோதித்துப் பார்த்து வாங்கி வரச் செய்தார்!"


"அதை அம்மா மேடையில் கையில் எடுத்ததுமே மீரா ஞாபகம், கோயிலின் சாந்நித்தியம் எல்லாம் ரசிகர்களுக்கு உடனே ஏற்பட்டுவிடுமே!" என்றேன் நான்.

"அந்த ஜால்ராவை எந்த இடத்தில் வைச்சோம்னு ஞாபகம் இல்லாம, ஐ.நா. சபை மேடையில் மத்தவாளுக்குத் தெரியாம, கையால் துழாவித் துழாவித் தேடிக் கண்டுபிடிச்சது தனிக் கதை" என்று கூறிச் சிரித்தாள் விஜயா.

"இப்போ சிரிக்கிறே... அப்போ...?"

"ஐயோ கேக்காதீங்கோ! உயிர் போய், உயிர் வந்த மாதிரிதான்" என்றாள் விஜயா.

(பேசுவோம்)



ஜோக்ஸ்: பிள்ளை

வாரம் ஒரு பாசுரம் 1

மாலிருஞ்சோலை மலைப்பழம்

நம்மாழ்வாரின் திருவாய்மொழியை நான்கு வேதங்களில் ஒன்றான சாம வேதத்தின் சாரம் என்று கருதுவது வைணவ மரபு. பொதுவாக நம்மாழ்வாரின் பாசுரங்களைத் திராவிட வேதம் என்றே சொல்வார்கள். சாம வேதத்தில் உள்ள கருத்துகள்தான் திருவாய்மொழியில் தோன்றுகின்றன என்று சொல்ல இயலவில்லை.

தமிழின் மிகச் சிறந்த பக்தி இலக்கியங்களில் முதன்மையானது திருவாய்மொழி. இதை இயற்றிய நம்மாழ்வாரின் தமிழ்ப் புலமையும் எளிமையும் நம்மை வியக்கச் செய்யும்; சில உவமைகள் பிரமிப்பூட்டும். 'திரு' என்ற சொல்லுக்கு பல பொருள்கள் உண்டு. வடமொழியில் 'ஸ்ரீ' என்பதுபோல் தமிழில் தேவர்கள், அடியார்கள், ஞான நூல்கள், மந்திரங்கள், புண்ணியத் தலங்கள் முதலிய தனித்தன்மையும் மேன்மையும் உடைய பொருள்களுக்கு முன் மகிமையைக் காட்டப் பயன்படும் சொல்லாகும். திருமால், திருவல்லிக்கேணி, திருவடி, திருவரங்கம் இவற்றில் எல்லாம் பொதுப் பண்பான மேன்மையைக் காட்டுவது 'திரு'.

மதுரைக்கு அருகே உள்ள அழகர் மலையை திருமாலிருஞ்சோலை என்பார்கள். அந்தக் கோயிலைப் பற்றிய நம்மாழ்வார் பாசுரங்களில் இது முக்கியமானது.


''கிளர் ஒளி இளமை கெடுவதன் முன்னம்
வளர் ஒளி மாயோன் மருவிய கோயில்
வளர் இளம் பொழில்சூழ் மாலிருஞ்சோலை
தளர்வு இலர் ஆகில் சார்வது சதிரே''

கிளர் ஒளி என்றால் பளபளவென்று ஒரு கணம் ஜொலிக்கும் யௌவனம். அது தீர்ந்து போவதன் முன் மாயோன் எனப்படும் மகாவிஷ்ணுவின் கோயிலான, பொழில் சூழ்ந்த மாலிருஞ்சோலையை அணுகுவது (சார்வது) சாதுர்யமானது (சதிர்) என்கிறார். இளமை சாஸ்வதமல்ல. நம்மிடம் இளமையும் வலிமையும் மலையேறும் தெம்பும் இருக்கும்போதே பெருமானைப்போய் தரிசித்துவிட்டு வருவது சாமர்த்தியமானது. அப்புறம் உங்களால் செல்லமுடியாமல் போகலாம் என்கிறார்.

நான் முதலில் திருமாலிருஞ்சோலைக்குச் சென்றது இளமையில்தான். ஆழ்வார் காலத்தில்போல் கஷ்டப்பட்டு மலையேறவில்லை. மோட்டார் காரில் சென்றோம்.



பாகம்–2



திரு என்பது, தனித்தன்மையும் மேன்மையும் உடைய பொருள்களுக்கு முன், மகிமையைக் காட்டப் பயன்படும் சொல்லாகும்.

ஒரே ஒரு சங்கடம். கோயிலை அணுகுமுன் குரங்குகள் எங்களைத் தைரியமாக அணுகி, கையில் வைத்திருந்த வாழைப்பழத்தைப் பிடுங்க எங்களைத் துரத்தின. நாங்கள் விடவில்லை; ஓடினோம். வாழைப்பழத்தை மறைத்துக்கொண்டோம். பேசாமல் துறந்திருக்கலாம். ஆழ்வார், 'வீடுமின் முற்றவும்; வீடு செய்து, உம் உயிர் வீடுடையானிடை; வீடு செய்ம்மினே' என்றார். முற்றிலும் விட்டுவிடுங்கள். அப்படிச் செய்து சொர்க்கத்துக்குச் சொந்தக்காரனிடத்தில் சரணடையுங்கள் என்று பாடியிருக்கிறார். நாங்கள் வாழைப்பழத்தைக்கூட விடாமல் ஒளித்து வைத்துக்கொண்டு ஓடினோம்.

(படிக்கலாம்)

கனவின் நுழைவாயில்



திக் திக் அனுபவம்

பார்த்திபன் கனவு –

மூன்றாவது பரிசுப் போட்டிக்குத் தயார்தானே வாசகர்களே? ஆரம்பிக்கலாமா? வணிகன் வேடத்திலிருக்கும் விக்கிரமன், காட்டுக்குள் நுழைந்து கயவர்களிடம் சிக்கி, ஒற்றர் தலைவனால் மீண்டபோது உங்கள் மனசுக்குள் ஏற்படுத்திய 'திக்திக்'கை அனுபவித்தீர்கள்தானே! உங்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த இதுபோன்ற 'திக் திக்' அனுபவத்தை எழுதியனுப்புங்கள்! சுருக்கமாக, சுவையாக இருப்பது அவசியம். கீழ்கண்ட கூப்பனை இணைத்து அனுப்புவது மிக முக்கியம். பரிசுகள் உண்டு. ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

கடைசி தேதி: 23.12.2007

பார்த்திபன் கனவு – பரிசுப் போட்டி – 3

பெயர் : .... வயது: ....

முகவரி : ....

....

....

கல்கியில் மிகவும் பிடித்த பகுதிகள் : ....

....

போரடிப்பதாக தாங்கள் கருதுவது எவற்றை :......................................

....

இன்னும் என்ன எதிர்பார்க்கிறீர்கள் : ....

....

பார்த்திபன் கனவு

5. ஒற்றர் தலைவன்

அமரர் கல்கி

நல்ல சமயத்தில் வந்து தன்னைக் காப்பாற்றிய குதிரை வீரனிடம் விக்கிரமனுக்கு நன்றி உணர்ச்சி உண்டாயிற்று. அவ்வீரனுடைய கேள்விக்கு மறுமொழியாக, ''ஐயா! நான் வியாபாரி. உறையூருக்குப் போவதற்காக இந்தக் குறுக்கு வழியில் வந்தேன். வந்த இடத்தில் இந்த ஆபத்து நேர்ந்தது. நல்ல சமயத்தில் நீங்கள் வந்து உதவி செய்தீர்கள்'' என்றான்.

''வியாபாரியா நீர்? துலாக்கோல் பிடிக்கும் கையா இவ்வளவு லாகவமாய்க் கத்தி சுழற்றுகிறது. நம்ப முடியவில்லை, ஐயா! என்ன வியாபாரம் செய்கிறீரோ?''

''இரத்தின வியாபாரி நான்; கத்தியை உபயோகிக்கவும் பழகியிருக்கிறேன்...''

''அழகுதான்! இரத்தின வியாபாரியா இம்மாதிரி காட்டு வழியில் தனியாகக் கிளம்பினீர்? அதுவும் இராவேளையில்...''

''நரசிம்ம சக்கரவர்த்தியின் புகழைக் கேட்டு ஏமாந்து போனேன். அவருடைய ஆட்சியில் திருட்டுப் புரட்டே கிடையாது என்று, கடல்களுக்கு அப்பால் உள்ள தேசங்களில் எல்லாம் ஜனங்கள் பேசிக் கொள்வதைக் கேட்டிருக்கிறேன்.''

''ஓகோ! வெளிநாட்டிலிருந்து வந்தீரா! நினைத்தேன் அப்போதே. எந்த நாட்டிலிருந்து வருகிறீர், ஐயா?''

''எனக்குச் செண்பகத் தீவு.''


''செண்பகத் தீவா? நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த நாட்டில் இரத்தினங்கள் அதிகம் உண்டு என்று. நல்லது; இரத்தின வியாபாரம் செய்ய வந்த நீர் முதலில் காஞ்சிக்கல்லவா போக வேண்டும்? இவ்வளவு அவசரமாக உறையூருக்குக் கிளம்பியது ஏனோ?''

''சொல்லுகிறேன், ஐயா! ஆனால், தாங்கள் யார் என்பதைத் தெரியப்படுத்தவில்லையே!''

''நான் யாராயிருந்தால் என்ன?''

''என் உயிரைக் காப்பாற்றியவர் யார் என்று நான் தெரிந்துகொள்ள வேண்டாமா?''

''உம்முடைய உயிரை நான் காப்பாற்றவில்லை; நீரேதான் காப்பாற்றிக் கொண்டீர்!



மூன்று பேரை வேலை தீர்த்த உமக்கு, இன்னும் ஒருவனைத் தீர்ப்பது பிரமாதம் ஒன்றும் இல்லை. ஆனாலும், நான் யாரென்று சொல்லுகிறேன். காஞ்சி சக்கர வர்த்தியைப் பற்றி நீர் கேள்விப்பட்டது பொய்யாகப் போயிற்று என்றீரே? அந்தச் சக்கரவர்த்தியின் ஊழியர்களில் ஒருவன் நான்; ஒற்றர் படைத்தலைவன். நீர் தனியாக இந்தக் காட்டு வழியே போகிறீர் என்று எனக்குத் தகவல் வந்தது. ஏதாவது அபாயம் நேரலாம் என்று எதிர்பார்த்து உடனே புறப் பட்டு வந்தேன்...''

''அப்படியா? என்ன விந்தை? சக்கர வர்த்தியின் ஒற்றர் படை அவ்வளவு திற மையாகவா வேலை செய்கிறது? அப்படி யானால், நான் எண்ணியது தவறு...''

''செண்பகத் தீவில் நடக்கும் ஆட்சி யைப் போல் அவ்வளவு திறமையாக இங்கே அரசாங்கம் நடக்காமலிருக்கலாம், ஐயா! ஆனாலும், எங்களால் முடிந்த வரையில் கொலை, களவு நடக்காமல் பார்த்துக்கொண்டு வருகிறோம். பார்க்கப் போனால், இரவில் தனி வழியே வந்து, நாலு உயிர்களின் மரணத்துக்குக் காரணமா யிருந்ததின் பொருட்டு, உம்மை நான் பிடித்துக் கொண்டு போய்ச் சக்கர வர்த்தியின் முன்னால் நிறுத்த வேண்டும்.''



விக்கிரமனுடைய கை அப்போது அவனுடைய வாளை இறுக்கிப் பிடித்ததை நட்சத்திரங்களின் மங்கிய ஒளியில் அவ்வீரன் கவனித்தான்.

''வேண்டாம் ஐயா, வேண்டாம். அவ்விதம் செய்கிற உத்தேசம் எனக்கு இல்லை. அயல்தேசத்திலிருந்து வந்த வரானதால், இந்த வழியின் அபாயம் தெரியாமல் வந்துவிட்டீர். உம்மைப் போல் வேண்டுமென்று விபத்தில் அகப் பட்டுக்கொள்கிறவர்கள் இல்லாமற் போனால், அப்புறம் எங்களுக்குத்தான் என்ன வேலை இருக்கும்? ஒற்றர் படைத் தலைவன்தான் எதற்காக? நல்லது; நான் வந்த வேலை ஆகிவிட்டது. பார்க்கப் போனால் நான் வந்திருக்க வேண்டிய தில்லை. யாருடைய உதவியும் இல்லா மல், உம்மை நீரே காப்பாற்றிக் கொள்ளக் கூடிய வராயிருக்கிறீர். நான் போய் வரு கிறேன்'' என்றான் அவ்வீரன்.

விக்கிரமனுடைய உள்ளம் குழம்பிற்று. அவ்வீரனுக்குத் தான் தகுந்தபடி நன்றி செலுத்தவில்லையென்று அவன் கருதி னான். அன்றியும், அவ்வீரனுடன் இன்னும் கொஞ்சம் சிநேகம் செய்துகொண்டு, உறையூர் போவதற்கு அவனுடைய குதி ரையை வாங்கிக் கொள்ளலாம் என்ற ஆசையும் உண்டாயிற்று. இரவை எங்கே, எப்படிக் கழிப்பது என்ற கவலையும் தோன்றியது.

''அப்படியன்று, அந்தச் சமயத்தில் தாங்கள் வந்திராவிட்டால், ஒருவேளை நான் உயிரிழந்திருப்பேன். எனக்கு உயிர் அளித்தவர் தாங்கள்தான். அதோடு இன்னொரு உதவியும் தாங்கள் எனக்குச்

செய்ய வேண்டும்'' என்றான் விக்கிரமன்.

''என்னிடம் யாராவது உதவி கேட்டால், அதை மறுக்கும் வழக்கம் கிடையாது. உதவி கேட்காதவர்களுக்குக் கொடுப்பதும் இல்லை.''

''உறையூருக்கு நான் அவசரமாய்ப் போக வேண்டியிருக்கிறது. அதற்கு நீங்கள் தாம் உதவி செய்ய வேண்டும். உங்கள்...''

''நீர் கேட்கப் போவது தெரிகிறது. என் குதிரையைக் கேட்கிறீர். ஆனால், இந்த இராத்திரியில் இனிமேல் இக்காட்டு வழியில் போனால், உம்முடன் குதிரையும் துஷ்ட மிருகங்களுக்கு இரையாக வேண்டியதுதான். உம்மைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால், என் குதிரையைப் புலிக்கு ஆகாரமாக்க எனக்கு இஷ்டமில்லை.''

''வேறு என்ன யோசனை சொல்கிறீர்கள்?''

''இங்கிருந்து கொஞ்ச தூரத்தில் ஒரு சிற்பியின் வீடு இருக்கிறது. என்னுடன் வந்தால், அங்கே படுத்திருந்துவிட்டு அதிகாலையில் எழுந்து போகலாம்.''

விக்கிரமன் சற்று யோசித்து, ''அப்படியே செய்யலாம்'' என்றான்.

கீழே கிடந்த மூட்டைகளை எடுத்துக் குதிரை மேல் வைத்துக் கட்டினார்கள். பிறகு, வீரன் குதிரையைப் பிடித்துக் கொண்டு காட்டுக்குள் புகுந்து செல்ல, விக்கிரமனும் அவன் பின்னால் சென்றான்.

6. சிற்பியின் வீடு

அடர்ந்த காட்டின் வழியே ஒரு கொடி வழி சென்றது. பட்டப் பகலிலேயே அந்த வழியில் இருள் சூழ்ந்திருக்கும். நடுநிசியில் கேட்க வேண்டியதில்லை. பெரிய பாதையில் ஆங்காங்கு எட்டிப் பார்த்த நட்சத்திர வெளிச்சம்கூட இந்தக் கொடி வழியில் கிடையாது.

அப்படிப்பட்ட இருளில், முன்பின் தெரியாத யாரோ ஒருவனைப் பின் தொடர்ந்து காட்டுக் கொடி வழியில் செல்லும்போது, விக்கிரமனுடைய தீர நெஞ்சம்கூட 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது. வழியோ மிகவும் குறுகலானது. இருபுறத்திலும் தழைத்திருந்த மரக் கிளைகளும் செடிகளும் கொடிகளும் அடிக்கடி விக்கிரமன் மேல் உராய்ந்தன.

''இங்கிருந்து கொஞ்ச தூரத்தில் ஒரு சிற்பியின் வீடு இருக்கிறது. என்னுடன் வந்தால், அங்கே படுத்திருந்து விட்டு அதிகாலையில் எழுந்து போகலாம்'' என்றான் ஒற்றர் தலைவன்.

வெகு சமீபத்திலிருந்து ஆந்தைகளும் கோட்டான்களும் கர்ணகடூரமான குரலில் சப்தமிட்டன.

எங்கேயோ வெகு தூரத்திலிருந்து ஒரு உறுமல் சப்தம் வந்தது. அதைக் கேட்ட குதிரை கனைத்தது. ஒற்றர் தலைவன் அப்போது குதிரையைத் தட்டிக்கொடுத்தான். அது, ''நான் இருக்கிறேன்; பயப்படாதே!'' என்று சொல்வது போலிருந்தது.

முதலில் குதிரையும், பிறகு ஒற்றர் தலைவனும் பின்னால் விக்கிரமனுமாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

ஓரிடத்தில் ஒரு மரத்தின் வேரில் கால் தடுக்கி விக்கிரமன் கீழே விழுந்தான். ஒற்றர் தலைவன் அவனுடைய கையைப் பிடித்துத் தூக்கிவிட்டான். அப்போது விக்கிரமனுக்கு உண்டான வியப்புக்கு அளவேயில்லை. 'ஆகா! இது 'எத்தகைய இரும்புக்

கை! இந்தக் கையில்தான் எவ்வளவு வலிவு! இந்த ஒற்றர் தலைவன் சாதாரண மனுஷன் இல்லை. மகா வீரனாயிருக்க வேண்டும். சக்கரவர்த்தி ஒவ்வொரு வேலைக்கும் சரியான ஆளைத்தான் தேர்ந்தெடுக்கிறார்' என்று எண்ணினான்.

இன்னும் எவ்வளவு தூரம் இந்தக் கொடி வழியாகப் போக வேண்டுமோ என்று விக்கிரமன் எண்ணிய சமயத்தில், சட்டென்று இருள் சிறிது அகன்று வானம் தெரிந்தது. எதிரில் ஒரு கட்டடம் இருப்பது இலேசாகப் புலப்பட்டது.

''நான் சொன்ன இடத்துக்கு வந்து விட்டோம். இந்த வீட்டில் இரவைக் கழிக்கலாம்; பொழுது விடிந்ததும் நீர் கிளம்பலாம்'' என்றான் ஒற்றர் தலைவன்.

''ஆகட்டும்; ஆனால், இது யாருடைய வீடு? இப்படிப்பட்ட அடர்ந்த காட்டின் நடுவே யார் வீடு கட்டிக்கொண்டு வசிக்கிறார்கள்? எதற்காக?'' என்று விக்கிரமன்



வியப்புடன் கேட்டான்.

"இந்த வீட்டைக் கட்டியவர் இப்போது இல்லை. அவர் இருந்தபோது இங்கே இவ்வளவு அடர்ந்த காடாகவும் இல்லை. அது பெரிய கதை; இராத்திரி உமக்குத் தூக்கம் வராவிட்டால் சொல்கிறேன்" என்றான் ஒற்றர் தலைவன்.

பிறகு, அவன் வீட்டண்டை நெருங்கிக் கதவை இடித்தான்.

வீட்டின் சமீபத்தில் வந்ததும் விக்கிரமன் அது சாதாரண வீடு அல்லவென்பதைக் கண்டான். சித்திர மண்டபமோ, அல்லது சிற்பக் கோயிலோ என்று சொல்லும்படியிருந்தது.

சற்று நேரத்துக்கெல்லாம் கதவு திறந்தது. கதவைத் திறந்தவள் ஒரு தொண்டுக் கிழவி. அவள் கையில் ஒரு கல் விளக்கு இருந்தது. கிழவி கதவைத் திறந்ததும், முன்னே நின்ற ஒற்றர் தலைவனை



வியப்புடன் ஏறிட்டுப் பார்த்தாள். அப்போது அவனுடைய புருவங்கள் சிறிது மேலே சென்றன.

இடது கையின் ஆட்காட்டி விரலை அவன் இலேசாகத் தன் உதடுகளின் மேலே வைத்து உடனே எடுத்துவிட்டான். அந்தச் சமிக்ஞையின் கருத்தைக் கிழவி உணர்ந்திருக்க வேண்டும். உடனே அவளுடைய முகத்திலிருந்த வியப்புக்குறி மாறிவிட்டது.

"வாருங்கள், ஐயா!" என்று சொல்லிவிட்டு, கிழவி கதவை நன்றாய்த் திறந்தாள்.

இருவரும் உள்ளே பிரவேசித்தார்கள். அந்த வீட்டுக்குள் அடிக்கடி சென்று, பழக்கப்பட்டது போல் குதிரை உள்ளே நுழைந்தது. அது நேரே கூடம், முற்றம் எல்லாவற்றையும் தாண்டிப் பின்புறக் கதவண்டை போய் நின்றது. கிழவி அங்கே சென்று அந்தக் கதவையும் திறந்தாள். குதிரை தானாக அதன் வழி புகுந்து சென்றது.

> **சற்று நேரத்துக்கெல்லாம் கதவு திறந்தது. கதவைத் திறந்தவள், ஒரு தொண்டுக் கிழவி. அவள் கையில் ஒரு கல் விளக்கு இருந்தது.**

ஒற்றர் தலைவன் அப்போது விக்கிரமனைப் பார்த்து, "இந்தக் குதிரையின் அறிவை என்னவென்று சொல்வது? முன்னொரு தடவை இங்கே நான் வந்தபோது பின்கட்டில் குதிரையைக் கட்டியிருந்தேன். இம்முறை அதுவே தன் இருப்பிடத்தைத் தேடிக்கொண்டு போகிறது. நானும் போய் அதைக் கொஞ்சம் கவனித்துவிட்டு வருகிறேன். நீர் இங்கேயுள்ள சிற்ப வேலைகளைப் பார்த்துக்கொண்டிரும்" என்று சொல்லிவிட்டுப் பின் கதவு வழியாகப் புகுந்து சென்றான். கிழவியும் கல் விளக்குடன் அவனைத் தொடர்ந்தாள்.

சுவரிலிருந்த மாடத்தில் நந்தா விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அதன் வெளிச்சத்தில் விக்கிரமன் சுற்றுமுற்றும் பார்த்தான். அது நிச்சயமாக வீடு அல்ல - சிற்ப மண்டபம்தான் என்று அவனுக்குத் தோன்றிற்று. எங்கே பார்த்தாலும் அற்புதச் சிற்பத் திறமை வாய்ந்த சிலைகள் காணப்பட்டன. சுவர்களில் பல வர்ணங்களில் தீட்டப்பட்டிருந்த சித்திரங்கள் காட்சியளித்தன. அவை வரையப்பட்டு அநேக வருஷங்கள் ஆகியிருக்க வேண்டுமென்றாலும், ஓவியங்களின் உயிர்க்களை சிறிதும் குன்றவில்லை.

சிலைகளிலும் சித்திரங்களிலும் முக்கியமாக ஒரு பெண்ணின் உருவம் அதிகமாய்க் காணப்பட்டது. அந்த உருவத்தில் தெய்வீக சௌந்தரியத்தின் களை தோன்றிற்று. நாட்டியக் கலைக்குரிய பலவிதத் தோற்றங்களிலும் பாவங்களிலும், அந்தப் பெண் உருவத்தின் சிலைகளும் ஓவியங்களும் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றின் அழகையும், கலைத் திறனையும் கண்டு விக்கிரமன் பிரமிப்பை அடைந்தான். உறையூர் சித்திர மண்டபத்திலும் மாமல்லபுரத்துக் கலை விழாவிலும் தான் முன்னர் பார்த்த சித்திரங்கள், சிற்பங்கள் எவையும் இந்தப் பாழடைந்த மண்டபத்துக்குள் மறைந்து கிடக்கும் சிற்பங்களுக்கு, அருகில்கூட வர

முடியுமா என்று வியந்தான். இவற்றையெல்லாம் அமைத்த மகா சிற்பி எவனோ என்று அறிந்துகொள்ள அவன் துடிதுடித்தான்.



இதற்குள் ஒற்றர் தலைவன் குதிரையின் போஷாக்கைக் கவனித்துவிட்டு உள்ளே வந்தான். விக்கிரமன் அவனை நோக்கி, "ஐயா! என்ன ஆச்சரியமான சிற்பங்கள் இவை! எந்த மகாசிற்பி இவற்றை அமைத்தவன்? தெய்வீக அழகு பொருந்திய ஒரு பெண்ணின் உருவம் இங்கே அதிகமாய்க் காணப்படுகிறது! அந்தப் பெண் உண்மையாக இருந்தவளா? அல்லது சிற்பியின் சிருஷ்டியா? இந்த அற்புதச் சிற்பங்கள் எல்லாம் ஏன் இந்த இருண்ட காட்டுக்குள் கிடக்க வேண்டும்? ஏன் எல்லா ஜனங்களும் வந்து பார்க்கும்படி செய்யக் கூடாது? இதை எல்லாம் எனக்கு விவரமாய்ச் சொல்ல வேண்டும்" என்றான்.

"நான்தான் சொன்னேனே, அது பெரிய கதை என்று. மிஞ்சியுள்ள இரவைத் தூக்கமின்றிக் கழிக்க உனக்கு இஷ்டமிருந்தால், சொல்கிறேன். எனக்குப் பசி பிராணன் போகிறது. இதோ பாட்டி பொரிமாவும் வெல்லமும் கொண்டு வருகிறாள். முதலில் சாப்பிடுவோம்" என்றான் ஒற்றர் தலைவன்.

அவ்விதமே இருவரும் சாப்பிட்டார்கள். சாப்பிடும்போது, "தங்கள் பெயர் இன்னதென்று எனக்குச் சொல்லவில்லையே" என்றான் விக்கிரமன்.

"என் பெயர் வீரசேனன். உம்முடைய பெயர்?"

விக்கிரமன் சிறிது வியப்புடன், "என் பெயர் தேவசேனன்" என்றான்.

"ரொம்ப நல்லது; நம் இருவருக்கும் பெயர் ஒற்றுமை இருக்கிறது. ஆகையால், நீர் மனம்விட்டு என்னிடம் பேசலாம். உறையூருக்கு நீர் இவ்வளவு அவசரமாகப் போக விரும்பிய காரணம் என்ன? இரத்தின வியாபாரம் செய்வது உமது நோக்கமாயிருந்தால், முதலில் காஞ்சி நகருக்கல்லவா போகவேண்டும்?"

ஒற்றர் தலைவனிடம் நன்றியும் அன்பும் கொண்டிருந்த விக்கிரமனுக்கு இப்போது சந்தேகமும் பயமும் தோன்றின. ஒருவேளை இவன் நம்முடைய உண்மையைக் கண்டுபிடித்துவிட்டால்...? கொஞ்சம் ஜாக்கிரதையாகவே நடந்து கொள்ள வேண்டும்.

"என்னுடைய தாயார் உறையூரில் இருக்கிறாள். அவளைப் பார்க்கும் ஆவலில்தான் சீக்கிரமாய்ப் போக விரும்புகிறேன்."

"இதென்ன? நீர் செண்பகத் தீவைச் சேர்ந்தவர் என்றல்லவா சொன்னீர்."

"என்னுடைய சொந்த ஊர் உறையூர் தான்; சில வருஷங்களுக்கு முன்பு பொருள்

இராஜ குடும்பத்தைப் பிரஸ்தாபித்தால், ஒருவேளை ராணி அருள்மொழியைப் பற்றி வீரசேனன் ஏதாவது சொல்லக் கூடுமென்று விக்கிரமன் எதிர்பார்த்தான்.

தேடுவதற்காகச் செண்பகத் தீவு சென்றேன். உறையூர் பல்லவ ராஜ்யத்துடன் சேர்ந்து விட்ட பிறகு, அதன் பழைய செழிப் பெல்லாந்தான் போய் விட்டதே? இராஜ குடும்பம் இல்லாத ஊரில், இரத்தின வியாபாரம் என்ன நடக்கும்?''

இராஜ குடும்பத்தைப் பிரஸ்தாபித்தால், ஒருவேளை ராணி அருள்மொழியைப் பற்றி வீரசேனன், ஏதாவது சொல்லக் கூடுமென்று விக்கிரமன் எதிர்பார்த்தான். ஆனால், அவனுடைய எண்ணம் நிறைவேறவில்லை. அதன்பின் வீரசேனன் சாப்பிட்டு முடியும் வரையில் மௌன விரதத்தை மேற்கொண்டிருந்தான்.

சாப்பாடு முடிந்த பிறகு, விக்கிரமன் மறுபடியும் அந்தச் சிற்ப மண்டபத்தின் கதையைச் சொல்லும்படி கேட்டான்.

''ஐயா தேவசேனரே, உமக்கு மரணத்தில் நம்பிக்கை உண்டா?'' என்று ஒற்றர் தலைவன் கேட்டபோது, விக்கிரமனுக்கு ஒன்றும் புரியவில்லை.

''இதென்ன கேள்வி? மரணத்தில் நம்பிக்கை உண்டா என்றால்?''

''அதாவது மனிதர்கள் உண்மையில் மரணமடைகிறார்கள் என்பதாக நீர் நினைக்கிறீரா? 'உயிர் போய்விட்டது' என்று நாம் சொல்லும்போது, உண்மையில் உயிர் போகிறதா? அல்லது உடல் மட்டும் போய் உயிர் இங்கேயே இந்த உலகத்திலேயே, சுற்றிக்கொண்டிருக்கிறதா? இறந்து போனவர்கள் நம்மைப் பற்றி நினைக்கிறார்களா? நம்மைப் பார்க்க வருகிறார்களா? நம்முடைய நடவடிக்கைகளை அவர்கள் கவனிப்பதுண்டா?''

விக்கிரமனுக்கு ஏனோ தன்னுடைய தந்தை பார்த்திப மகாராஜாவின் நினைவு வந்தது. அவருக்குத் தான் கொடுத்த வாக்குறுதியும் ஞாபகம் வந்தது. அவர் இப்போது இவ்வுலகில் இருந்து தன்னுடைய செயல்களைக் கவனித்துக் கொண்டு வருகிறாரா?

''எனக்கும் உங்களைப் போல் சில சமயம் தோன்றுவதுண்டு. அந்தச் சந்தேகத்தைத் தீர்ப்பாரைத்தான் காணோம்.''

''எனக்கென்னவோ, மரணம் என்பதே பொய் என்று தோன்றுகிறது. மரணத்துக்காக விசனப்படுவது பெரும் மூடத்தனம் என்று நினைக்கிறேன். இதோ இந்த வீட்டில் முப்பது வருஷத்துக்கு முன்னால், ஆயனச் சிற்பியும் அவருடைய மகள் சிவகாமியும் வாழ்ந்தார்கள். அப்போதெல்லாம் இங்கே ஜல்ஜல் என்ற சதங்கை ஒலியும், கல்கல் என்ற கல்லுளி ஒலியும் மாறிமாறிக் கேட்டுக்கொண்டிருக்கும். சிவகாமி அற்புத நடனம் ஆடுவாள். அவளுடைய நடனத் தோற்றங்களைப் பார்த்துப் பார்த்து ஆயனச் சிற்பி சித்திரம் எழுதுவார்! சிலைகள் அமைப்பார்!''

''ஒகோ! இந்தத் தெய்வீகக் களையுள்ள பெண் அந்தச் சிவகாமிதானா?''

''ஆமாம்; அப்போது நான் இங்கே அடிக்கடி வருவதுண்டு. மகேந்திர சக்கரவர்த்தியின் காலம்... அவருடைய புதல்வருக்கு அச்சமயம் உம்முடைய வயதுதான் இருக்கும். அவருடன் நரசிம்மவர்மருடன்

- நானும் வருவேன். தூரத்தில் வரும்போதே, இந்த வீட்டுக்குள்ளிருந்து சதங்கையின் ஒலி கிளம்புவது கேட்கும். ஆயனரும் சிவகாமியும் இப்போது இங்கே இல்லை என்று என்னால் நம்பவே முடியவில்லை. அவர்கள் இன்னும் இங்கே இருக்கிறார்கள் என்றே நினைக்கிறேன். இதோ! உற்றுக் கேட்டால், சதங்கையின் ஒலியும் கல்லுளியின் ஒலியும் என் காதுக்குக் கேட்கின்றன...''

விக்கிரமனுடைய ஆவல் அளவுகடந்து பொங்கிற்று. ஆயனரையும் சிவகாமியையும் பற்றி விவரமாய்ச் சொல்ல வேண்டுமென்று வீரசேனரை வேண்டிக்கொண்டான். அவரும் விவரமாகச் சொன்னார். ஆயனருடைய அபூர்வ சிற்பத் திறமையைக் குறித்தும், அவருடைய பெண்ணின் அற்புத சௌந்தரியத்தைப் பற்றியும், அவளுடைய நடனக் கலைத் திறனைப் பற்றியும் சொன்னார். நரசிம்ம சக்கரவர்த்தி, இளவரசராயிருந்த காலத்தில் அவருக்கும் சிவகாமிக்கும் ஏற்பட்ட தெய்வீகக் காதலைப் பற்றி லேசாகக் குறிப்பிட்டார். வடக்கேயிருந்து இராட்சதப் புலிகேசி படையெடுத்து வந்ததினால் அந்தக் காதல் தடைப்பட்டது பற்றியும், சிவகாமியைப் புலிகேசி சிறைப்பிடித்துச் சென்றது பற்றியும் விவரித்தார். சிவகாமியை விடுவிக்க நரசிம்மர் செய்த முயற்சிகளையும் சிவகாமியின் சபதத்தையும், அதை நரசிம்மர் நிறைவேற்றி வைத்ததையும், இவ்வளவுக்கும் பிறகு சிவகாமி, தன்னுடைய காதல் பூர்த்தியாக முடியாத காதல் என்பதை உணர்ந்து நெஞ்சு உடைந்ததையும் பற்றிச் சொன்னார்.

கதையைக் கேட்டுக்கொண்டு வரும்போது, விக்கிரமன் பல தடவை கண்ணீர் விட்டுவிட்டான். நரசிம்ம சக்கரவர்த்தியின் மேல் அவனுக்கிருந்த மதிப்பு பன்மடங்கு உயர்ந்தது. அவரிடம் அவனுக்கு அபிமானமே உண்டாகிவிட்டது. பார்த்திப மகாராஜாவுக்குத் தான் கொடுத்த வாக்குறுதியை நினைத்துக்கொண்டு, நரசிம்மர் தன்னுடைய குலப்பகைவர் என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டான்.

கதை முடிந்த சமயம், வெள்ளி முளைத்துவிட்டது. ஒரு நாழிகைப் பொழுதுதான் அவர்கள் தூங்க முடிந்தது. பட்சிகளின் உதய கீதத்தினால் எழுப்பப்பட்ட விக்கிரமன் கண் விழித்தபோது, முதல் நாள் இரவின் சம்பவங்கள் எல்லாம் கனவோ என்ற சந்தேகம் உண்டாயிற்று. சுற்றுமுற்றும் பார்த்து, ''கனவல்ல; எல்லாம் உண்மைதான்'' என்று நிச்சயம் பெற்றான்.

''ஐயா, தேவசேனரே! குதிரை சிரம பரிகாரம் செய்துகொண்டு சித்தமாயிருக்கிறது. நம்மைப் போல் அது இரவில் கண் விழிக்கவில்லையல்லவா? நீர் காலைக் கடன்களை முடித்ததும் உறையூருக்குக் கிளம்பலாம்'' என்று ஒற்றர் தலைவனின் குரல் வெளியிலிருந்து கேட்டது.

அவ்விதமே காலைக் கடன்கள் முடிந்து, கிழவி அளித்த எளிய உணவையும் உட்கொண்டபின் விக்கிரமன்



வீரசேனரிடம் விடைபெற்றான். அப்போது அவன், ''ஐயா! உமக்கு நான் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறேன். என் உயிரைக் காப்பாற்றியதற்குப் பிரதி ஒன்றும் செய்ய முடியாது. ஆனாலும், குதிரையை இலவச மாகப் பெற்றுக்கொள்ள எனக்கு விருப்ப மில்லை. குதிரைக்கு ஈடாக இந்த இரத்தி னங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்'' என்று ஒரு கைப்பிடி இரத்தினங்களை அள்ளிக் கொடுத்தான்.

''நீர் சொல்வது தவறு. என் அருமைக் குதிரையை நான் உமக்குத் தானம் செய்ய வில்லை. இரவலாகத்தான் கொடுத்திருக் கிறேன். உறையூரில் உமது காரியத்தை முடித்துக்கொண்டு, இதே இடத்தில் வந்து திருப்பிக் குதிரையை ஒப்புவிக்க வேண் டும்'' என்றான் ஒற்றர் தலைவன்.

''குதிரையை இலவசமாகப் பெற்றுக் கொள்ள எனக்கு விருப்பமில்லை. குதிரைக்கு ஈடாக இந்த இரத்தினங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.''



''அப்படியே செய்கிறேன்; ஆனாலும் என்னுடைய நன்றிக்கு அறிகுறியாக இந்த இரத்தினங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்'' என்றான் விக்கிரமன்.


வீரசேனன் அதற்கிணங்கி இரத்தினங் களைப் பெற்றுக்கொண்டான்.

விக்கிரமன் குதிரை மீதேறியதும், ஒற்றர் தலைவன் குதிரையைத் தட்டிக் கொடுத்து, ''ஐயா! இந்தக் குதிரை அடிக் கடி உறையூருக்குப போய்ப் பழக்க மானது. அதற்கே பாதை நன்றாகத் தெரி யும். அதன் வழியே விட்டுவிட்டால் உம் மைக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடும். நீர் வழி விசாரிக்கவேண்டிய அவசியமே இல்லை'' என்றான்.

குதிரை காட்டுப் பாதையில் போகத் தொடங்கியது. சிற்பியின் வீடும் ஒற்றர் தலைவனும் மறையும் வரையில் விக்கிர மன் திரும்பிப்பார்த்துக்கொண்டே போனான். காலை வெளிச்சத்தில் அந்த ஒற்றர் தலைவனைப் பார்த்தபோது, ஆஜானுபாகுவான அவனது கம்பீரத் தோற்றமும் முகப்பொலிவும் விக்கிரமனு டைய மனத்தைப் பெரிதும் கவர்ந்தன. வெகுநேரம் வரையில் அந்தத் தோற்றம் அவனுடைய மனத்தைவிட்டு அகல வில்லை.

(தொடரும்)

அருள்வாக்கு



சாஸ்வத ஆனந்தம்!

வெளிப்பொருள் அதுவாகவே ஆனந்தத்தைத் தரவில்லை என்பதைக் கொஞ்சம் ஆலோசித்தாலும் புரிந்துகொண்டு விடலாம். காஷ்மீர் சால்வை அதுவே ஆனந்தம் தருவது என்றால், எக்காலத்திலும் ஒருத்தனுக்கு இதமாகத் தானே இருக்கவேண்டும்? ஆனால், அது எத்தனை விலை உயர்ந்ததாய் இருந்தாலும், எத்தனை மழமழப்பாய் இருந்தாலும் நல்ல கோடை காலத்தில் மேலே பட்டாலே தாங்காமல் தூக்கி எறிகிறோமே! அதனால், ஆனந்தம் அதிலேயே இல்லை என்று புரியத்தானே செய்கிறது? ரொம்பவும் அழகான ஒரு ராகத்தை நல்ல சாரீரமும் ஞானமும் உள்ள பாடகர் ஆலாபனை செய்கிறாரென்பதால், அது எப்போதும் ஆனந்தமளிப்பதாக உள்ளதா என்றால் - நமக்கு ரொம்பப் பிரியமானவர் 'போய்' விட்டார் என்று சேதி வருகிறது; அப்போது ரேடியோவிலே அந்த ராகத்தை அந்த வித்வான் தேவகானமாகப் பாடுகிறாரென்றால் ஆனந்தமா தருகிறது? கேட்கப் பிடிக்காமல் நிறுத்தித்தானே விடுகிறோம்? காய்ச்சல்காரனுக்கு நல்ல பக்ஷணமோ, ஐஸ்க்ரீமோ ஆனந்தம் தருமா? சொல்லிக்கொண்டே போகலாம் - ஆனந்தம் வெளிப் பொருளில் இல்லை என்று காட்டுவதற்கு. ஒரு ஜீவனுடைய மனசு, வெளி விஷயங்களில் கலப்பதால்தான் ஆனந்தம் உண்டாகிறது. இவன் மனசு எதிலும் கலக்காமல் தூங்கிக் கொண்டிருக்கும்போது, எந்தப் பொருளாவது ஆனந்தம் தருகிறதா? இந்த மனசின் ஆனந்தமோ நிலையாய் இருப்பதேயில்லை. இதற்கு எத்தனை ஆனந்தமோ அதைப்போல ஆயிரம் மடங்கு அழுகையும் உண்டு. இடுக்குவழியாகத் துளித்துளி வெளிச்சத்தை உள்ளே விட்டு, பாக்கி முழுக்க இருட்டையே தருகிற பந்தல் மாதிரி, துளித்துளி ஆனந்தத்தோடு ஏராளமான துக்கத்தையே மனசு தருகிறது. இதன் க்ருத்ரிமம் இல்லாமல், இதற்கு ஆதாரமான ஆத்மாவுக்குப் போனால்தான் சாஸ்வத ஆனந்தம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

வே. இராமசாமி



7

வெள்ளைப்

ஒரு நாள் வெள்ளைப்பட்டான் கோயில்ல பூலிப்பகடை காத்தாட படுத்திருந்தான். அங்க வந்து பகடைகிட்ட பைய பேச்சுக் குடுத்தார் அல்லாத்தன். மனசுக்குள் பூலிப் பகடையின் சாமியைப் பங்கு கேக்க திட்டம். பொத்தாம் பொதுவா வேற விஷயங்களைப் பேசிட்டு, சாமிக்கு வந்து நின்னார். ''ஏம்ப்பா பகடை, சாமிக்குப் பூசை முடிஞ்சுதா? இல்ல இன்னும் இருக்கா? இந்த வட்டம் நானும் சேந்துக்கிடுதனே. படையலுக்கு நானும் பொருள் வாங்கியாறேன்; நீயும் கொஞ்சம் வாங்கியா. ரெண்டு பேருமா கும்பிடுவோம். என்ன நான் சொல்றது?''

படுத்திருந்த பூலிக்குக் கோவம் வந்து பொசுக்னு எந்திரிச்சு உக்காந்துட்டான். ''சரியாப் போச்சய்யா... சரியாப்போச்சு. இதென்ன சாமின்னு நினைச்சயா இல்ல மாத்தி மாத்திப் பிடிக்கிற பீடின்னு நினைச்சயா? இந்த மாதிரி கெட்ட எண்ணத்தோட கோயிலுக்கு வராதே. ஏதோ அவசரத்துக்கு உன்னைய பூசை பண்ணச் சொன்னா இப்படியுமா அடிமடில கை வைக்கறது''ன்னு கத்திட்டான். அதுக்கு, ''அப்படி என்னப்பா ஒஞ்சாமி, பொல்லாத சாமி''ங் காரு அல்லாத்தன்.

''சொல்தம்ப்பா, சொல்தன். எஞ்சாமி வெள்ளைப்பட்டானுக்கு ஒரு பெரிய கதையே இருக்கு. அதைக் கேட்டேன்னா சாமியும் வேண்டாம்; கீமியும் வேண்

டாம்னு போயிருவே.

அந்தக் காலத்தில் யாருமில்லாத அநாதையா எங்க ஊருக்கு வந்திருக்காரு வெள்ளைப்பட்டான். ஊர்க்காரங்கள்லாம் சேந்து அவரை ஊர் மாடு மேய்க்கப் போட்டுட்டாங்க. சரின்னு அவரும் மாடு மேச்சிட்டுக் குடுக்கறதை வாங்கித் தின்னுட்டுக் காலத்தைக் கழிச்சுருக்கார்.

அவர் வெள்ளனாங்காட்டிக்கு மாடு அவுத்தார்னா பொழுதுரத்தான் பத்தியாரு வார். கூடவே, ஊர்ச்சனங்க சொல்லுற எடுபிடி வேலைகளைத் தட்டாமச் செய்வார். நல்ல நாள் வந்தா புதுத் துணிமணிகளும் பலகாரங்களும் தருவாங்க. சொன்னதைச் செஞ்சிட்டு, குடுக்கறதை வாங்கிட்டுப் பேசாமல் அவரு இருக்கிற எடந்தெரியாம இருந்தாரு.

எல்லாம் நல்லமுறையா நடக்கையில ஒரு நாள் வெள்ளைப் பட்டான் ஊர்மாடுகளை மேய்க்கிறதுக்குப் பத்திட்டுப்

பட்டான்


போனார். மந்தைக்குப் பின்னாடி ஓர் எருமை மட்டும் கனைச்சிட்டு வரவா, வேண்டாமான்னு நடந்து வருது. மாட்டைப் பாத்ததும் வெள்ளைப்பட்டானுக்குத் தெரிஞ்சிருச்சு. புதுசா கன்னு ஈண்ட மாடு. புதுசா ஈத்துப்போட்ட ஆடு, மாடு எதுனாச்சலும் அம்புட்டுச் சீக்கிரமா காட்டுக்கு வராது. அடிச்சு அடிச்சு விரட்டுனாத்தான் போவும். போனாலும், குட்டிக் கன்னுல தட்டுப்படாத தொலைவு வரை போகவே போகாது.

கனைச்சிக்கிட்டு வந்த மாடு கிட்டத்துல வந்தவுடனயே பாத்தா ஒரு காம்புல பால் கசியுது. கன்னுக்குட்டியும் குடிக்காம பாலையும் பீச்சாம விட்டுட்டாக போல. வெள்ளைப்பட்டான் அந்த மாட்டை அணைச்சு ஹாய்னு அமத்தி மந்தைல சேத்துக்கிட்டார். வெயிலு மெல்ல அப்பந்தான் ஏறுது. இன்னும் செத்த நேரங் கழிச்சி கள்ளுன்னு முறுக்கிக்கிட்டு அடிக்கும்.

உச்சிவெயில் நேரம். வெயிலு சும்மாத் தீப்பிடிக்கு. எல்லா எருமைகளும் 'கறிச் முறிச்'னு மேயுதுக. பால் கசியும் எருமை மட்டும் மேயாமல் மடியைச் சுருக்கி வானத்தைப் பாத்து முனங்குது. வெள்ளைப்பட்டான் அதை ஒதுக்கிப் பத்திட்டுப் போய் பக்கத்துல இருந்த பாறைத் திட்டில் நிப்பாட்டி கருவமரத்தடியில நின்னார். காம்புல இருந்து பால் கசிஞ்சு பாறைல தேங்குனது. வெயிலுக்கும் பாறைச் சூட்டுக்குமா செத்தவடம் போனதும் பால் அப்பம்கணக்கா ஆயிருச்சு. அந்தப் பால் சுவடை எடுத்து வெள்ளைப்பட்டான் திம்பார். இது அவர் வழக்கமாகச் செய்யற ஒன்னுதான். ஆனா, யாருக்கும் தெரியாது.

நல்லா ஆற அமைதியா மாடுகள் மேயும்போது, பால் கசிஞ்ச மாடு, கன்னுக்குட்டிப் பாசத்துல வீட்டுக்கு ஓடிருச்சு. தொழுவில் போய் கன்னுக்குட்டிய நக்கிக் குடுத்துட்டு நிக்குது. கன்னு எக்கி எக்கி, சப்பு சப்புன்னு பாலைக் குடிக்குது. மாடு 'கேஸிகேஸின்'ன்னு இளைக்குது. வெள்ளைப்பட்டான் வந்து மாட்டுக்கு ரெண்டு பூசை வச்சுக் காட்டைப் பாத்து விரட்டினார். எருமை பழைய படியும் காட்டுக்கு ஓடுனது.

பால்கசிஞ்ச மாட்டுக்காரி யாருன்னா? வெள்ளையம்மா. அவ அம்மியில எதையோ சரட் சரட்னு அரைச்சிட்டிருக்கா. ஊர்ல ஒரு ஈங்குஞ்சியும் காணலை. வெள்





ளைப்பட்டான் தாகத்துத் தண்ணீர் குடிக்க, வெள்ளையம்மா வீட்டு வாசல்ல நின்னு, ''கொஞ்சம் தண்ணி ஊத்துங்க தாயி''ன்னார். வெள்ளையம்மா அம்மி அரைக்கிறத விட்டுவிட்டு வந்து பட்டானுக்குத் தண்ணி ஊத்தினாள். அப்போ, அம்மிலருந்து அரளி விதை வாசம் வருது. வெள்ளைப்பட்டான், 'ஏன் தாயி அரளி விதையை அரைச்சுக் குடிச்சுச் சாகத் துணிஞ்சிட்டியா'ன்னு ஆறுதலா பேசிக்கிட்டே 'எல்லாரும் ஓடியாங்க'ன்னு சத்தம் விட்டார். ஊர்ல இருந்து ஒண்ணு ரெண்டு கிழங்கட்டைக வந்து விவரம் தெரிஞ்சு, வெள்ளையம்மாளை வசவு உரிச்சாங்க. எல்லாரும் வெள்ளையனைப் பாராட்டுனாங்க. காட்டுக்குப் போயிட்டார்.

வெள்ளையம்மாளுக்கு வயசுக்கு வந்து ரொம்ப நாளா கல்யாணம் நடக்கலை. முடியெல்லாம் நரை விழுந்திருச்சு. நாம இருந்து என்ன செய்யப் போறமுன்னு அரளி விதையை அரைச்சுக் குடிக்கப் போனாள். அப்பத்தான் வெள்ளைப்பட்டான் காப்பாத்துனார். அதுல இருந்து அவுக ரெண்டு பேருக்கும் பிரியக்கால் உண்டாயிருச்சு. யாருக்கும் தெரியாம 'களவு' செஞ்சாக. அவருக்கு நெல்லுச்சோறும் கடச்சுடக் கருவாட்டுக்கொழம்பும் செஞ்சு குடுத்தாள் வெள்ளையம்மா. இவர் அவளுக்கு யாருக்கும் கிடைக்காத பால் சுவடைக் காட்ல இருந்து கொண்டாந்தார்.

இது ஊர்நாட்டுக்குத் தெரியாம இருக்குமா? தெரிஞ்சிருச்சு. காட்ல மாடு மேச்சிட்டு இருக்கும்போது வெள்ளையனைக் கழுமரத்தில் தூக்கிச் சொருகிட்டாங்க. ஆனா, செத்துட்டான்னு விட்டுட்டுப் போய்ட்டாங்க. வெள்ளைப்பட்டான் உயிர் பிரியாம கழுமரத்தில் இருந்து உருவிவிழுந்து உருண்டுகிட்டே ஊருக்குள்ள வர்றார். வெள்ளையம்மா வெள்ளையம்மான்னு நாக்குக் குழறுது. தண்ணி தண்ணின்னு கேக்கார். யாரும் தண்ணியும் குடுக்கலை.

சேதி தெரிஞ்சு வெள்ளையம்மா மண் பானைல தண்ணியத் தூக்கிட்டு ஓடியாந்தாள். அப்படி ஓடியாரும்போது பானை விழுந்து ஒடைஞ்சிருச்சு. ஊர்க்காரங்க வேற அருவா கம்போட விரட்டினாங்க. வெள்ளையம்மாளும் வெள்ளைப்பட்டானும் இப்ப கோயில் இருக்கிற வயக்காட்டுத் திட்டுல வந்து சந்திச்சுக்கிட்டாக. ஊர்க்காரங்க நம்மள வாழவிடமாட்டாங்களேன்னு செத்துப் போக முடிவு பண்ணினாக. ஒருத்தர் குரல் வளையை ஒருத்தர் கடிச்சு ரத்தம் குடிச்சிட்டுச் செத்துப்போயிட்டாக. அவுகளை யாரும் புதைக்கக்கூட இல்லை. பெறாந்து, காக்கான்னு பறவைகளும், எலிகளும் கொத்திக் குதறிப் போட்டு விட்டன. அந்த இடத்துலதான் வெள்ளைப்பட்டான் கோயில் கட்டி எங்க சனங்க கும்பிட்டுக்கிட்டு வர்றோம்''ன்னு பூலிப்பகடை கதையை முடித்தான்.

அதோட ''பங்கு வேணும்னா இப்பக் கேளு பாக்கலாம்''னு கேட்டான். அல்லாத் தன் குலை நடுங்கி, ''யப்பா வேண்டவே வேண்டாம்ப்பா. ஒஞ்சாமி ஏங்குடலை உருவி மாலை போட்டுரும்ப்பா''ன்னு சொல்லிட்டுப் போய்ட்டார். பூலிப்பகடை சந்தோஷமா வெள்ளைப் பட்டானைச் சேவிச்சுக்கிட்டு வந்தான்.

(மண் வாசம் வீசும்)

நோயற்று வாழட்டும் உலகு என்று உலக நன்மை கருதி

ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள்

நடத்தும்

மாபெரும்
ஸ்வயம்வர பார்வதி யாகம்

காலை 10.00 மணி முதல் பகல் 1.00 மணி வரை

ஹோமங்கள் நடைபெறும் இடம் :

ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்கிய பீடம், வாலாஜாபேட்டை

20.1.2008 சிறப்பு நோய் நிவாரண ஹோமம்

(பெயர், நட்சத்திரம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்). சங்கல்ப கட்டணம் ரூ. 250

26.1.2008 சந்தான கோபால யாகம்

(தம்பதி இருவரின் பெயர், நட்சத்திரம், முகவரி குறிப்பிட்டு எழுத வேண்டும்). சங்கல்ப கட்டணம் ரூ. 1000

27.1.2008 ஸ்வயம்வர பார்வதி யாகம்

(பெயர், ஜாதகம், புகைப்படம் ஆகிய விவரங்கள் அனுப்ப வேண்டும்) சங்கல்ப கட்டணம் ரூ. 500

ஹோமங்களுக்கும், பூஜைகளுக்கும் தேவையான திரவியங்கள், மளிகைப் பொருள்களும், மேலும் அன்னதானத்திற்கு ரூ. 2,000ன் மடங்கிலும் வழங்கும் நன்கொடையாளர்களுக்கு மேற்கண்ட ஹோமங்களில் சங்கல்பம் செய்து ஸ்வாமி புகைப்படமும், மூலிகை ரக்ஷையும் விசேஷ பிரசாதங்களும் அனுப்பப்படும். மேற்கண்ட ஹோமங்களில் கலந்து கொள்பவர்கள் வாலாஜாபேட்டையில் மாற்றத்தக்க வகையில் ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள் என்ற பெயரில் காசோலை / வரைவு காசோலை அனுப்பவும். மேலும் விவரங்களுக்கு :

ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள்

ஸ்தாபகர் - நிர்வாகி, **ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடம்**

கீழ்புதுப்பேட்டை, வாலாஜாபேட்டை, வேலூர் மாவட்டம் - 632 513

Website : www.walajadanvantri.org

E-mail : danvantriarokyapeedam@yahoo.co.in

Phone : 04172 - 230274, 230033, 094433 30203

குறிப்பு : விரைவில் தொடங்கப்பட உள்ள ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள் நடத்தும் நோயின்றி வாழும் கலை பயிற்சியில் பங்கு பெற்றுப் பயனடையுங்கள்

ஜாதகம் இருந்தால் அனுப்பி வைக்கவும்



காதல் கஃபே கீதங்கள்!

நளினி நாராயணன், தாம் இசையமைத்து வெளியாகி இருக் கும் 'காதல் கஃபே'க்குக் கிடைத்த வெற்றியில் மகிழ்ச்சியாக இருக்கிறார்.

பழம்பெரும் இசைக் கலைஞர் ஜி.என்.பி.யின் ஒன்றுவிட்ட சகோதரியின் மகள்தான் நளினி நாராயணன். கர்நாடக இசை மட்டுமல்ல, வெஸ்டர்ன் கிளாசிகல் (குரு- ரமேஷ் விநாயகம்), ஹிந்துஸ்தானி இசை (இப்போது குரு லட்சுமி ராகவன்) என்று எல்லாவற்றையும் ஒரு கை பார்த்திருக்கிறார்.

டெலி ஃபிலிம்களுக்கும், டாக்குமென்டரிகளுக்கும், விளம்பர ஜிங்கில்ஸுக்கும் இசையமைத்திருக்கும் நளினிக்கு இசையில் ஆர்வம் ஏற்பட அம்மாதான் காரணம். (அம்மா இசைத் துறையில் எம்.ஏ.). இப்போது மேற்கத்திய இசையில் இவரே பலரைத் தேர்வுகளுக்கு அனுப்பி வைக்க ஆரம்பித்துவிட்டார்! திருமண வரவேற்பு நிகழ்ச்சிகளில் இவர் கர்நாடக இசை, திரை இசை என்று கலவையாக வழங்குவது பலருக்கும் பிடித்திருக்கிறது.



✱ நளினி

நளினியின் இன்னொரு தகுதி எம்.பி.ஏ. கூடுதலாக, தேசிய அளவில் செஸ் சாம்பியன்.

நளினி இசையமைத்த ஆல்பம் 'காதல் கஃபே'யில் குரு ரமேஷ் விநாயகமே ஒரு பாடல் பாடியிருக்கிறார். உண்ணிமேனன், சுவர்ணலதா, கார்த்திக், மால்குடி சுபா மற்றும் ரஞ்சனி ஐயர்... எல்லோரும் பாடியிருக்கிறார்கள். பாடல்கள் : தமிழ் அமுதன்.



இசையில் பல்லாட், ராக், ப்ளூஸ், ஜாஸ் டெக்னோ என்று இந்திய இசையோடு பல மேற்கத்திய வகைகளையும் கலந்திருக்கிறார். ஒரு பையனும் பெண்ணும் முதன்முதலாகச் சந்தித்துக் காதல்வயப்பட்டுத் திருமணம் செய்துகொள்வது வரை, ஒரு கதை போலச் செல்கிறது. (கதைக்குக் கதையும் ஆச்சு; இசைக்கு இசையும் ஆச்சு!)

நளினி நாராயணனின் மாணவிகளில், எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதியின் மகள் பத்மா ஒருவர்.

''அமுதம் மியூசிக் வெளியிடற முதல் பாப் ஆல்பம் இது'' என்கிறார் நளினி நாராயணன்.

– சித்தார்த்

''**எ**ன்னாச்சு மனோஹரி, இப்படி முகத்தைப் பானை மாதிரி தூக்கி வெச்சுண்டிருக்கே..? கொஞ்சம் அசந்தா 'கடம்' கிட்டா வந்து, 'இந்த வாத்தியத்தை எங்கேண்ணா வாங்கினேள்?'னு கேட்பான் போலிருக்கே...'' மன்னார்குடி மஹாராஜன் சீண்டினான்.

''ஸ்டாப் யுவர் ஸில்லி ஜோக்ஸ்! உங்க டீஸிங்கெல்லாம் மேடைல வயலின் வித்வான்கிட்டே. வெச்சுக்கோங்க போதும். நான் உங்க மனைவி, ஞாபகமிருக்கட்டும்!''

''அஃப்கோர்ஸ்! இதுகூடத் தெரியாதா எனக்கு - மிஸஸ் மன்னார்குடி மஹாராஜன்...''

தேள் கொட்டிய மாதிரி எழுந்து நின்றாள் மனோஹரி. ''போதும் நிறுத்துங்கோ... அதான் பிரச்னையே! எங்கே போனாலும் 'மிஸஸ் மன்னார்குடி! மிஸஸ் மன்னார்குடி'தான்! எனக்குன்னு ஒரு அடையாளமே இல்லாம பண்ணி வெச்சிருக்கேள்.''

''நான் ஒண்ணும் பண்ணி வெக்கலையே மனோஹரி. பிரம்மாதான் உன்னை அபாரமான அடையாளத்தோட பண்ணி அனுப்பியிருக்கார் பூலோகத்துக்கு... நீயே பாரு...'' என்றபடி மனோஹரியின் சிக்ஸ்டி கே.ஜி. சரீரத்தைக் கைலாகு கொடுத்து எழுப்பி, நிலைக் கண்ணாடி முன் நிறுத்தினான் மஹாராஜன்...

''பாரு நீ வேற... நான் வேற... தெரியலை? வி ஆர் டோட்டலி டிஃபரண்ட்... நான் மா நிறம்; நீ நல்ல சிவப்பு. முப்பத்



சீதா ரவி

மிஸஸ் மன்னார்குடி!

தஞ்சு வயசுலயே என் தலை முடி வானப்பிரஸ்தம் போயிடுத்து; உன் கூந்தல் வனம் மாதிரி இருக்கு. என் மூக்கு தஞ்சாவூர் குடமிளகாய்; உன் மூக்கு பெங்களூர் செண்பகப் பூ! என் கண்ணு தூங்கியெழுந்த ஓணான் விழி; உன் கண்ணு தாமரையில மொய்க்கிற கரு வண்டு. என் கன்னம் ஓட்டாஞ்சில்லி; உன் கன்னம் குட்டிக்குட்டி பானி பூரி...''

சொல்லிக்கொண்டே வந்து, சிருங்கார மயக்கத்தில் மனோஹரியின் பானி பூரி கன்னத்தில் பச்சக்கென்று முத்தமிட்டுவிட்டான் மஹாராஜன்.

அவனை ஒரு நெம்பு நெம்பி அகற்றிவிட்டு, பானி பூரிக் கன்னத்தைப் பளிச்சென்று திருப்பி, தோளில் இடித்துக்கொண்டு அடிவயிற்றிலிருந்து ஒரு 'ஹூம்' வெளிப்படுத்தினாள் மனோஹரி.

''பார்த்துப் பார்த்தும்மா கண்ணு... பானி பூரி கன்னம் நொறுங்கிடப் போறது...''

ஊஹூம்! மனோஹரி மசியவில்லை... வழக்கமாகத் தன் அசட்டு ஜோக்குகளுக்கு இடி இடி என்று சிரிக்கும் சகதர்மிணி, அன்றைய தினம் மட்டும் சங்கீத விமர்சகர் சி.சி.கே. மாதிரி எதையுமே ரசிக்காமல் பனைமரத்துக் கழுகுப் பார்வை பார்த்தது மஹாராஜனைக் கவலையில் ஆழ்த்தியது; அவனும் சீரியஸ் ஆனான்.

''சரி, மனோஹரி... உனக்குன்னு ஒரு ஐடென்டிட்டி வேணும்; புரியுது. இனிமே உன்னை யாரு 'மிஸஸ் மன்னார்குடி'ன்னு கூப்பிட்டாலும் நீயே திருத்து. 'நோ, என்னை மனோஹரின்னுதான் கூப்பிடணும்'னு அடிச்சுச் சொல்லிடு. அந்தப் பேர் சொல்லிக் கூப்பிடலேன்னாலோ அறிமுகப் படுத்தலைன்னாலோ திரும்பிப் பார்க்காதே... என்னன்னு கேட்காதே..., பேசாதே... ஓ.கே... வா...?''

''ஹையோ! எவ்ளோ நல்ல ஐடியா?'' - கலைமாமணிக்கு ஆசைப்பட்டவனுக்கு கலாநிதி கிடைத்த மாதிரி சந்தோஷப் பட்டாள் மனோஹரி. 'இது எப்படி எனக்குத் தோணாமப் போச்சு...?' என்று மீண்ட காதலுடன் கணவனைப் பார்த்தாள்.

'ஏன்னா... பானி பூரி கன்னத்தைக் கொடுத்த பிரம்மா உனக்குப் பட்டாணிக் கடலை மூளையைக் கொடுத்துட்டான்' - சொல்ல நினைத்த வார்த்தைகளை அவசரமாக விழுங்கிக்கொண்டான் மன்னார்குடி மஹாராஜன்.

மறுநாள் அம்முலுவை பள்ளிக்கூட வேனில் ஏற்றும்போது மஹாராஜனின் மாஸ்டர் பிளானுக்குப் பிள்ளையார் சுழி போட்டாள் மனோஹரி.

''என்ன மிஸஸ் மன்னார்குடி! சௌக்கியமா? ஸார் ஊர்லதான் இருக்காரா?'' அம்முலுவுடைய வகுப்புப் பையன் ஹரி ராஜனுடைய தாத்தாதான் கேட்டார்.

''என்னை மிஸஸ் மன்னார்குடின்னு கூப்பிடாதீங்க!''

''ஏன்...?'' அதிர்ந்துபோன கிழவரின் மனோதர்மம், ஃபேமிலி கோர்ட் வரை போய்க் கவலையுடன் சுற்றியது. ''அம்முலு அப்பாக்கு...?''

''அம்முலு அப்பா மன்னார்குடி

மஹாராஜன். என் பேரு மனோஹரி. இனிமே என்னை அப்படித்தான் நீங்க கூப்பிடணும். எனக்குன்னு ஒரு தனி அடையாளம் இருக்காக்கும்...''

''ஓ?'' என்றார் கிழவர். புரியாத ராகத்தைக் கண்டுபிடிக்கத் தெரியாமல் திணறும் ரசிகராக!

''என்னவோம்மா! நீங்கள்ளாம் நன்னா இருக்கணும். நாங்க எங்க ஹரிராஜனுக்கே உங்க அகத்துக்காரர் பேரைத்தான் வெச்சிருக்கோம் தெரியுமோ..? அவரோட குரு ஹரிகேசநல்லூர் வைத்தா பேரிலேருந்து ஹரி; மஹாராஜனுக்குள்ளே இருக்கிற ராஜன், சேர்த்து ஹரிராஜன்... பய பாட்டு கிளாஸ்கூட போறான். ஸார்கிட்டே சொல்லுங்கோ. ஒரு நாள் அழைச்சுண்டு வந்து அவர் முன்னால பாட வெக்கணும்...''

சுருதி இறங்கிவிட்டது மனோஹரிக்கு.

காய்கறிக் கடையில் வெண்டை பிஞ்சுகளைப் பொறுக்கிக்கொண்டிருந்தாள் மனோஹரி. சங்கீத வாடையே வராத சூழலில் அவள் மனம் ஆனந்த கானம் செய்தது. வாய் தன்னையும் அறியாமல், அன்று காலை மஹாராஜன் சாதகம் செய்த புதுக் கீர்த்தனையை, முணு முணுக்க முன் வந்தபோது அடக்கி அமர்த்தினாள்.

''இன்னா! ஐருட்டம்மா! கொஞ்ச நாளா இந்தப் பக்கம் காணும்..?'' கடைக்காரர் சிகாமணி கீரைக் கட்டுகளுக்குத் தண்ணீர் தெளித்துக்கொண்டே கேட்டார்...

''எங்க சிகாமணி! பாதி நாள் ஐயா கச்சேரி கச்சேரின்னு ஊருக்குப் போயிடறாங்க... பாப்பாவுக்கும் எனக்கும் மட்டும் பஞ்சபட்ச பரமானந்தமா சமைக்க முடியும்..? இப்பதான் ஒரு வாரம் வீட்ல இருக்கறாப்பல அமைஞ்சிருக்கு... காய் வாங்க வந்தேன்..''

கடையில் இருந்த இரண்டு பெண்கள் இவள் பேசுவதைக் கேட்டு காலிஃப்ளவர் கணக்காக முகம் மலர்ந்தனர்.


''எக்ஸ்கியூஸ்மீ!'' என்றாள் ஒருத்தி, மனோஹரியை நெருங்கி...

''யெஸ்...?''

''நீங்க மிஸஸ் மன்னார்குடிதானே? ஸாரோட கச்சேரிகள்ல ஃபர்ஸ்ட் ரோல பார்த்திருக்கேன்...''

அடுத்தவளும் நெருங்கி வந்து சொன்னாள் : ''சிகாமணி கிட்டே நீங்க, ஸார் அடிக்கடி ஊருக்குப் போறதைப் பத்திச் சலிச்சுண்டே சொன்னதும் புரிஞ்சு போச்சு... அதுவரை இலேசா சந்தேகமா இருந்தது நீங்க மிஸஸ் மன்னார்குடி தானான்னு...''

''சந்தேகமே வேண்டாம்! நான் மிஸஸ் மன்னார்குடி இல்ல...; நான் மனோஹரி!''





''ஓஹோ! நீங்களும் பாடுவேளோ? கச்சேரி...?''

''சிகாமணி! இந்தாங்க லிஸ்ட்... காயை வீட்டுக்கு அனுப்பி வைங்க!'' மனோஹரி கோபமாக வெளியேறுகையில் அந்தப் பெண்கள் சிகாமணியிடம் கேட்டுக் கொண்டிருந்தனர் :

''ஏம்பா! டீ.வி.யில் 'பாட்டும் நானே' நிகழ்ச்சிலகூட வருவாரே மன்னார்குடி மஹாராஜன், அவர் ஸம்ஸாரம்தானே இந்தம்மா..?''

''ஆமாங்கம்மா.''

''என்ன இவ்வளவு ராங்கி பண்ணிக்கறா?''

ஞாயிற்றுக் கிழமை மாலை மதுரத்வனி சபாவில் மஹாராஜன் கச்சேரி.

ஃபிளாஸ்க்கையும் டவலையும் பையில் வைத்துக்கொடுத்த மனோஹரி சொன்னாள். ''நீங்க முன்வாடி போங்கோ. நான் கச்சேரி ஆரம்பிச்ச பிறகு வர்றேன். இல்லைன்னா திரும்பவும் அதே பல்லவியைக் கேக்கணும், 'மீட் மிஸஸ் மன்னார்குடி!', 'இவங்கதான் மன்னார்குடி மிஸஸ்.' உங்க நிழலாவே நான் இருந்து தேய்ஞ்சு, மாய்ஞ்சு போகணும்.''

'ஏதடா கிளம்பற நேரத்தில் வம்பு?' என்று தோன்றினாலும் மல்லுக்கு நிற்காமல், ''ஆட்டோவுக்குச் சில்லறை இருக்கா? சபா கேட் அட்டெண்டர்கிட்டே சொல்லி வெக்கறேன்'' என்று புறப்பட்டு விட்டான் மஹாராஜன்.

ஒரு மணி நேரம் கழித்தே கிளம்பினாள் மனோஹரி. சபா வாசலில் கொத்துக் கொத்தாக நிற்கக்கூடிய நிர்வாகிகளும், அரட்டை மன்னர்களும் அரங்குக்குள்போய் அமர்ந்த

பிறகே போகலாம். 'வாங்க மிஸஸ் மன்னார்குடி!' 'சௌக்கியமா மிஸஸ் மன்னார்குடி?' எல்லாவற்றையும் தவிர்க்க வேண்டும்.

சாலையிலேயே நிறுத்தி, ஆட்டோவுக்குப் பணம் தந்துவிட்டு அரங்கத்தின் படிகளில் ஏறி டிக்கெட் விற்பதற்குப் போட்டிருந்த மேஜையைக் கடக்க முயன்றபோது ஒரு குரல் தடுத்தது :

''எக்ஸ்யூஸ் மீ



மேடம்! டிக்கெட் வாங்கணும்.... ஃப்ரீ கச்சேரி இல்ல...''

ஆணி அடித்த மாதிரி நின்ற மனோஹரி அப்படியே திரும்பி கவுண்டரில் இருந்த பையனை எரிக்கிற மாதிரி பார்த்தான்...

''நான் யார் தெரியுமா..?''

பையன் அரண்டு போனான். புதுக புதுசாக வரும் பெண் அரசியல்வாதிகள் சபா வாசல்களில் சுற்றுவது நினைவு வர, ''ஸாரி மேடம், நீங்க மினிஸ்டர் வீட்டு அம்மான்னு தெரியாது!''

''நான்ஸென்ஸ்! மினிஸ்டருமில்லே; கினிஸ்டருமில்லே. நான் மிஸஸ் மன்னார்குடி! மிஸஸ் மன்னார்குடி மஹாராஜன், மைண்ட் யூ!''

அன்றிரவு மன்னார்குடி மஹாராஜனின் படுக்கையறை கைகேயியின் கோபாகிரகமாக தகித்தது. மனைவியின் பானி பூரி கன்னங்களைப் பிடித்து, தன்னை நோக்கித் திருப்ப முயன்று மீண்டும் மீண்டும் தோற்ற மஹாராஜன் சொன்னான்:

''என்னை நம்பு மனோஹரி! சபா கேட்ல செக்ரடரி நிற்க வெச்ச ஆள் அவசரமா எங்கேயோ போகணும்னு, அனுபவமில்லாத பையனை உட்கார வெச்சுட்டுப் போய்ட்டான்... இனிமே இப்படி நடக்காது... நிச்சயமா, சத்தியமா!''

மனோஹரி கெஞ்சித்தும் மசியாதது கண்டு மஹாராஜன் தொடர்ந்தான் - ''நான் மட்டும் புதுசா ஒரு ராகம் கண்டுபிடிச்சா அதுக்கு என்ன பேர் வெப்பேன் தெரியுமா..?''

''நீங்க மிஸஸ் மன்னார்குடிதானே? ஸாரோட கச்சேரிகள்ல ஃபர்ஸ்ட் ரோல பார்த்திருக்கேன்...''

- பானி பூரி கன்னங்களைத் தொட்டுத் திருப்ப, இந்த முறை அவனை ஏறிட்டாள் மனோஹரி...

''என்ன..?'' என்றாள் சுவாரஸ்யமில்லாதது போல.

''மஹாராஜ மனோஹரி! சரஸ்வதி மனோஹரி, கமலா மனோஹரி, ஈச மனோஹரி மாதிரி மஹாராஜ மனோஹரி!''

மனோஹரியின் பானி பூரி கன்னங்கள் இன்னும் கொஞ்சம் உப்ப, 'தனக்குப் புது ராகமே தோன்றாமல் இருக்க பலமாகப் பிரார்த்தித்துக்கொண்டான் மன்னார்குடி மஹாராஜன்.



வித்வான்களிடம் அத்தனை பயமா?

சமீப காலமாக சக்கைபோடு போட்டுக் கொண்டிருக்கும் பாடகர் குருசரண் - பியானோ கலைஞர் அனில் ஸ்ரீநிவாஸன் அணி, வெள்ளிவிழா காலமாக வெற்றி கண்டுள்ள 'சுருதி' சங்கீத - நாட்டிய மாத இதழின் ஆசிரியர் குழுவைச் சந்தித்தது...

“எல்லா பத்திரிகைகளிலும் கெஸ்ட் எடிட்டர்னு சில பிரபலங்களைக் கூப்பிட்டு இதழ் தயாரிக்கச் சொல்றாங்க. எங்களுக்கு எப்போ அது மாதிரி 'சுருதி'ல சான்ஸ் கொடுப்பீங்க?'' என்று எடுத்த எடுப்பிலே ஆசிரியர் குழுவுக்கு ஓர் அதிர்ச்சி குண்டைத் தூக்கிப் போட்டார் குருசரண்.

சுருதி எடிட்டர் ராம்நாராயண் அனுபவசாலி. குருசரணின் கூக்லியை சிக்ஸராக்கினார்!

''எழுதுங்க; இசை பத்தி எழுதுங்க. தாராளமா போடறோம்!'' என்றார். எக்ஸிக்யூடிவ் எடிட்டர் எஸ்.ஜானகி, அவர் பக்கத்திலேயே நின்றுகொண்டு பலமாக அதை ஆமோதித்தார். (வேற வழி?)

''உங்களுக்கு வர்ற கட்டுரைகளை எல்லாம் எப்படித் தேர்ந்தெடுக்கறீங்க?''

''நான், ஜானகி ரெண்டு பேரும் ஒவ்வொண்ணையும் படிச்சு, டிஸ்கஸ் பண்ணி, எதைப் போடறதுன்னு தீர்மானிக்கிறோம். சென்னையில் இருந்து மட்டுமில்லே, முக்கியமான ஊர்லயும் நிருபர்கள் இருக்காங்க. அவங்க எழுதி அனுப்புவாங்க'' என்றார் எடிட்டர் ராம்நாராயண்.

''ஒவ்வொரு இதழுக்கும் 'தீம்' ஏதாவது உண்டா?''- அனில்.

''அப்படீன்னு இல்லே. யாரேனும் வித்வானின் நூற்றாண்டாக இருந்தா அவரைப் பத்தி எழுதறோம். இன்னும் மதுரை மணி பத்தி நாங்க எழுதலே. இப்பத்தான் பாலக்காடு மணி ஐயர் பத்தி எழுதியிருக்கோம்!'' என்றார் ராம்.



* அனில் சீனிவாசன் - சிக்கில் குருசரண்

“நான் முன்னே 'சுருதி'ல ரசிச்சது சாரதி சார் ஜோக்ஸ்தான்'' என்றார் குருசரண். ''அதுவும் 'எந்தரோ மகானு பாவுலு'ன்னு காலியா இருக்கற ஹாலைப் பார்த்து, மேடைல பாடகர் பாடுவார். 'பேக் - ரோ'ன்னு கடைசி வரிசையிலேர்ந்து ஒரே

ஒரு ரசிகர் உரக்கப் பதில் சொல்வார்.''

''ஆமா... வி மிஸ் ஆர்ட்டிஸ்ட் சாரதி'' என்றார் ஜானகி.

''சரி, 'விஸ்பரிங் காலரி' (அதான் கிசுகிசு) மறுபடி வருமா? அதெல்லாம் உங்க கப்ஸாவா, இல்லே நிஜமா?'' என்று மறுபடியும் குருசரண் கொக்கிப் போட்டார். (சரியான வம்புக்காரர் போல!)

''நோ சான்ஸ்!'' என்றார் ராம்.

''ஆனா, அதுல வந்தது அத்தனையும் உண்மை. சில கிசுகிசு, சம்பந்தப்பட்டவங்க வாயாலேயே வந்தது. தவிர, கேள்விப்பட்டதை, வெச்சு எழுதறபோது, வெரிஃபை பண்ணித்தான் போட்டோம்!'' கிருஷ்ணகான சபா யக்ஞராமன் அதை ரொம்ப ரசிப்பார்''என்றார் ஜானகி.

''கச்சேரிகளை ஏன் நீங்க விமர்சனம் பண்றதில்லே? வித்வான்களிடம் அத்தனை பயமா?'' என்று ஒரு கிடுக்கிப்பிடி போட்டார் அனில்.

''பயமா? எங்களுக்கா? நல்லாச் சொன்னீங்க போங்க. எங்களோடது மாதப் பத்திரிகை. ஒரு குறிப்பிட்ட கச்சேரி, அன்னிக்கு நல்லா அமையலேன்னா, அது எழுதின ஒரு மாசத்துக்கு அப்படியே நிக்கும். சரி, நான் கேக்கறேன்: கச்சேரி ரிவ்யூவுக்கு எத்தனை முக்கியத்துவம் இருக்கு?'' என்று பந்தைத் திரும்ப வீசினார் ராம்.

''ரிவ்யூன்னா நிறைய பாயின்ட்ஸ் இருக்கும். குறைகளைப் புரிஞ்சுக்கலாம். புதுசா ஏதாவது டெவலப் பண்ணலாம். இம்ப்ருவ் பண்ணிக்கலாம்'' என்றார் அனில்.

ஜானகி குறுக்கிட்டு, ''நாங்க ரிவ்யூ பண்ணாட்டி என்ன? வித்வான்களோட முன்னேற்றம், அன்னிக்கு அப்படிப் பாடினாரே இன்னிக்கு எப்படிப் பாடறார்? எந்தப் பிரிவுல? எந்தளவு முன்னேறியிருக்கார்?ன்னு அலசறோம். நிறையப் பேர்ட்ட பேசி, 'இன்புட்ஸ்' சேர்த்து எழுதறோம்!'' என்றார்.

''உங்க டார்கெட் ரீடர் யாரு?''- அனில் சீனிவாசன் கேட்க,

''எங்களுக்கே தெரியாது!'' என்று ராம் சொல்ல, செம சிரிப்பு. ''நாங்க இளைய தலைமுறையை ரீச் பண்ணப் பார்க்கறோம். கச்சேரிக்குக் கொஞ்சம் பேர்தான் இளைஞர்கள் வர்றாங்க. அதை அதிகமாக்கணும்ங்கறது எங்கள் நோக்கம்.''

''நோக்கம்லாம் நல்லாத்தான் இருக்கு. அவங்களை எட்டிப் பிடிக்கணும்னா என்ன தேவைப்படுது?'' என்று மடக்கினார் அனில்.

''இளைய தலைமுறை கேள்வி கேக்கவே பயப்படுது. யார்கிட்ட கேக்கறதுன்னு தவிக்கறாங்க, தெரியுமா?''

''விடமாட்டீங்க போல இருக்கே! 'ஸ்பிக்மக்கே' பண்ணின மாதிரி நாங்களும் பண்ணலாம். புதுசா இளம் ரைட்டர்ஸை அறிமுகம் பண்ணலாம்னு பார்க்கறோம். அறுபது சதவிகிதம் இளைஞர்களுக்காகவே எழுதினா நல்லா இருக்கும். ஒரு யூத்ஃபுல் வியூ கிடைக்கும். முதல் இதழ் அட்டைல மாண்டலின் சீனிவாஸையும், டி.கே.பட்டம்மாளையும் போட்டோம். அதுமாதிரி மறுபடியும் கொண்டுவரணும்னு பார்க்கறோம்'' என்றார் ராம்நாராயண்.

''எழுதறவங்க பெரிய எக்ஸ்பர்ட்டா இருக்கணும்கிற அவசியம் இல்லே. விஷயம் கனமா இருக்கணும். எழுதறவருக்கு அதைப் புரிஞ்சுக்கற பக்குவமும், அதை ஒழுங்கா வெளிப்படுத்தணும்கிற தாகமும் இருக்கணும்!'' என்றார்

❋ சுருதி பத்திரிகையின் நிர்வாகக் குழுவுடன் சிக்கில் குரு சரண், அனில் சீனிவாசன்





சுருதி பத்திரிகையின் ஆசிரியர் குழு...

ஜானகி.

''குவாலிடி ஆஃப் ரைட்டிங் (எழுத்தின் தரம்) இன்னும் கொஞ்சம் அதிகமாகணும். எப்படி இம்ப்ரூவ் பண்ணலாம்னு யோசிக்கறோம். டைல்யூட் பண்ணாம தரத்தோட கொடுக்கணும்'' என்ற ராமிடம்,

''உங்க விஷ்-லிஸ்ட் என்ன?'' என்று கேட்டார் குருசரண்.

''ஸ்ட்ராங் ஃபோகஸ் ஆன் மியூசிக். இன்டராக்ஷன் இன் மியூசிக் அன்ட் டான்ஸ். தியேட்டர் பத்தி எழுத ஆரம்பிச்சருக்கோம். இல்லேன்னா இளைஞர்களை எட்ட முடியாது!''-ராம்.

''இந்த இருபத்தைந்து வருடத்தில் சுருதியோட சாதனை என்ன?''- கேட்டார் அனில்.

''ஜி.என்.பி. பாணி, லால்குடி பாணி, பரத நாட்டிய பாணிகள்னு நிறைய, ஆராய்ச்சிபூர்வமான கருத்தரங்கங்கள் நடத்தியிருக்கோம். ராகம் - தானம் - பல்லவி பாடறது குறைஞ்சிருந்த சமயத்துல, அதை மறுபடியும் கச்சேரிகள்ல பாடற அளவுக்குப் பல்லவி ஒர்க்ஷாப் நடத்தினோம். இளைய தலைமுறை, சீனியர்ஸ்கிட்ட நிறையக் கத்துக்கறதுக்கு இருக்குன்னு காமிச்சோம்... இந்துஸ்தானி இசை - நடனக் கலைஞர்கள் பத்தி, விவரமா தீபக் ராஜான்னு ஒருவர் பிரமாதமா எழுதறார். அவரை அறிமுகப்படுத்தியிருக்கோம்.''

''எல்லா மியூசிஷனும் நல்லா எழுதுவாங்கன்னு சொல்ல முடியாது!'' என்று (அப்படிப் போடு அரிவாளை என்பது போல) ஒரு போடு போட்டார் அனில்.

''அது அவசியமில்லே. ஒரிஜினலா இருக்கணும். வேண்டாததை நீக்கிட்டு, சாறை மட்டும் எடுத்துப்போம்!'' என்றார் ஜானகி.

''நீங்களே எழுதுங்களேன், 'என் குரு'ன்னு? ம்... எழுதுங்க!'' என்றார் எடிட்டர் ராம்நாராயண்.

''உங்களுக்கு எழுதணும்னா கடைசி தேதி என்ன?''- அனில்.

''25-ஆம் தேதி. ஆனா அனுப்பி வெச்ச உடனே, வருமா எப்போ வரும்னு போன் பண்ண ஆரம்பிச்சடாதீங்க, ஓகே?'' என்று பனானாவில் நீடில் ஏற்றினார் ராம்.

''ரெண்டு நிமிஷத்துல படிச்சுட்டுப் போட்டுடற 'டேப் லாய்ட்' லெவலுக்கு எதைப் பத்தியுமே படிக்கற நிலைமை இன்னிக்கு இருக்கு. நீங்க இசை - நடனம் பத்தி ஒரு பத்திரிகையே நடத்தறதுக்குப் பாராட்டு!'' என்றார் அனில் சீனிவாசன்.

''ஆமாம், நீங்க 'சுருதி'க்கு சந்தா கட்டிட்டீங்களா?'' என்று ராம் கேட்டதும், அவரவர் காரில் ஏறி ஒரே பாய்ச்சலில் மறைந்துவிட்டார்கள் சிக்கில் குருசரணும், அனில் சீனிவாசனும்!

– சாருகேசி

படங்கள்: ஸ்ரீஹரி

ஜெயமுண்டு;

'சேவாலயா' முரளிதரன்

> வெற்றி நம்மைத் தேடி வரும்போது பொறுப்பு ஏற்றுக்கொள்வது சுலபம்! ஆனால், தோல்வி ஏற்படும்போதும் பொறுப்பு ஏற்றுக்கொள்பவர்களே உண்மையான தலைவர்கள்.

காந்திஜி எடுத்த அஹிம்சை என்னும் புதிய ஆயுதம், கொஞ்சம் கொஞ்சமாய்ப் பலரின் கவனத்தை ஈர்க்க ஆரம்பித்த சமயம். நம்மை அடக்கி ஆள வந்தவரிடம் கைகட்டி, வாய்பொத்தி, சேவகம் செய்வதால் தானே, பல கோடி மக்களை ஒரு சிறிய வெள்ளைக்காரப் படை ஆட்சி செய்ய முடிகிறது? இந்த அரசாங்கத்துடன் ஒத்துழைக்கப் போவதில்லை என்ற முடிவை, இந்த தேச மக்கள் அனைவரும் எடுத்துவிட்டால் நம்மை ஆட்சி செய்ய அவர்களால் எப்படி முடியும்? எனவே 'ஒத்துழையாமை இயக்கம்' பிறந்தது. ஒரு சிறிய கிராமத்தில் ஆரம்பித்து, அந்த மாவட்டம் முழுவதிலும் பரவி, நாடு முழுவதும் பரவ தருணம் பார்த்துக் கொண்டு இருந்தது. ஆங்காங்கே மக்கள் கூடி, காந்திஜி காட்டிய வழியில் நின்று, ஆங்கிலேய அரசாங்கத்துடன் ஒத்துழைக்கப் போவதில்லை என்று சபதம் ஏற்றார்கள். போலீஸின் தடியடிகளுக்கும், கைதுக்கும் பயப்படாமல், நாடு முழுவதும் ஆங்காங்கே தேசபக்தி ஊர்வலங்கள் நடந்தன. தேசத்தின் முன்னணித் தலைவர்களெல்லாம் காந்தியத்தின் சக்தியைப் பார்த்து மெய்சிலிர்த்து நின்றார்கள். சுதந்திர 'ஜுரம்' நாடு முழுவதும் பரவ ஆரம்பித்தது.

சௌரி சௌரா என்னும் இடத்தில், கொஞ்சம் ஆவேசம் கூடிப் போனது. தடியடியில் ஈடுபட்ட போலீஸ்காரர்களைச் சுதேசிகள் எதிர்த்து நின்றனர். நடந்த களேபரத்தில், சில போலீஸ்காரர்கள் காவல் நிலையத்துக்குள்ளேயே உயிருடன் கொளுத்தப்பட்டனர். உடனே காந்திஜி, இந்த விபத்துக்குப் பொறுப்பேற்றுக்கொண்டு, அப்போதுதான் சூடு பிடிக்க ஆரம்பித்திருந்த ஒத்துழையாமை இயக்கத்தை வாபஸ் வாங்கிக்கொண்டார். காந்திஜியுடன் இருந்த தலைவர்கள் கூட இது தேவையில்லை என்று நினைத்தார்கள். நாடு முழுவதும் கொந்தளித்துப் போய் நடக்கிற ஒரு போராட்டத்தில், பெரும்பாலும் காந்திஜி சொன்ன அகிம்சை மார்க்கத்திலேயே நடந்தாலும், நாட்டின் ஒரு மூலையில், ஒரே ஒரு வன்முறைச் சம்பவம் நடந்தது என்பதற்காக, மொத்த போராட்டத்தையும் வாபஸ் பெறுவதா? எங்கேயோ யாரோ ஒரு சிலர் வன்முறையில் ஈடுபட்டால், அதற்குத் தலைவர் எப்படிப் பொறுப்பேற்க முடியும்?

'ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர் இன்று இந்தியா முழுவதும்

வையத் தலைமை கொள் - 7

பயமில்லை!



எழுந்துள்ள மக்கள் கிளர்ச்சியை வாபஸ் பெறுவதா?

ஆனால், காந்தியடிகளின் 'லாஜிக்'படி ஏதோ ஒரு மூலையில் நடந்த வன்முறைக்கும் தாம்தான் காரணம். 'நான் இன்னும் அகிம்சையைச் சரியாகப் போதிக்கவில்லை. என்மீதுதான் தவறு' என்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

ஒருமுறை காஞ்சி மாமுனிவரை ஒரு பக்தர் கேட்டார். ''இன்று நாட்டில் பல கொடுமைகள் நடக்கிறதே? என்ன காரணம்?'' என்று. அதற்கு மகா பெரியவர், ''நான்தான்; என் தவக் குறைவுதான் காரணம்'' என்றார்! பற்றற்ற துறவி இப்படி ஏன் பதில் சொல்ல வேண்டும்? உலக மக்கள் எல்லோர் பாவத்தையும் தாம் சுமந்து கொள்வதாக ஏகபிரான் சொல்வதும் இதே பொறுப்பு எடுத்துக் கொள்ளும் தன்மையால்தான்.

பாரதி, அரவிந்தர் மற்றும் பலர் பிரிட்டிஷ் போலீசிடம் இருந்து தப்பி, பாண்டியில் குடியேறியிருந்த காலம். பிரிட்டிஷ் - ஃபிரெஞ்சு அரசுகள் பேசி வைத்துக் கொண்டு, சுதேசிகளை ஃபிரெஞ்சு எல்லையில் இருந்து விரட்டிவிடப் போட்ட திட்டம்தான் 'அந்நியர் சட்டம்'. இந்தச் சட்டத்தின்படி ஓர் ஆண்டுக்குள் பாண்டியில் புதிதாக வந்து குடியேறியவர்கள் எல்லோரும், ஐந்து கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகளிடம் கையொப்பம் பெற்று, ஃபிரெஞ்சு போலீஸிடம் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டால்தான் தொடர்ந்து பாண்டியில் தங்க முடியும். இதன்படி செய்யவில்லை என்றால், அவர்கள் அனைவரும் பாண்டியை விட்டு வெளியேற நேரிடும். இந்நிலையில், அரவிந்தர் இல்லத்தில் பாரதியும் மற்ற சுதேசிகளும் என்ன செய்வது என்று ஆலோசனை நடத்தினார்கள். யார் கௌரவ மாஜிஸ்ட்ரேட்? எங்கே போய்த் தேடுவது? என்று யாருக்கும் புரியவில்லை. எல்லோர் முகமும் வாடியிருந்தது. பாரதி எழுந்தார். 'நாளை சந்திக்கலாம்'

என்று கூறிச் சென்றுவிட்டார். மறுநாள் காலை பாரதி, வ.ரா.வையும் அழைத்துக் கொண்டு சங்கர செட்டியார் வீட்டுக்குச் சென்றார். நிலைமையை விளக்கினார். 'இதொன்றும் பிரச்னை இல்லையே! நானே கௌரவ மாஜிஸ்ட்ரேட்தான். இன்னும் இரண்டு மணி நேரத்தில் எல்லோரிடமும் கையெழுத்து வாங்கி, பிரச்னையை முடிக்கிறேன்' என்றார். மேலும், 'ஒரு பாட்டுப் பாடுங்கள்' என்று பாரதியை அவர் கேட்டுக்கொள்ள கணீர் என்று வந்தது 'ஜெயமுண்டு பயமில்லை' பாடல். பாரதி இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணும் பொறுப்பைத் தாமே ஏற்றுக் கொண்டதால்தான் பாண்டியில் இருந்த சுதேசிகளின் துயரம் தீர்ந்தது.

நம் வாழ்வில் நாமும் பல சந்தர்ப்பங் களில் எடுக்கும் சரியான முடிவுதான் நம் வாழ்க்கைப் பாதையைத் தீர்மானிக் கிறது. நடக்கும் செயல்கள் எதற்கும் 'என் பெற்றோர்கள் பொறுப்பு', 'எனக்கு இப் போது நேரம் சரியில்லை', 'சனியும் குரு வும் என்னைப் பாடாய்ப் படுத்துகிறார் கள்' என்று கிடைத்ததன் மேல் எல்லாம் பழியைப் போட்டுக்கொண்டு திரிவது



கோழைத்தனம். நம் செயல்களுக்கும் அதன்மூலம் வருகின்ற எந்தவிதமான விளைவுகளுக்கும் நாம்தான் பொறுப்பு

நம் செயல்களுக்கும், அதன் மூலம் வருகிற எந்தவிதமான விளைவுகளுக்கும், நாம்தான் பொறுப்பு என்பதை ஒப்புக்கொண்டால் தைரியம் வரும்.

என்பதை ஒத்துக்கொண்டால், தைரியம் வரும். இதைத்தான் சுவாமி விவேகா னந்தர் 'உன் தலைவிதியை நீயே நிர் மாணித்துக் கொள்கிறாய்' என்கிறார்.

வெற்றி நம்மைத் தேடி வரும்போது பொறுப்பு ஏற்றுக்கொள்வது சுலபம்! தோல்வியின்போதுதான் பலர் மற்றவர் களைக் கைகாட்டி விட்டுவிடுகிறார்கள்! உண்மையான தலைவர்கள் தோல்வியின் போது பொறுப்பைத் தாங்களே ஏற்றுக் கொள்வார்கள். ஒரு கப்பல் மூழ்கும் தறுவாயில் இருந்தால், அதி லிருந்து கடைசியில்தான் தப்பிப் போகவேண்டும் என் பது கப்பல் கேப்டனுக்கு அளிக்கப்படும் பயிற்சி! அதுவரை அவரது பணி முடிவதில்லை.

உண்மையான தலை வர்கள் 'சுமையினுக்கு இளைத்திட' மாட்டார்கள். சுமையின் தீவிரத்தில், நடந்து கொள்ளும்விதம் தான் ஒரு தலைவனை அடையாளம் காட்டுகிறது. Ownership என்று பேசப்படும் தலைமைப் பண்பு இந்த 'சுமையினுக்கு இளைக்காத' செயல்பாட்டையே குறிக்கும்.

(சுவாசிப்போம்)

கோடி சூர்ய பிரகாசினியாக இருக்கக்கூடிய அம்பாளுக்கு பானு மண்டல மத்யஸ்தா என்கிற திருநாமம் பொருந்தி வருவதைப் பார்த்தோம். அந்த பானு மண்டல மத்யஸ்தாவே **பைரவி**யாகவும் இருக்கிறாள்.

பைரவர் என்பது சிவ மூர்த்தங்களுள் ஒன்று. அந்த பைரவருடைய தர்மபத்தினியாக இருக்கக் கூடியவள் அம்பாள் என்பதால் பைரவி என்கிற திருநாமம்.

பகமாலினியாக இருக்கக் கூடியவள்-பகம் என்பதை மாலையாக அணிந்துகொண்டிருப்பவள். பகம் என்பது அவளுடைய கல்யாண குணங்களைக் குறிக்கும்.

பத்மாஸனா - பத்மம் அல்லது தாமரையை ஆஸனமாகக் கொண்டு வீற்றிருப்பவள். அவளே தான் **பிரம்ம ரூபா** என்று முன்னால் சொல்லப்பட்டிருக்கிறது. தாமரை மலரில் வீற்றிருக்கக்கூடிய பிரம்மா அந்தப் பிரம்மாவின் ரூபமாக இருப்பவள் எவளோ, அவளும் தாமரை மலரிலேயே வீற்றிருக்கிறாள் என்றும் சொல்லலாம்.

தாமரை மலர் சிருஷ்டிக்கான அடையாளம். அம்மலரில் வீற்றுக்கொண்டு, உலகில் இருக்கக்கூடிய உயிர்களை, ஆன்மாக்களைப் படைக்கிறாள் அம்பாள் என்பது ஓர் அர்த்தம். நம் ஹ்ருதய கமலத்தில் வீற்றிருக்கிறாள் என்பதாகவும் ஓர் அர்த்தம் எடுத்துக்கொள்ளலாம்.

திருத்தங்கச்சி!

ஐச்வர்யம் தருபவள்


ரொம்ப ஆழமாக யோக சாஸ்திரத்துக்குள் நாம் போய்ப் பார்த்தோமானால், ஆதாரச் சக்கரங்களே ஒவ்வொன்றும் ஒவ்வொரு தாமரை வடிவில்தான் இருக்கின்றன. அவற்றில் இருக்கக்கூடிய இதழ்களின் எண்ணிக்கை வேறுபடும். கடைசியில் இருக்கக்கூடியது சஹஸ்ரார பத்மம் - ஆயிரம் தள தாமரை. பக்தனின் ஹ்ருதய கமலத்தில் இருக்கக்கூடியவள், யோக சாஸ்திர முறையிலே பக்தியும் யோகமும் சேரும்போது சஹஸ்ரார கமலத்தில் உயர்ந்து நின்று நடனமாடுகிறாள். ஆகவே, **பத்மாஸனா** என்கிற திருநாமம் பத்மத்தினாலான ஆஸனத்தைக் கொண்டவள் என்பதைக் குறிக்கும் - அது ஹ்ருதய கமலமாகவும் இருக்கலாம்; சஹஸ்ரார கமலமாகவும் இருக்கலாம்.

பத்மத்தில் இருக்கக்கூடிய ஐச்வர்ய தேவதையான மஹாலக்ஷ்மி தரக்கூடிய அனைத்துச் செல்வமும் சம்பாதித்துத் தரக் கூடியவள் அம்பாள். அந்தப் பரமேசுவரியே ஸ்ரீ லக்ஷ்மி ரூபமாகவும் இருக்கிறாள். சரஸ்வதி ரூபமாகவும் இருக்கிறாள். மஹாலக்ஷ்மியாக இருந்து ஐச்வர்யத்தைத் தருவதனாலும் அவள் பத்மாஸனா.

பகவதி என்பது இன்னொரு திருநாமம். பகவான் என்கிற மாதிரி பகவதி. எல்லாவற்றுக்கும் உயர்ந்தவளாக, நிறைந்த குணங்களைத் தன்னிடத்தே கொண்டவளாக, எந்தவித களங்கமும் அற்றவளாக இருப்பவள் பகவதி.

பத்மநாப சகோதரி - விஷ்ணுவாகிய பத்மனாபனுக்குச் சகோதரியாகத் தோன்றியவள். சாதாரணமாக, அம்பாளும் விஷ்ணுவும் ஒன்றே என்று சொல்லுகிற வழக்கம் உண்டு. இருவரும் ஒரே அம்சம். இதைத்தான் சுந்தர சுவாமிகள் கொஞ்சம் விவரமாகச் சொன்னார். அதைவிட விவரமாக அப்பய்ய தீக்ஷிதர் சொன்னார் :

கதா சேஷய்யன்


15
ஸ்ரீ பெரியநாயகி அம்மன்.
திங்களூர்.

பரபிரம்மமானது தர்மமாகவும் தர்மியாகவும் பிரிந்தது. தர்மம் என்பது இந்த உலகத்துடன் சேர்ந்த பொருள்களிலும், உலகத்துக்கு அப்பாற்பட்டு இருக்கக்கூடிய அண்ட - பிரம்மாண்டங்களிலும் எல்லா விதத்திலும் நன்மையை ஸ்தாபிதம் செய்யக்கூடிய தன்மை. மங்களத்தை வழங்கக் கூடிய தன்மை.

அப்படியானால் தர்மி...? யார் இந்த தர்மத்தைச் செய்கிறார்களோ அவர் தர்மி... நாமி-நாமா என்று சொல்லுகிற மாதிரி... நாமா என்பது பெயர்; நாமி பெயருக்கு உரிய நபர். தர்மம் என்பது மங்கள்தன்மை. தர்மி அதனை நிறுவும் அதிகாரி.


இந்த தர்மி இரண்டாகப் பிரிந்தது: ஒன்று ஆண் வடிவமாயிற்று; இன்னொன்று பெண் வடிவம் ஆயிற்று.

அப்படி ஆண் வடிவமான தர்மி, விஷ்ணு ஸ்வரூபம். பெண் வடிவமான தர்மி அம்பிகை ஸ்வரூபம் என்கிறார் அப்பய்ய தீக்ஷிதர்.

அப்படியானால் தர்மம் யார்? அது தான் அந்த பரமேசுவரன் - சிவகாமேசுவராக இருக்கக்கூடிய சிவம் மங்களமான சிவம்; மங்களத்தைத் தரக்கூடிய சிவம். அந்த சிவமும் விஷ்ணுவும் அம்பாளும் சேர்ந்து தர்மோ-தர்மி. இந்த மூன்றும் சேருகிற போதுதான் உலகத்தில் சிருஷ்டியும் ஸ்திதியும் ஸம்ஹாரமும் திரோபாவமும் அனுக்ரஹமும் எல்லாம் சம்பவிக்கும்.

'தர்ம தர்மி இதி ஜகத்பதி' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தர்மியாக ஒரு பக்கத்தில் ஆண் வடிவம் விஷ்ணு என்றால், இன்னொரு பக்கத்தில் பெண் வடிவமாக இருப்பவள் அம்பிகை பரமேசுவரி. அதனால் - இந்த இரண்டு பக்கத்து வடிவங்களும் ஒன்றாகத் தோன்றியதனால்தான் மஹாவிஷ்ணுவின் சகோதரி அம்பிகை என்று சொல்வது வழக்கம்.



இளைய சகோதரி!

'என்றும் மூவா முகுந்தர்க்கு இளையவளே' என்று அபிராமி பட்டர் ரொம்ப ரசித்து, ரசித்து, ரசித்து வார்த்தைகளைப் போட்டார். வார்த்தைகளை அவர் போட்டார் என்று சொல்வதைவிட, வார்த்தைகள் வந்து விழுந்தன. யோசித்துப் போட்டதல்ல; ரசித்துப் போடப்பட்ட வார்த்தைகள் அவை. 'இந்த இடத்தில் இந்த வார்த்தையைப் போட்டால் இன்னும் அழகாக இருக்கும்' என்று ரசித்துப் போட்ட வார்த்தைகள்.

'என்றும் மூவா முகுந்தர்க்கு இளையவளே' என்று ஏன் சொல்ல வேண்டும்?

முகுந்தர்க்குச் சகோதரி என்று சொன்னால், மூத்தவளா? இளையவளா? என்று தெரியாது. பத்மநாபசகோதரி என்கிறபோது மூத்தவளா இளையவளா என்று எப்படிக் கண்டுபிடிப்பது? அபிராமி பட்டர் சரியாகச் சொல்லிவிட்டார் - 'முகுந்தர்க்கு இளையவளே' என்று. மஹாவிஷ்ணுவின் தங்கை என்பதால்தான் செங்கண்மால் திருத்தங்கச்சியே என்று பாடினார்.

தங்கச்சியே என்று சொல்வதைவிட 'திருத்தங்கச்சியே!' என்கிறபோது ஒரு சின்ன அழகு இருக்கிறது.

திரு என்கிறபோது, எந்த விஷயத்தைச் சொல்கிறோமோ அதற்கு முன்னால் 'திரு'

என்று அடைமொழி தருகிறபோது, எந்த விஷயம் சொல்லப்படுகிறதோ அதைப் பற்றி இன்னும் கொஞ்சம் சிலாக்கியமாகச் சொல்லக்கூடியதுதான் திரு. ஆகவே, தங்கச்சியாக இருக்கும் தன்மைக்கு முன்னால் திரு என்கிற அடைமொழி தருகிறபோது, 'ரொம்பக் குட்டியாக இருக்கக்கூடிய தங்கச்சியே' என்று பொருள் கொள்ளலாம்.

அடுத்து, இன்னொன்றும் பண்ணுகிறார் அபிராமி பட்டர் - 'முகுந்தன் எப்படி?' என்றால் அந்த அண்ணாவுக்கே வயசு இன்னும் ஆகவில்லை! அப்படியானால் அவருடைய தங்கை எவ்வளவு சின்னவள் என்பதைப் புரிந்துகொள்ளலாம்!

மூவா முகுந்தர் என்று மட்டும் சொன்னால், ஏதோ அபிராமி பட்டர் பாடுகிற அன்றைக்கு மட்டும் மூப்பு எய்தாத முகுந்தர்; அதற்குப் பிறகு வயசாகிப் போய்விடும் என்று அர்த்தமாகி விடும்! ஆனால், அவரோ, 'என்றும் மூவா முகுந்தர்க்கு இளையவளே' என்கிறார்! - வயசே ஆகாமல் இருக்கிறாரே - அந்த முகுந்தருக்கு இளைய சகோதரியாக இருக்கக்கூடியவளே!

தங்கச்சியே என்று சொல்வதைவிட 'திருத்தங்கச்சியே!' என்கிறபோது ஒரு சின்ன அழகு இருக்கிறது.

வயதும் வரம்பும்

பகவானுக்கு வயது சொல்ல முடியாது. அது எந்தத் திருமேனியாக இருந்தாலும் சரி. ஆதியும் அந்தமும் இல்லாமல் இருக்கக்கூடிய ஜோதி. இதைத்தான் மாணிக்க வாசகர் ரொம்ப அழகாகப் பாடுகிறார்.

பகவானுக்கு என்ன வயது ஆகிறது?

ரொம்ப வயதாகியிருக்க வேண்டும். தெரியாது. பிறந்த தேதி தெரியாது. பிறப்புச் சான்றிதழெல்லாம் கிடையாது. ஆனால் யூகித்துச் சொன்னால், ரொம்ப வயதாகியிருக்க வேண்டும்.

சில சமயம் வீட்டிலே ரொம்ப வயதானவர்கள் இருப்பார்கள். ''பாட்டி, உனக்கு என்ன வயசு?'' என்று கேட்டால், தெரியாது என்பார்கள். அந்தக் காலத்தில் யார் பிறந்த தேதியைக் குறித்து வைத்தார்கள்? பள்ளிக்கூடத்துக்குப் போகும்போது சுவரில் ஒரு கோடு கிழித்து வைத்திருக்கும். அந்தக் கோடு உயரத்துக்குக் குறைவாக இருந்தால் குறிப்பிட்ட வயது. அதைவிட உயரமாக இருந்தால் அதனினும் கூடுதல் வயது. - இதுதான் கணிப்பாக இருந்தது. சில குழந்தைகள் இயற்கையிலேயே உயரமாக இருந்தால் கணிப்பு சரியாக இருக்காது.


பஸ் பயணத்துக்கு முன்பெல்லாம் அரை டிக்கெட் உண்டு. பஸ் படிக்கட்டின் அருகே ஒரு கோடு கிழித்திருக்கும். அதனருகே குழந்தைகளை நிறுத்திப் பார்த்து கோட்டைவிட உயரமாக இருந்தால் முழு டிக்கெட்; கம்மியாக இருந்தால் அரை டிக்கெட் வாங்க வேண்டும்! சில சமயம் குழந்தை ஆசைப்பட்டு எம்பி எம்பி நிற்கும். அரை டிக்கட் வாங்கலாம் என்று நினைக்கும் அம்மாவுக்குக் கோபம் கோபமாக வரும்! குழந்தை மனம் எப்போதுமே உயரம் என்று சொல்லிக் கொள்ளத்தானே விரும்பும்! குழந்தை எம்பி நின்றதா சரியாக நின்றதா என்றெல்லாம் கண்டக்டர் பார்க்க மாட்டார்! எத்தனை பேர் காத்திருப்பார்கள் டிக்கெட் வாங்க!

ஆகவே, வயது - இளமையாக இருப்பது, முதுமையாக இருப்பது என்பதையெல்லாம் அளவெடுக்க, கணக்கிட, மனிதர்களான நாம் ஏதேதோ முறைகள் எல்லாம் வைத்திருக்கிறோம். ஆனால், அவற்றையே நம்மால் சரியாகச் செயல்படுத்த முடிவதில்லை.

ஆனால் பகவானுக்கு வயதை எப்படிக் கணக்கிடுவது? எப்படிக் கண்டுபிடிப்பது?

(வளரும்)

வைத்தியக்காரன்!



'இனி சமாளிக்க முடியாது. அரைநாள் விடுமுறை போட்டால்தான் நாளை ஒழுங் காக வேலையைப் பார்க்க முடியும்' என்று தோன்றியது. சொல்லிக்கொண்டு வீட்டுக்கு வந்தேன். கதவில் பூட்டு தொங்கியது.

பக்கத்து போர்ஷன் வாசலில் நின்று குரல்கொடுத்தேன். சிறுமிக்கும் குமரிக்கும் இடைப்பட்ட காலத்தில் இருக்கும் கவிதா எட்டிப் பார்த்து, ''சாவியா? இருங்க'' என்று மின்னலாக மறைந்தாள். அதே வேகத்தில் திரும்பி வந்தாள்.

''இந்தாங்கண்ணா.''

''எங்க அம்மா எங்கே?''

''தாலுக்காபீஸ்க்கு...'' என்று சொல்லும் போதே, அவள் அம்மா வந்து அதட்ட லுடன் குறுக்கிட்டார்.

''ஏய் லூசு. தாலுக்கா ஆபீஸுக்கு எங்கேடி போய் இருக்காங்க? ஏதோ கடைக்குப் போறதா சொன்னாங்க. போடி உள்ளே'' என்றார்.

பொய் சொல்வது யாரென்பது எனக்குப் புரிந்தது. கதவைத் திறந்து உள்ளே வந் தேன். தலைவலி மாத்திரையைப் போட் டுக்கொண்டு படுத்தேன். 'அவ்வளவு தூரம் சொன்ன பிறகும் அம்மா தாலுக்கா ஆபீஸுக்குப் போய் இருக்கிறார்' என்பதை நினைக்கையில் கோபம் வந்தது.

பத்து, பதினைந்து நாட்களுக்கு முன்பு அந்தப் பேச்சை ஆரம்பித்தாள். ''இன்னிக்கு பானு அத்தையை மார்க்கெட்ல பார்த் தேன்டா. போஸ்ட்மேனைப் பார்க்கறதுக்கு போஸ்ட் ஆபீஸ் வந்தாளாம். அப்படியே மார்க்கெட்டுக்கு வந்திருக்கா. மாசா மாசம் கவர்மெண்ட் பணம் வாங்கறாளாம். வயசானவங்களுக்குப் பணம் தர்றாங் களாமே'' என்றாள்.

''அது எல்லாருக்கும் இல்லைம்மா. வசதியில்லாதவங்க, ஆதரவில்லாதவங் களுக்குத்தான்'' என்றேன்.

''நாம என்ன வசதியா மாளிகையிலயா இருக்கோம்? பசங்க இருந்தாலும், நான் தனியா இருக்கேன்னு சொன்னா தர்றாங் களாம். பானு அத்தை அப்படித் தான் வாங்கறா. தாலுக்கா ஆபீஸ்ல வேலை செய்யறவர், அவ வீட்டுக்குப் பக்கத்து வீடாம். அவர்தான் எல்லா ஏற்பாடும் செய்தாராம். நமக்கு அலைச்சலே கிடையாதாம். மனுவை எழுதறதுல இருந்து, ஆபீசர் கிட்டே கையெழுத்து வாங்கறது வரைக் கும் எல்லாத்தையும் அவரே பார்த்துக் கறாராம்.''

''அதெல்லாம் ஒண்ணும் வேணாம். நாம மாளிகையில வாழலைன்னாலும், மூணு வேளையும் நல்லா சாப்பிட்டுக் கிட்டு நிம்மதியாதான் இருக்கோம். இது கூட இல்லாதவங்களுக்குத்தான் அந்தப் பணம்.''

''இவன் ஒருத்தன்! பானு அத்தைக்கு மட்டும் என்ன குறை? ரெண்டுப் பசங் களும் வேலைக்குப் போறாங்க. ஊர்ல இருக்கிற வீட்டை வாடகைக்கு விட்டிருக் காங்க. மத்தவங்கன்னா ஆயிரம், ரெண்டா யிரம்னு செலவாகுமாம். இவர்கிட்டே ஐந்நூறு ரூபா கொடுத்துட்டா எல்லாத்தை

யும் முடிச்சுத் தர்றாராம்.''

''மத்தவங்க எப்படியோ போகட்டும்? நாம ஒழுங்கா இருப்போம். உனக்குப் பணம்தானே வேணும்? மாசா மாசம் நான் தர்றேன்'' என்றேன்.

''ஆமா, ஒண்ணாந்தேதி கொடுத்துட்டுப் பத்தாம் தேதி தலையைச் சொறிஞ்சிட்டே வந்து நிப்பே. ஒரு ஆத்திர, அவசரத்துக்கு அந்தப் பணம் உதவட்டுமே.''

''வேண்டாம்ன்னா விட்டுடேன்.''

''உன்கிட்டே போய் சொன்னேன் பாரு. நான் மாலதிகிட்டே பேசிக்கறேன்'' என்றபடி விலகினாள்.

மாலதி என் அக்கா. நான்கு தெருக்கள் தள்ளி இருக்கிறாள். அடுத்த ஓரிரு நாட்களில் அம்மா சுறுசுறுப்பானாள். பானு அத்தையை மீண்டும் சந்தித்து, எத்தனை நாட்களாகும்? எவ்வளவு செலவாகும்? என்னவெல்லாம் செய்ய வேண்டும்? போன்ற தகவல்களைத் திரட்டினாள்.



''ரேஷன் கார்டு ஜெராக்ஸ், போட்டோ கொடுக்கணுமாம்'' என்றாள்.

போட்டோ எடுக்கச் செல்கையில் காதுகளிலும், மூக்கிலும் அணிந்திருந்த குண்டுமணி தங்கத்தைக் கழற்றி வைத்துவிட்டுச் சென்றாள்.

''எதுக்கும்மா இந்தத் திருட்டுத்தனம்?''

''இதுல என்னடா திருட்டுத்தனத்தைக் கண்டுகிட்டே? நான் என்ன நூறு பவுன் நகையையா கழட்டி வெச்சுட்டுப் போறேன்?''

''ஆயிரம் ரூபாய் எடுத்தாலும் திருட்டுதான். ஒரு ரூபாய் எடுத்தாலும் திருட்டுதான்.''

''டேய்! மறுபடியும் மறுபடியும் திருட்டுன்னு சொன்னே, கண்டபடி பேசிடு

ஆரணி யுவராஜ்

இடி சிரிப்ஸ்...



"என்னங்க! தலைக்கு 'டை' அடிச்சுக்கிட்டு மீசை நரைக்குக் கறுப்பு மை பூசிக்கிட்டு எங்க கிளம்பிட்டீங்க?"

"எங்க கட்சியின் இளைஞரணி மாநாட்டுக்குத்தான்!"

– கு.அருணாசலம்

வேன். பெரிய காந்தியோட பேரன். போடா! பைத்தியக்காரா" என்று சீறினாள்.

மாலதியும் அம்மாவுடன் சேர்ந்து என்னைக் கிண்டலடித்தாள்.

விண்ணப்பத்தில் கையெழுத்துப் போடாமல் கைநாட்டு வைத்துத் தந்தாள் அம்மா. அப்பாவின் நினைவு வந்தது. எழுத, படிக்கத் தெரியாத அம்மாவுக்கு அப்பா தான் கற்றுக்கொடுத்தார். அறிவொளி இயக்கம் தீவிரமாக இருந்த சமயம் அது.

"அவனவன் ஊருக்கெல்லாம் கத்துக் கொடுத்துப் புண்ணியம் தேடிக்கறான். எனக்கு வேலையே சரியா இருக்கு. வெளியே போய்க் கத்துக்கொடுக்க முடியுமா? பொண்டாட்டி, உனக்காவது சொல்லித் தர்றேன்" என்றவர், தினமும் இரவில் சொல்லிக் கொடுப்பார்.

அம்மாவுக்கு அவ்வளவு சுலபத்தில் மூளைக்கு ஏறவில்லை. "அட போங்க! படிப்பும் வேணாம்; ஒண்ணும் வேணாம். பகலெல்லாம் வீட்டுவேலை செய்து அலுப்பா இருக்கு. நிம்மதியா தூங்க விடுவீங்களா?"

"அடிப்பாவி! சரி போகட்டும், உன் பேரையாவது எழுதக் கத்துக்க. கைநாட்டு வைக்காம, கையெழுத்துப் போடு."

"இப்ப சொன்னீங்களே இது சரி. அசிங்கமா கைநாட்டு வைக்க வேண்டியதா இருக்கு. சொல்லிக்கொடுங்க" என்றாள் அம்மா.

ஒரு துண்டுக் காகிதம் கிடைத்தாலும் விடமாட்டாள். அதில் தனது பெயரைப் போட்டுப் பார்ப்பாள். தினசரி காலண்டரைத் தினமும் கிழித்ததும் பின்னால் தனது கையெழுத்தைப் போட்டு, அந்தப் பக்கத்தை நிரப்பி அப்பாவிடமோ, என்னிடமோ காண்பிப்பாள்.

" 'த'வை நல்லா நீட்டி விடணும். இல்லேன்னா 'க' மாதிரி இருக்கும்" என ஒவ்வொரு நாளும் ஒரு திருத்தம் சொல்வோம். அன்று 'அசிங்கமாக' நினைத்த கைநாட்டை, இன்று பதிவு செய்தாள். பணம் செய்யும் ஜாலம்!

ஒரு வாரமாக பானு அத்தை வீட்டுக்கும் தாலுக்கா ஆபீஸுக்கும் அலைந்ததில் உடம்பு முடியாமல் படுத்துவிட்டாள். தலைசுற்றல், காய்ச்சல்!

"தேவையா இது? எதிர்ல இருக்கிற கடைக்கு நாலு முறை போய்ட்டு வந்தாலே படுத்துடுவே. ஓசியில பணம் கிடைக்குதுன்னு ஆசை" என்றேன்.

"சரிடா கத்தாதே! இனிமே போகலை" என்றாள்.

ஆனால், இன்றும் போய் இருக்கிறாள். நான்கு மணிக்குத்தான் வந்தாள். "என்னடா, சீக்கிரம் வந்துட்டே?"

"தலைவலி! நீ எங்கே போனே?"

"கடைக்குப் போய்ட்டு மாலதி வீட்டுக்குப்..."

"பொய் சொல்லாதே!"

"சரிடா! தாலுக்கா ஆபீஸுக்குதான் போனேன். நாலு முறை திரிஞ்சதாலதான் முடிஞ்சது. பெரிய ஆஃபீஸர் கையெழுத்துப் போட்டுட்டார்" என்றாள்.

அன்றிரவு சாப்பிட்டுக் கொண்டிருக்கை

யில் தொலைக்காட்சியில் செய்தி ஓடிக் கொண்டிருந்தது. மாலதியும் இருந்தாள். செய்தியில் ஒரு முன்னாள் அமைச்சரின் ஊழல் சாதனையைப் பட்டியலிட்டார்கள்.

''ஐந்நூறு கோடி கொள்ளையடிச்சிருக்கான் பாரு. நீ என்னடான்னா இந்தப் பணத்தை வாங்கறதுக்கே குதிக்கறே. இப்படியெல்லாம் இருந்தா உருப்பட முடியாதுடா'' என்றாள் மாலதி.

''சின்னதா செய்யறதால தப்பு சரியாயிடாது. நம்ம நாடு முன்னேறாமலே இருக்கறதுக்குக் காரணம் என்ன தெரியுமா? குடிசையில இருக்கறவன் இலவசமாவோ, திருட்டுத்தனமாவோ ஒரு ரூபாய் வருதுன்னு சம்மதிச்சு, வாங்கிக்கறான். அதைக் கொடுக்கறவன் பத்து ரூபாய் கொள்ளையடிக்கறான். அப்புறம்...''

''போதும் நிறுத்துடா. சினிமாவுல விஜயகாந்த் நீளமா டயலாக் பேசற மாதிரி சொல்ல ஆரம்பிச்சுட்டே பைத்தியக்காரா! என்று மாலதி சொல்ல, இருவரும் கேலியாகச் சிரித்தனர். ●

இடி சிரிப்ஸ்...



''ஒரு இன்ஸ்பெக்டரா இருக்கற நீங்க ரூ.500 லஞ்சம் வாங்கி இருக்கீங்களே?''

''யுவர் ஆனர், நான் அதிகார துஷ்பிரயோகம் பண்றது இல்லை. குடுக்கறதை வாங்கிக்குவேன்.''

– சென்னிமலை செந்தில்குமார்



* 'ஆறிலிருந்து அறுபது வரை' படத்தில் ரஜினியுடன் ஃபடாஃபட் ஜெயலட்சுமி...

நான்

ஸ்ரீ ராகவேந்திரா படத்தின் அனுபவம் விரைவில் 'ரிவர்ஸ்' ஆயிற்று! 'ஆறிலிருந்து அறுபது வரை' படத்தை இயக்க நான் தயாராக இருக்க, அதில் நடிக்க ரஜினி சுலபத்தில் அசைந்து கொடுக்கவில்லை. ஆனாலும், நான் தொடர்ந்து ரஜினியைத் தொடர்பு கொண்டு படம் சம்பந்தமாகப் பேசியபடியே இருந்தேன். உழைத்துக் கொட்டி வசதியாக வாழ வழி வகை செய்த அண்ணன் - அண்ணியை, கூடப் பிறந்தவர்கள் உதறித் தள்ளுவது போல் அமைக்கப்பட்டிருந்தது அப்படத்தின் கதை. அதை ரஜினியால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

''மறக்கக் கூடாத அளவுக்குத் தியாகம் செய்தவர்களை யாரும் அவ்வளவு சுலபமாக உதறித் தள்ளுவார்களா? என்னால் இந்தக் கதையை நம்ப முடியவில்லை'' என்றார்.

''உங்களுடைய அண்ணனை நீங்கள் தெய்வமாக மதிப்பது எவ்வளவு உண்மையோ, அத்தனை உண்மை உடன்பிறந்தோரை இந்த உலகில் பலர் மோசமாக மதிப்பதும்'' என்று எனக்குத் தெரிந்த சில உதாரணங்களைச் சொன்னேன். யதார்த்த வாழ்வின் முரண்பாடுகளையும் குடும்பத்தினருக்குள் நிலவும் குழப்பங்களையும் பல கட்டங்களாகத் தெளிவாக எடுத்துக்கூறிய பிறகும் அரைமனதுடன்தான் சம்மதித்தார். சட்டென்று அதனைப் பிடித்துக்கொண்டு, உடனடியாகப் படப்பிடிப்பை ஆரம்பித்துவிட்டோம். சற்றுத் தாமதமானாலும், எங்கே ரஜினி படத்தில் நடிக்காது போய் விடுவாரோ என்ற உதறல் எனக்கு இருந்து கொண்டே இருந்தது. படப்பிடிப்பு மிக வேகமாகவே நடைபெற்றது. ஐந்தாயிரம் அடி எடுத்து, அதைப் போட்டுக் காட்ட, படம் மிக நன்றாக வந்திருந்ததில் ரஜினி ஏக குஷியாகிவிட்டார். தமது கேரக்டர் மீது அதிக ஈடுபாடு கொண்டு நடிக்க ஆரம்பித்துவிட்டார்.

'ஆறிலிருந்து அறுபது

எஸ்.பி. முத்துராமன்




ருசிக்கும் சவால்!

வரை' பல விதங்களில் எனக்கு ஸ்பெஷல். தமிழக அரசின் சிறந்த இயக்குநருக்கான விருது இந்தப் படம் மூலம் எனக்குக் கிடைக்க, ரஜினிக்குச் சிறந்த நடிகர் விருது தந்து கௌரவப்படுத்தினார்கள். இசைஞானி இளையராஜா இந்தப் படத்துக்காகச் சிறந்த இசையை வழங்கியிருந்தார். 'கண் மணியே... காதல் என்பது கற்பனையோ' பாடல் இன்றைக்கும் காதல் நெஞ்சங் களின் ஃபேவரிட். இன்று, மெலோடி யஸ் கலெக்ஷன் வைத்திருப்பவர்கள் மத்தி

யில் அந்தப் பாடல் மிகப் பிரபலம். துடுக்குத்தனம் மிகுந்த ஃபடாஃபட் ஜெயலட்சுமி, இப்படத்தில் அண்டர் ப்ளே பண்ணி அற்புதமாக நடித்திருந்தார். அவர் ஏற்றிருந்த ஏழைக் குடும்பத் தலைவி பாத் திரம் மிகவும் பிரத்யேகமானது. சாதாரண ஏழை மனைவியின் அத்துனை வேதனை களையும் உள்வாங்கிக் கொண்டு நடித் தார்; இல்லை வாழ்ந்தார். ஒரு காட்சியில் குழந்தை பசியில் பாலுக்கு அழும். பவுடர் டின்னைத் திறந்து பார்த்தால், காலியாக இருக்கும். டப்பாவுக்குள் கொஞ் சம் தண்ணீர் ஊற்றிக் கரைத்து குழந்தைக்குக் கொடுப்பார். அதைக் குடிக்காமல் துப்பிவிட்

டுப் பசியில் துடிக்கும். இதனைத் தாங்கிக்கொள்ள முடியாத தாயாக ஃபடா ஃபட்டின் நடிப்பு எல்லோரையும் உருக வைத்துவிடும். படம் பார்த்த பெண் மணிகள் அனைவரும் கண்ணீர் விட்டு அழுதனர். ஃபடாஃபட்டின் குழந்தையைத் தம் குழந்தையாகவே பாவித்தனர். அப்படி அவர்களை ஒன்ற வைத்தது அவரின் நடிப்பு.

வாழ்வின் துயரங்களை அனுபவித்து விட்டு, இறுதியில் ரஜினி அதனைக் கதையாய் எழுதுவார். அவர் எழுத்து அங்கீகரிக்கப்பட்டு, விருது கிடைக்கும். அவரை மதிக்காமல் சென்ற சொந்தபந் தங்கள் ஓடோடி வருவர். கஷ்டப்படும் போது வராதவர்கள் வெற்றி பெற்றதும் வருவதை எண்ணி ரஜினி சிரிக்க, நாற் காலியில் உட்கார்ந்த நிலையி





ரசிகர் மன்ற ராஜாக்கள் 7

சென்னை கே.கே.நகரைச் சேர்ந்த சீதாராமனுக்கு ரஜினியைத் தவிர்த்துவிட்டு எதையும் பார்க்க முடியாது. ரஜினியின் முரட்டு ரசிகரான இவரை எல்லோரும் அழைப்பது ரஜினி ராமன் என்றுதான். சிறு வயது முதலே ரஜினியைத் தம்முடைய ஹீரோவாகக் கொண்டிருக்கும் இவர் தற்போது பணி புரிவது கால் சென்டரில். ரஜினியைப் போல ஸ்ரீ ராகவேந்திர பக்தரான சீதாராமன், ஒவ்வொரு ரஜினி பட ரிலீசுக்கும் ராகவேந்திரர் கோயிலுக்குச் சென்று படம் வெற்றி பெற அர்ச்சனை செய்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்.

"தலைவருக்கு அரசியலைவிட ஆன்மிகம்தான் பொருந்தி வருது. அதுக்காக ரஜினி அரசியலுக்கு லாயக்கில்லை என்று சொல்லவில்லை. ரஜினி எதில் கால் வைத்தாலும் அதில் அவர் கொடிதான் பறக்கும்'' என்று சொல்லும் சீதாராமன்-இல்லை-ரஜினி ராமன், தம் வீட்டில் 'ரஜினி பெயரில் ஓர் அமைப்பை நிறுவி, ஏழைக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து வருகிறார். ரஜினி தமது படங்களில் பேசிய வாழ்க்கைத் தத்துவங்களை கரும் பலகையில் ஒவ்வொரு நாளும் எழுதி வைப்பாராம். எப்பொழுதும் ரஜினியைப் போல சுறுசுறுப்பாக இருக்கும் இவருக்கு வயது 30. ஓய்வு நேரங்களில் ரஜினி மன்றங்களுக்குச் சென்று தன்னால் இயன்ற சேவைகளைச் செய்து வருகிறார். ரஜினி ரசிகர்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கு யோகா, மனவள பயிற்சி, தியானம் போன்றவற்றில் ஈடுபடுத்தி வருகிறார். 'இதெல்லாம் எதற்கு சார்?' என்றால், 'தலைவர் சொல்றார். நாங்க நடக்குறோம்' என்று பஞ்ச் டயலாக் அடிக்கிறார். உங்க வாழ்நாள் ஆசை என்னங்க என்றால், ஸ்கூல் ஆரம்பிக்கணும்; வசதியில்லாத ஏழைக் குழந்தைகளுக்குத்தான் பர்ஸ்ட் பிரிஃப்ரன்ஸ் என்கிறார் சீதாராமன் (எ) ரஜினி ராமன்.

லேயேஅவர் உயிர் பிரியும்.

இந்தப் படத்தைப் பார்த்த விநியோகஸ்தர்களுக்கு ஆச்சர்யம் கலந்த அதிர்ச்சி. ரஜினியின் பண்பட்ட நடிப்பைப் பாராட்டியவர்கள், அமைதி ரஜினியை ரசிகர்கள் ஏற்றுக்கொள்வார்களா? கமர்ஷியலாகப் படம் ஓடுமா? என்று பெரிதும் கவலைப் பட்டார்கள். எங்களுக்குக் கதைமீது அபார நம்பிக்கை இருந்ததால் எதைப் பற்றியும் நாங்கள் சிந்திக்கவில்லை. பெண்கள்தான் எங்கள் டார்கெட். படம் ரிலீஸான ஒரே வாரத்தில் நாங்கள் நினைத்தது பலித்தது. அலைஅலையான பெண்கள் தியேட்டரை நோக்கிப் படையெடுக்க, படம் செம ஹிட். ரஜினிக்கு மிக அதிக அளவில் பெண்கள் கூட்டம் வர ஆரம்பித்தது இந்தப் படத்துக்குப் பிறகுதான்.



தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரங்களான ரஜினி, கமல் இருவரையும் மாறி மாறி இயக்கி, அந்தப் படங்களை வெற்றிப் படங்களாக்கியது உண்மையிலேயே சவாலான விஷயம்தான். இந்தச் சவாலை ருசிப்பது எனக்கு ரொம்பப் பிடிக்கும். சவாலை நான் சமாளிக்கும் ரகசியம் என்ன தெரியுமா?

(பயணம் தொடரும்)

எழுத்து வடிவம் : **எஸ்.சந்திரமௌலி**

நீங்கள் கேட்டவை - தராசு



* கவலை கடிதம்!

• ஏ.மோகனசுவாமி, கொளத்தூர்

? வார்னேயின் சாதனையைச் சமன் செய்த தமிழ்நாட்டின் மாப்பிள்ளை முரளிதரனின் வெற்றி குறித்து...?

! வாழ்த்துவோம். அவர் மேலும் பல விக்கெட்டுகளை எதிர்காலத்தில் வீழ்த்துவார் என்பதால், முரளிதரனின் சாதனையை முறியடிப்பது எதிர்கால பந்து வீச்சாளர்களுக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கும். ஆனால் ஒன்று, வார்னேயின் பந்து வீச்சு என்றைக்குமே கேள்விக்குறியானதில்லை.

• என்.சண்முகம், சேலம் - 1

? குஜராத்தில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், 2002-ல் நடந்த கலவரங்கள் குறித்து விரிவான விசாரணை நடத்தப்படும் என்று காங்கிரஸின் தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளது பற்றி..?

! முழு உண்மைகள் வெளிப்படுமாறு, நடுநிலையான இழுத்தடிக்காத விசாரணை நல்லதே. அது நாட்டின் எதிர்கால அரசியலுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டுமே தவிர, பழிவாங்கும் படலமாக மாறி மேலும் மனக் கசப்புகளை வளர்த்துவிடக் கூடாது; அது சரி, முதலில் காங்கிரஸ் ஆட்சிக்கு வரவேண்டுமே!

• கே.என்.பாலகிருஷ்ணன், சென்னை-91

? வட சென்னையில் இரசாயன வாயு பரவியதால் மக்கள் மூச்சுத் திணறலுக்கு உள்ளாகியிருக்கிறார்களே?

! இரசாயனத் தொழிலகங்கள், மக்கள் நடமாட்டம் உள்ள பகுதிகளின் அருகே இயங்குவதற்கு அனுமதிக்கக் கூடாது. அத்தகைய தொழிலகங்களில் முன்னெச்சரிக்கை - பாதுகாப்பு அம்சங்கள் பலப்படுத்தப்பட வேண்டும். அரசு போதிய கவனம் செலுத்தாவிட்டால், இன்றைய மூச்சுத் திணறல் நாளைக்கு ஒரு



* சர்க்கரை நிழல்!

தமிழ்நாட்டு மாப்பிள்ளையின் சாதனை குறித்து..?

போபால் துயரமாகவும் மாறக் கூடும்.

● **வெ.ராம்குமார், வேலூர்**

? "என்றைக்குமே நான் வாரிசு அரசியலைக் கிண்டல் செய்தது கிடையாது" என்கிறாரே விஜயகாந்த்?

! தமது மனைவியையும் மைத்துனரையும் அரசியலுக்குக் கொண்டுவரும் ஆசை இருக்கிறதோ, என்னவோ!

● **செ.ஆசைத்தம்பி, தாரமங்கலம் ★**

? எதைச் சாதிப்பதற்காக தீவிரவாதம் வளர்கிறது?

! என்னென்னவோ அஜெண்டாக்கள் - அவை அமைப்புக்கு அமைப்பு மாறுபடுகின்றன... ஆனால், அந்தத் திட்டங்களுக்குப் பதில் அவை சாதிப்பது மக்களின் வெறுப்பைச் சம்பாதிப்பதுதான்.



★ சலசலத்த யோசனை

● **தளவாய் இரா.நாராயணசாமி, பெங்களூர் - 76**

? உள்ளூர்த் தமிழன் காலிகளாலும் ரௌடிகளாலும் தாக்கப்படுகிறான். அரசியல் தலைவர்கள் மீது வன்முறை நிகழ்கிறது; கொல்லப்படுகிறார்கள். இதையெல்லாம் கண்டுகொள்ளாமல், 'உலகத் தமிழன் தாக்கப்படுகிறான்' என்று மட்டும் முதல்வர் உரத்துக் குரல் கொடுக்கிறாரே?

! இங்கே சில அமைப்புகளைச் சேர்ந்த சில வன்முறையாளர்கள் தவறு செய்கிறார்கள் என்பது, அண்டை நாட்டில் தமிழ் இனத்தையே இரண்டாந்தரப் பிரஜைகளாக்கி, அரசாங்கமே அநீதி இழைப்பதை நியாயப்படுத்திவிடாது. முதல்வர், இங்கே நடப்பதைக் கண்டு கொள்ளாமல் இருக்கிறார் என்றும் எண்ணுவதற்கில்லை. மலேசியத் தமிழர் விஷயத்தில் அவர் பிரதமரின் கவனத்தை ஈர்த்தது சரியே.

● **டி.ஜெய்சிங், கோவை - 1**

? குஜராத் சட்டசபை தேர்தலில் மோடி வெற்றி பெறுவாரா என்று நூறு கோடி ரூபாய் பெட் கட்டப்பட்டுள்ளதாமே? அது தேர்தல் முடிவதற்குள் ஆயிரம் கோடியைத் தாண்டியிருக்கும் - என்கிறார்களே?

! அரசியல்வாதிகள் அரசியலை சூதாட்ட வியாபாரமாக்கினால், சூதாட்ட வியாபாரிகள் மட்டும் சும்மா இருப்பார்களா என்ன!

● **மு.ரா. பாலாஜி, கோலார்**

? 'கலைஞர் டீ.வி.க்கு 48 மணி நேரத்தில் மத்திய அரசிடம் அனுமதி பெறும் தமிழக முதல்வர், பாலாற்றின் குறுக்கே அணை கட்டுவதைத் தடுக்க முடியாதா?' என வைகோ குற்றம் சாட்டியிருக்கிறாரே?

! கலைஞர் டீ.வி. தொடங்கப்படுவதில் எதிர்ப்பு இல்லை; இருக்கவும் முடியாது. ஆனால், பாலாற்றின் குறுக்கே அணை என்பது இரு மாநில விவகாரம். ஆந்திரா பிடிவாதம் காட்டினால், பிரச்னை பெரிதாகி, தீர்வு காண்பதில் தாமதம் தவிர்க்க முடியாமல் போகும். தமிழகம் விழிப்புடன் இருந்து நிலைமை கைமீறிப்

❐ ரூ.100 பரிசு பெறுபவர் :
பொன்விழி, அன்னூர்

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
செ.ஆசைத்தம்பி, தாரமங்கலம்

போகாமல் காக்க வேண்டும்.

● இரா.சக்கரபாணி, மதுரை - 7

? மின் பற்றாக்குறைக்குத் தீர்வுகாண வழி வகுக்காமல், தமிழக அரசின் இலவசத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவது போன்ற கவர்ச்சித் திட்டங்களால் என்ன பயன்?

! இலவசத் தொலைக்காட்சிப் பெட்டிகளை விற்றுக் காசாக்க முடிகிறதே, அதுதான் நிகர பயன்!

● பொன்விழி, அன்னூர் ❒

? ஆறு ஆண்டுகளில் இரண்டு இலட்சம் விவசாயிகளின் தற்கொலை பற்றி...?

! சுதந்திரம் பெற்று அறுபது ஆண்டுகளாக நமது நாட்டின் பெரும்பான்மை சமூகத்தினரான விவசாயிகளை, எல்லா அரசுகளும் அலட்சியம் செய்தே வந்துள்ளன என்பதற்கான சான்று!

● எஸ்.ஆன்டனி தமிழரசன், மும்பை

? 'ஒன்பது ரூபாய் நோட்டு' படத்தை தமிழகம் முழுவதும் நூறு திரையரங்குகளில் ஒரு காட்சி இலவசமாகத் திரையிட்டார்களே - இது குறித்து?

! திரையிட முயன்றது உண்மைதான். ஆனால், பல இடங்களில் படம் பார்க்க வந்தவர்களிடம் பணம் வசூலிக்கப்பட்டிருக்கிறது. இதனால், அடிதடிகூட நடந்திருக்கிறது. நல்ல படத்துக்கான நல்ல யோசனையை விதைத்தவர்கள், அதனை நல்லவிதமாகச் செயல்படுத்தியிருக்கலாம்.

● என்.சண்முகம், திருவண்ணாமலை

? பெற்றோரைக் காப்பாற்றாத பிள்ளைகளுக்கு மூன்று மாத சிறைத் தண்டனை விதிக்க மசோதா நிறைவேற்றப்பட்டிருப்பது பற்றி...?

! சட்டம் இருக்கட்டும். தண்டனைக்குப் பயந்து தங்களது பிள்ளைகள் தங்களைக் காப்பாற்ற வேண்டாம் என்றுதான் பெரும்பாலான பெற்றோர்கள் நினைப்பர். இதை உணர்ந்து பிள்ளைகளிடம் மனமாற்றமும் ஏற்பட வேண்டும்.

● டி.கே.சுப்பிரமணியன், திருப்பரங்குன்றம்


? சிரஞ்சீவியும் கட்சி ஆரம்பிக்கப் போகிறாராமே?

! யார் வேண்டுமானாலும் கட்சி ஆரம்பிப்பதை யாராலும் தடுக்க முடியாது. ஆனால், கட்சியின் சிரஞ்சீவித்தன்மை என்பது மக்கள் ஆதரவுடன், சிறந்த கொள்கைகளையும் செயல்பாட்டையும் பொருத்தே அமையும்.

● க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

? 'மாதம் ஒரு போராட்டம் நடத்தவில்லை என்றால், எனக்குத் தலையே வெடித்துவிடும்போல் இருக்கிறது' என்று டாக்டர் ராமதாஸ் கூறுகிறாரே?


! அப்படி ஓர் உந்துதல் இருந்தால் டாக்டர் தம் மனநிலையைப் பரிசோதித்துக் கொள்வது நல்லது. இல்லாவிட்டால், தமிழ்நாட்டின் எதிர்காலமே வெடித்துவிடும். ●



* சாரமற்ற சாடல்




* அமர்க்கள ஆரம்பம்!



* நிர்ப்பந்த போராட்டம்!

* ஆசை அரும்பு!





கர்நாடக சங்கீத மேடையில், இன்று அரை டஜன் ஐச்வர்யாக்கள், ஒரு டஜன் காய்த்ரிகள், கால் டஜன் அம்ருதாக்கள், சங்கீதாக்கள், இன்னும் சாருலதாக்கள்... வண்ணமும் வனப்பும் விஷயதானமும் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

இத்தனைக்கும் அஸ்திவாரம் போட்டவர், தமது எண்பத்தெட்டாவது வயதில் நம்மிடையே இசைபட வாழ்ந்து, சங்கீதக் கலையைக் கற்பித்து மகிழ்ந்துகொண்டிருக்கும் கான சரஸ்வதி டி.கே.பட்டம்மாள். பட்டம்மாளின் அம்மா ராஜம்மாள், ஒரு கல்யாணத்து நலங்கில் பாடியதைக் கூட பொறுக்காமல் அதட்டி நிறுத்தச் செய்துவிட்டார் அவருடைய மாமனார் - அதாவது டி.கே.பி. யின் தாத்தா. 'குடும்பப் பெண்கள் சங்கீதம் பாடக்கூடாது - அதெல்லாம் தேவதாஸிகளின் பணி' என்று ஆதிக்கமும் அனர்த்தமும் மிக்க சட்ட திட்டங்கள் நிலவிய காலம். ஆனால், குழந்தை பட்டாவுக்குப் பாட்டு வெகு இயல்பாக வந்தது.



பட்டம்மாள் போட்ட பாதை!

பள்ளிக்கூட நாடகம், போட்டிகளில் பாடி, வெற்றி பெற, பட்டாவின் போட்டோ பேப்பரில் பிரசுரமானபோது, அப்பா தாமல் கிருஷ்ணசாமி அய்யர் வெலவெலத்துப் போனார்! 'பெண்ணுக்குக் கல்யாணம் நடக்குமா?'

பட்டம்மாளுக்குக் கல்யாணமும் ஆயிற்று; அவரது சங்கீதமும் தழைத்து வளர்ந்தது. ஈசுவர அய்யரைத் திருமணம் செய்துகொண்ட பிறகும் தாமல் கிருஷ்ண சாமி அய்யர் பட்டம்மாள் (டி.கே) என்றே அவரது பெயர் நீடித்தது.

ஆசிரியர் பக்கம்

அன்று பட்டம்மாள் போராடி மேடை ஏறியதனால்தான் இன்று சுதாக்களுக்கும் ஜெய்ஸ்ரீகளுக்கும் ஐச்வர்யாக்களுக்கும் பாதை சுலபமாகியிருக்கிறது.

சங்கீத உலகில் அழகும் அமைதியும் மிக்க ஒரு சகாப்தத்தைப் படைத்த டி.கே.பி. கடந்து வந்த பாதை என்ன? அதன் வளைவு - நெளிவுகள், ஏற்ற - இறக்கங்கள், சுக - துக்கங்கள் என்று ஆராய்ந்து அழகான நூல் ஒன்றை வெளியிட்டிருக்கிறது பாரதிய வித்யா பவன். அற்புதமான, அரிய புகைப்படங்கள் வரலாற்றுப் பதிவுகளாக இடம் பெற்றுள்ள இந்நூல், உயர்ரக தாளில் அச்சிடப்பட்டுக் கரம் கூப்பிச் சிரிக்கும் டி.கே.பி.யின் கனிந்த முகத்தை அட்டையில் தாங்கி, உடனே எடுத்துப் படிக்கத் தூண்டுகிறது.

நாற்பத்து நான்கு ஆண்டுகளாக டி.கே.பி. வீட்டில் சமையல் செய்து வரும் கிருஷ்ணமூர்த்தி, மலேஷியாவிலிருந்து வந்துள்ள சீன சிஷ்யர் சோங் சியூ சென் (இவருக்கு சாய் மதனா என்று பெயர் மாற்றம் செய்துள்ளார் டி.கே.பி...) என்று குட்டி சுவாரஸ்யங்கள்...


டி.கே.பி.யுடன் பாடுவதற்காக, தம்பி டி.கே.ஜெயராமனும் மருமகள் லலிதா சிவகுமாரும் எவ்வாறு தங்கள் சுருதியை மாற்றிக்கொண்டார்கள் என்பது போன்ற நீர்க்கமான விஷயங்கள்...


புத்தகத்தைச் சுவாரஸ்யமாகத் தொகுத்து எழுதியிருக்கிறார் நித்யா ராஜ். விஷயகனம் டி.கே.பி.யின் பல்லவி அளவுக்கு இருக்க, ஆங்கில மொழி நடைமட்டும் சர்வதேச தரத்தில் அமையாதது சற்றே நெருடல்.

(தொடர்புக்கு: பாரதிய வித்யா பவன், கோயமுத்தூர் கேந்திரா, 352, D.B. சாலை, ஆர்.எஸ்.புரம், கோவை - 641 002. bvb_cbe_kendra@yahoo.com)

Geethanjali

presents







Featured here are titles from our dance series with Sudharani Raghupathy and Srikala Bharath

Available on DVD and VCD

For more information log onto
www.musicandchants.com

Shop Online At :
www.superaudio.in

Geethanjali brings you a classic combination of traditional and unconventional with a range of audio and video CDs and DVDs. A forerunner in the audio industry, the products that Geethanjali offer reflect the evolving facet of the brand, that continually strives to offer you a wide selection of audio and video series.

Super Audio (Madras) Pvt. Ltd. Carex Centre, II Floor, 713, Anna Salai,
Chennai-600006. India. Phone: +91-44-42140068 Fax: +91-44-42140067
E-mail: kunal@musicandchants.com

fingerprintsweb.com

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57"Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to
post without prepayment under PMG s Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.